padippakam

# எங்கள் நாடு

பரிசு பெற்ற
இலங்கை வானொலி நாடகங்கள்



அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# எங்கள் நாடு

பரிசு பெற்ற
இலங்கை வானொலி நாடகங்கள்

அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளை.

கடைச்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

படிப்பகம்

padippakam

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | எங்கள் நாடு |
| துறை | :- | இலங்கை வானொலி நாடகங்கள் |
| முதலாம் பதிப்பு | :- | ஜூலை2002 |
| ஆசிரியர் | :- | அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை<br>B.A. (இலங்கை) Dip. in.Ed. |
| உரிமை | :- | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | :- | 99 + 20 = 119 |
| விலை | :- | ரூபா 75.00 |
| அச்சகம் | :- | ராம் பிறின்ரேஸ்<br>இலுப்பையடிச் சந்தி<br>51, பலாலி வீதி, யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| Title | : - | *Enkal Nadu* |
| Subject | :- | *A collection of Radio Plays* |
| First Edition | : - | *July 2002* |
| Author | : - | *Araliyoor N. Sundarampillai*<br>B.A. (Cey) Dip-in- Ed. |
| Pages | :- | *99 + 20 = 119* |
| Price | :- | *Rs. 75.00* |
| Copy Wright | : - | *Author* |
| Printers | : - | ***Ram Printers***<br>Iluppaiyadi Junction<br>51, Palaly Road, Jaffna. |

படிப்பகம்

padippakam

# சமர்ப்பணம்



காதலியாய், மனைவியாய்
என்னோடு நாற்பத்தி மூன்று
ஆண்டுகள் வாழ்ந்து, எனது காரியங்கள்
யாவிலும் கைகொடுத்து,
இன்று அமரராகிவிட்ட
ஓய்வு பெற்ற ஆங்கில
ஆசிரியை மங்கையர்க்கரசிக்கு
இந்த நூல் காணிக்கை.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# முன்னுரை

## இந்த நூல்.

இது எனது பதினான்காவது நூல். எட்டாவது நாடக நூல். ஐந்தாவது வானொலி நாடக நூல்.

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையினால் ஒலி பரப்பப்பட்ட ஏழு நாடகங்கள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் மூன்று, இலங்கை வானொலி பல முறை நடத்திய நாடகம் எழுதும் போட்டிகளில் பரிசு பெற்றவை. பரிசு பெற்ற வேறு நாடகங்களும் என்னிடம் இருந்தாலும், இலங்கை வானொலி ஒலிபரப்பிய நாடகங்களையே வெளியிடுகிறேன். இலங்கையர் எல்லோரும் பல முறை கேட்டு மகிழ்ந்த நாடகங்களாயிற்றே!

## வானொலி நாடகங்களும் ஏனைய இலக்கிய வகைகளும்.

பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற இலக்கிய ஆக்கங்களின் வாழ்வு, அந்தப் பத்திரிகைத் தாளின் வாழ்வுடன் முடிந்து விடும் – அவற்றைப் படைத்தவர்கள் அவற்றை எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்காவிடின். நூல்கள் கொஞ்சக் காலம் நிலைத்து நிற்கும். ஆனால் எந்த ஒரு நூலும் தமிழ் பேசும் மக்கள் எல்லோரையும் சென்றடையப் போவதில்லை. அந்தப் பெருமை இலங்கை வானொலி தமிழ்ச் சேவை நாடகங்களுக்கு மட்டுமே உரியது! தேசிய சேவை யாழ்ப்பாணத்தில் சரியாகக் கேட்காததுதான் பெரிய குறை.

தமிழில் சிறுகதைத் தொகுதிகள் ஆயிரக்கணக்கில் வெளிவந்து விட்டன. இப்பொழுதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இலங்கையில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து சென்று, வெளிநாடுகளில் குடியேறி வாழ்கின்றவர்களது சிறகதைகளைத் திரட்டியே, பல சிறுகதைத் தொகுதிகள் வெளியிடப்பட்டுவிட்டன. அவர்களில் சிலர், தனித் தனியாகவும் சிறுகதைத் தொகுதிகள் வெளியிடுகின்றனர். ஒவ்வொரு வாரமும் நூற்றுக் கணக்கான சிறுகதைகள் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் படுகின்றன.

சிறுகதையுடன் ஒப்பிடுகையில் நாவல்களின் எண்ணிக்கை குறைவு. இருந்தாலும் ஏராளம் நாவல்கள் வெளிவந்துவிட்டன. நாவலை எழுதுபவர்கள் குறைவு; வாசிப்பவர்கள் அதிகம்!

கவிதையின் கதையைச் சொல்ல வேண்டியதே இல்லை! மிக மலிவு. இன்று தமிழ் படித்தவர்கள் எல்லாரும் கவிதை எழுதுகின்றனர்! யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கவிதைத் தொகுதி வெளிவருகிறது! அவற்றை வாசிப்பவர்கள் எத்தனைபேர்...?



படிப்பகம்

மேடை நாடகங்கள் இன்று நடிக்கப்படுவதில்லை என்றே கூறலாம். ஆடியில் ஒன்றும் அமாவாசையில் ஒன்றுமாக, ஆர்வலர் சிலர் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர். ரீ.வி.யும், சினிமாவும் வீட்டிற்குள் நுழைந்து விட்ட இந்தக் காலத்தில், யார் மேடை நாடகம் பார்க்கப் போவார்கள்? நிதி சேகதிப்பதற்காக ரிக்கெற் விற்று நாடகம் நடத்தினாலும், அதை வாங்கியவர்கள் நாடகம் பார்க்கப் போவது குறைவு.

விடுதலைப் புலிகள் இயக்கமும், திருமறைக் கலாமன்றமும் மட்டும் நாடகங்களைத் தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றன.

சில பாடசாலைகளிலும் கல்வித் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஏதோ ஒரு வகை நாடகங்கள் நடிக்கப்பட்டு வருகின்றன.

எத்தனை நாடக நூல்கள் வெளிவந்திருக்கின்றன? விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இப்பொழுதெல்லாம் பலரது சிறுகதைகளைப் பொறுக்கி எடுத்து ஒரு சிறுகதைத் தொகுதியாக வெளியிடும் வழக்கம் வளர்ந்து வருகிறது. இலங்கையிலேயே அப்படிப் பல தொகுதிகள் வெளிவந்துவிட்டன. அந்த மாதிரி ஒரு நாடகத் தொகுதியைதானும் வெளியிட முடியுமா?

தமிழ் நாடகத்துறை வளர்ந்த லட்சணம் அது!

அதிலும் வானொலி நாடக நூல்கள், அருமையிலும் அருமை!

**எல்லோராலும் இலகுவில் எழுத முடியாதவை, நல்ல வானொலி நாடகங்கள்!**

## இலங்கை வானொலி நாடகங்கள்

இலங்கை வானொலி கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பி வருகின்றது. இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் இவ்வளவு தொகையான நாடகங்களை தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை!

இந்திய வானொலி நிலையங்கள், அந்த நாட்டு மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களை தயாரித்து ஒலிபரப்புகின்றன. இலங்கை வானொலி, இலங்கை வாழ் மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்புகின்றது. எனவே இலங்கையர் எல்லோரும் இலங்கை வானொலி நாடகங்களையே விரும்பிக் கேட்டு மகிழ்கின்றனர். அதனால் இலங்கை வானொலி தமிழ்ச் சேவை நாடகங்களே, இலங்கையர் எல்லோரும் விரும்புகின்ற இலக்கிய வடிவமாகத் திகழ்கின்றன!

இலங்கையில் தொலைக்காட்சி நாடகக் கலை வளரவே இல்லை. அது சிங்கள நிகழ்ச்சிகளுக்குள் அகப்பட்டு, நசுங்கித் திணறுகின்றது! இந்தியாவில் அந்தக் கலை நன்கு வளர்ந்துள்ளது. இங்குள்ள தொலைக்காட்சி நிறுவனங்களும், இந்திய தமிழ் நாடகங்களையே காசு கொடுத்து வாங்கி ஒளிபரப்புகின்றன. **எனவே இலங்கை மக்களது வாழ்க்கையைத் திறம்படச் சித்திரிப்பதும், இலங்கையில் நன்றாக வளர்ந்துள்ளதும் இலங்கை வானொலி நாடகமே!** அந்த நாடகங்களை இலங்கையர் எல்லோரும் விரும்பிக் கேட்பதில் வியப்பு ஒன்றும் இல்லை!

இலங்கை வானொலி நாடகங்கள் என்றால் சும்மாவா? எத்தனை கைகளுக்கூடாகச் செல்கின்றன அந்த நாடகங்கள்!

முதலில் தயாரிப்பாளர் நாடகப் பிரதியைத் தெரிவு செய்வார். அது பின்பு பணிப்பாளராலும், இயல்-நாடகக் கட்டுப்பாட்டாளராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அடுத்து நடிகநடிகையர் தெரிவு நடைபெறும். பின்பு, பின்னணி இசையமைப்பாளர், தொழில் நுட்பவியலாளர் ஆகியோரது உதவியையும் பெற்று, நாடகத் தயாரிப்பாளர், நாடகத்தைத் தயரிப்பார். பதிவு செய்யப்பட்ட நாடகம், தணிக்கையாளரது அங்கீகாரத்தையும் பெற்றபின்பே ஒலிபரப்பப்படும். எனது நாடகங்களை அங்கீகரித்த கரங்கள் எத்தனை! எத்தனை!

## எனது நாடகங்கள்.

நான் 1954ஆம் ஆண்டிலிருந்து நாடகங்களை எழுதி அரங்கேற்றி வந்திருக்கிறேன். 1980 ஆம் ஆண்டிலிருந்து வானொலி நாடகங்கள் எழுதுகிறேன். எனது முதல் நாடகத்திலிருந்தே இலங்கை வானொலி நாடகத்துறையினர் எனது நாடகங்களை வரவேற்று, தயாரித்து ஒலிபரப்பி வருகின்றனர். நான் எழுதி அனுப்பிய நாடகங்களில் கிட்டத்தட்ட தொண்ணூறு சத வீதமானவை ஒலிபரப்பப்பட்டிருக்கின்றன!

இப்பொழுது எங்கள் மத்தியில் பெருவழக்காக இருக்கின்ற வசன நடை நாடகங்கள் முன்பு தமிழில் இருக்கவில்லை. அவை ஆங்கில மொழி வாயிலாகத் தமிழுக்கு வந்த கலைச் செல்வங்கள். இன்னும் கூட, அவை தமிழில் சரியாக வளரவில்லை!

உலகின் தலைசிறந்த நாடகங்களை எல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வைத்திருக்கிறார்கள். ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற நான், உலகின் தலைசிறந்த நாடகாசிரியர்களது நாடகங்கள் பலவற்றையும் வாசித்தேன் – படித்தேன்! நான் அவர்கள் எல்லோரதும் வாரிசு. அந்த நாடகாசிரியர்கள் எல்லோரதும் செல்வாக்கும் என்னில் இருக்கிறது!

அதனால் தான் என்னால் 350 நாடகங்கள் எழுத முடிந்தது. என்னிடத்தில் இயல்பாகவே அமைந்துள்ள நாடக உணர்வையும், அறிவையும், எனது உலக நாடக அறிவு மேலும் மெருகுபடுத்தி வளர்த்துள்ளது. இதுவே எனது வெற்றியின் இரகசியம்!

என்னைப்போல, உலகின் தலைசிறந்த நாடகங்களை ஆங்கில மொழியில் கற்றவர்கள் பலர், இருக்கிறார்கள் இந்த நாட்டில். ஆனால் அவர்கள் அந்த அறிவைப் பயன்படுத்தி, நாடகங்கள் எழுதுவதில்லை. நான் எழுதுகிறேன். இதுவே அவர்களுக்கும் எனக்கும் இடையில் உள்ள வேறுபாடு.

இந்த இடத்தில் நான் ஒன்றைக் கூற வேண்டும். நான் எந்த ஒரு நாடகாசிரியரையாவது பின்பற்றியோ, தழுவியோ நாடகங்கள் எழுதுவதில்லை. நான் வாழுகின்ற சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கி, அதற்கு வேண்டிய நாடகங்களையே எழுகின்றேன்!

## எனது நாடக நூல்கள்.

நாடக நூல்கள் வெளியிடவேண்டிய தேவை எனக்கில்லை. எனது நாடகங்களைத்தான் இலங்கையர் எல்லோரும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்களே! வருங்காலத்திலும் கேட்பார்கள்! வருங்காலத்திலும் தமிழ் மக்கள் அவற்றை நடிக்கட்டும், படிக்கட்டும் என்பதற்காகவே எனது நாடகங்களை அச்சிட்டு வெளியிடுகிறேன்.

தமிழிலோ நாடகங்கள் இல்லை. தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்களுக்கு, ஆங்கில மொழியில் உள்ள தலைசிறந்த நாடகங்களைக் கற்கும் வாய்ப்பு அறவே கிடைக்கப்போவதில்லை! அப்படித் தட்டுத் தடுமாறிப் படித்தாலும், அவற்றில் பொதிந்து கிடக்கும் சொல் அழகுகள், புதுப்புது அர்த்தங்கள், உத்திகள் எல்லாவற்றையும் அவர்களால் சரிவர அறிந்து கொள்ள முடியாது! கடைசி, அந்த நாடகங்களைப் படித்தவர்கள் எழுதுகின்ற நாடகங்களையாவது வாசித்துப் பார்க்கட்டுமே!

**மாணவர்களை எனது நாடகங்களையும் கற்க அனுமதித்தால், என்ன நடக்கும்? அவர்களும் நல்ல நாடகங்கள் எழுதக் கற்றுக் கொள்வார்கள்!**

எனது எல்லா நாடகங்களையும் அச்சிட்டு வெளியிடவே நான் விரும்புகின்றேன். அதற்கு வாசகர்கள் தரும் ஊக்கம் போதியதாக இல்லை.

இலங்கையிலும் நல்ல தமிழ் நூல்கள் வெளிவரவேண்டும் என்று, ஆண்டு தோறும் வெளிவரும் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளித்து எழுததாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட சாகித்திய மண்டலக் குழு, எனது எந்த நூலுக்கும் பரிசளிக்காமல், நான் புதிய நூல்கள் வெளியிடாமல் தடுப்பதில், மிக்க கவனமாக இருந்திருக்கிறது!

இருந்தாலும் என்ன? இன்று இலங்கையில் எழுதுபவர்களில் அதிக நாடகங்களை எழுதியவனும், அதிக நாடக நூல்களை எழுதியவனும், அதிகமான நாடகங்களை (37) அச்சிட்டு வெளியிட்டவனும் நானே! நாடகம் எழுதும் போட்டிகளில் எனக்கு

ஐந்து முறை முதலாம் பரிசு கிடைத்திருக்கிறது. எனக்கு முன்பின் தெரியாதவர்கள், வெளிநாடுகளில் நடத்திய நாடகம் எழுதும் போட்டிகளில் எனக்கு மூன்று முறை முதலாம் பரிசு கிடைத்திருக்கிறது!

இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகள் பலவற்றிலும், பல வானொலி நிலையங்கள் எனது நாடகங்களை ஒலிபரப்புகின்றன!

இத்தனைக்கும் மேலாக எனக்கு என்ன பரிசு வேண்டும்? என்ன விருது வேண்டும்? அவற்றைப் பெற்றுத்தான் நான் என்ன செய்துவிடப் போகின்றேன்? அவற்றைப் பெற்றவர்களும் தான், அவற்றை வைத்து என்ன செய்து விட்டார்கள்?

எனது நூல் ஒன்றிற்குக் கிடைக்கக்கூடிய சாகித்திய மண்டலப் பரிசைவிட, இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் எனது நாடகம் ஒன்றையே நான் பெறுமதிமிக்க பரிசாகக் கருதுகிறேன்!

வானொலி நாடகத்தை எல்லோரும் கேட்பார்கள். ஒருவரது நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டால், அந்த நூலில் என்ன எழுதப்பட்டிருக்கிறது? அதற்கு ஏன் பரிசு வழங்கப்பட்டது? என்பதை பரிசை வழங்கியவரும், அதனைப் பெற்றவரும் தவிர்ந்த ஏனையோர் அறியும் வாய்ப்பு இல்லை. எல்லாமே மூடுமந்திரம்!

ஒருவருக்கு ஒரு பரிசோ விருதோ கிடைத்தால், வானொலி சிலவேளைகளில் அவரது பெயரை ஒரு முறை சொல்லும். பத்திரிகைகளும் சிலவேளை அவரது பெயரை ஒரு முறை பிரசுரிக்கும். ஒருவரது நாடகம் வானொலியில் ஒலிபரப்பப்பட்டால், காலையில் நிகழ்ச்சி முன்னோட்டத்தில் இருந்து அந்த எழுத்தாளரது பெயர், பலமுறை வானொலியில் சொல்லப்படும். நாடகம் ஒலிபரப்பப்படும் போது அவரது பெயர் இரண்டுமுறை சொல்லப்படும். நாடகம் மறு ஒலிபரப்புச் செய்யப்படும்பொழுதும், அவரது பெயர் சொல்லப்படும். நான் இறந்த பிறகும், எனது பெயரை இலங்கை வானொலி சொல்லும்!

பரிசுகளும் விருதுகளும் கிடைத்தால் என்ன, கிடைக்காவிட்டால் என்ன, ஒருவர் செய்தவைதான் அவரது சாதனைகள்! எனது சாதனைகளை எவரும் இலகுவில் முறியடிக்க முடியாது!

இனி நாடகங்களுக்கு வருகிறேன்:

## தனிக் குடித்தனம்

கூட்டுக் குடும்பம் அந்தக் காலத்தில் - அதுவும் இந்தியாவில் தான் பெருவழக்காக இருந்தது. தனிக் குடித்தனம்தான் இந்தக் காலத்தில் ஃபாஷன். எல்லோரும் குறிப்பாக இளசுகள், தனிக்குடித்தனம் போகவே விரும்புகின்றன. ஒருவரில் ஒருவர் முட்டாமல், ஒருவரை ஒருவர் சுரண்டாமல், ஒருவரோடொருவர் மனஸ்தாபப்படாமல், சுதந்திரமாக ஒற்றுமையாக வாழலாம் அல்லவா?

மகன் காதல் கல்யாணம் செய்கிறான். மாமிக்கும் மருமகளுக்கும் ஒத்துவரவில்லை. தனிக் குடித்தனம் போவோம் என்று கணவனிடம் சொல்கிறாள் மருமகள். மாமியார் தடுக்கிறாள். 'ஒன்றாக இருந்து குத்துப்படுவதிலும் தனிக்குடித்தனம் போய், அவரவர் கருமங்களை அவரவரே கவனித்துக் கொண்டு, சுதந்திரமாக அதே நேரத்தில் ஒற்றுமையாக வாழ்வது நல்லதல்லவா?' என்று கூறிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறார் குடும்பத் தலைவனான அப்பா.

இலங்கையில் சிங்களவரும், தமிழரும் ஒற்றை ஆட்சியின் கீழிருந்து சண்டை பிடிக்காமல், அவரவர் பிரதேசத்தில் தங்களைத் தாங்களே ஆண்டு கொண்டு, கூட்டாட்சியின் கீழ் ஒற்றுமையாக இருப்பது நல்லது என்ற கருத்தும் நாடகத்தில் குறிப்பாக உணர்த்தபட்டுள்ளது. ஒரு நேயர் இந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டி வானொலிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.'நேயர் கடிதம்' நிகழ்ச்சியில் பணிப்பாளர் அந்தக் கடிதத்தையும் வாசித்துக்காட்டினார். புரியாதவர்களுக்கும் அந்தக் கருத்து புரிந்திருக்கும்.

## எங்கள் நாடு

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடம்பெயர்வின் போது தனது குடும்பத்துடன் கொழும்புக்கு ஓடிய தர்மராசா, தனது பழைய நண்பன் குணசேனாவைச் சந்தித்த பொழுது, தனக்கு இருப்பதற்கு ஒரு வீடு எடுத்துத் தரும்படி கேட்கிறான். குணசேனாவின் மனைவி கருணாவதி தமிழருக்கு தங்கள் வீட்டில் இடம் கொடுக்கத் தயங்கினாலும், குணசேனா மனைவியின் மனதை மாற்றி, தருமராசா குடும்பத்திற்கு தனது வீட்டின் ஒரு பகுதியையே ஒதுக்கிக் கொடுக்கிறார். தமிழ்க் குடும்பம் பயத்துடனும், பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்தாலும், இரு குடும்பங்களுக்கு இடையிலும் நட்புறவு வளர்கிறது. இரு குடும்பங்களுமாகச் சேர்ந்து, ஒருமுறை கதிர்காமமும் போய் வருகின்றன.

இதற்கிடையில் தமிழ்க் குடும்பம் யாழ்ப்பாணம் திரும்பத் தீர்மானிக்கிறது. 'ஏன் யாழ்ப்பாணம் போவான்? இந்த நாடு எல்லாருக்கும் சொந்தம். எல்லாரும் எல்லா இடத்திலும் இருக்கலாம்!' என்கிறாள் கருணாவதி. 'சண்டை நடக்குது. இஞ்சை ஆக்களைப் பிடிக்கிறாங்கள். இருக்கப் பயமாய் இருக்கு. எங்களுடைய வீடு யாழ்ப்பாணத்திலைதானே இருக்கு? நாங்கள் போய் அதைத் திருத்தினாத்தானே அதிலை குடியிருக்கலாம்?' என்கிறது தமிழ்க் குடும்பம். 'இந்த நாடு சிங்களவருக்கு மட்டும்தான் சொந்தம் எண்டு நினைச்சுச் செயற்பட்டதாலைதான் சண்டை வந்தது'. என்கிறார் குணசேனா. 'எங்களுடைய பிரதேசத்தை ஆளுகின்ற அதிகாரத்தை எங்களிடமே தந்துட்டா, மத்திய ஆட்சியின் கீழை, நாங்கள்



படிப்பகம்

ஒற்றுமையாக வாழலாம்' என்கிறார் செல்வராணி. 'அதைத்தான் ஜனாதிபதி செய்யப் போகிறார்' என்கிறார் குணசேனா. 'அந்த நன்னாளைத்தான் நாங்கள் ஆவலுடன் எதிர்பாத்திருக்கிறம்' என்று சொல்லிவிட்டு, யாழ்ப்பாணம் புறப்படுகிறது தமிழ்க் குடும்பம்.

இந்த நாடகத்தில் இனப்பிரச்சினை வெளிப்படையாகவே பேசப்படுகிறது. குணசேனா குடும்பம் இந்த நாட்டில் வாழும் சிங்களவருக்குக் குறியீடு. தருமராசா குடும்பம் தமிழ் இனத்திற்குக் குறியீடு. சிங்களக் குடும்பம் கொழும்பில் சொந்த வீட்டில், பத்திரமாக இருக்கிறது. தமிழ்க் குடும்பம் இடம்பெயர்ந்து பல இன்னல்களை அனுபவித்து, அகதியாக நிற்கிறது. இது இலங்கைத் தமிழ் இனத்தின் இன்றைய நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது!

தமிழ் சிங்கள இனங்களுக்கிடையில் எவ்வளவோ ஒற்றுமைகள் இருக்கின்றன. அவ்வினங்கள் இந்த நாட்டில் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அமைதியாக, ஒற்றுமையாக வாழ்ந்தவை. இரு குடும்பங்களும், ஒரே வீட்டில் பல மாதங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தது, இரு இனங்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டுகின்றது. எங்களை நாங்களே ஆளுகின்ற மாநில சுயாட்சி தந்தால், கூட்டாட்சியின் கீழ், இந்த நாட்டில் இரு இனங்களும் ஒற்றுமையாக வாழலாம் என்று, தேசிய ஒருங்கிணைப்பிற்கான வழியையும் சொல்லியிருக்கிறேன்!

இந்த நாடகத்தை எழுதி முடித்ததும் மனைவியிடம் வாசிக்கக் கொடுத்தேன். அவர் வாசித்து விட்டு "இந்த நாடகத்துக்குப் பரிசு தராங்கள். இதை ஏன் வீணா அனுப்பூறியள்?" என்றார். "நான் பரிசுக்காக அனுப்பேல்லை. இந்த நாட்டிலை வாழூற இனங்களுக்கிடேலை, ஒற்றுமை ஏற்படுத்தத் தெரியாமல், எங்களிட்டை-எழுத்தாளரிட்டை வழி கேட்டுத்தானே இந்த நாடகப் போட்டியை நடத்துகினம்? நான் தேசிய ஒற்றுமை ஏற்படுத்த வழி சொல்லியிருக்கிறன்!" என்றேன். "பரிசு பெற இன்னும் ஒரு நாடகத்தை எழுதி அனுப்புங்கோ!" என்றார் மனைவி. நான் இந்த நாடகத்தை மட்டுமே அனுப்பினேன்.

என்ன ஆச்சரியம்! அதற்கே முதலாவது பரிசும் தந்தார்கள்! சும்மாவா? அரசாங்கச் செலவில் பிளேனில் ஏற்றிக் கொண்டு போய், பரிசும் தந்து, மீண்டும் பிளேனில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்!

## கல்வியா, கனடாக் கல்யாணமா?

ஆரம்பத்தில் தமிழ் பொடியன்களே வெளி நாடு சென்றனர் அகதிகளாக. அப்படிச் சென்ற பலர் அங்கே உழைத்து தங்கள் குடும்பங்களையும் வாழ வைத்தனர். அதன் பின்பு இளம் பெண்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர், அந்த இளைஞர்களைக் கல்யாணம் செய்வதற்காக. அதனால் பல கன்னியர் கரை சேர்ந்தனர்.

பெரும்பாலான பெண்கள் விரும்பியே வெளிநாடு சென்றனர். விரும்பம் இல்லாமல், நிர்ப்பந்தம் காரணமாக சென்ற பெண்களும் உண்டு. இந்த நாடகத்தின் கதாநாயகி பல்கலைக்கழம் சென்று படிக்க விரும்புகிறாள். ஆனால் இறுதியில் தனது கல்வி கற்கும் ஆசையைத் தியாகம் செய்து, நிர்ப்பந்தத்தில் வெளிநாடு செல்கிறாள் கல்யாணம் செய்ய.

பெண் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோரது கடமைதான். ஆனால் இது விடயத்தில் அவர்களது விரும்பத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும். மாறாக கலியாணத்தை அவர்கள் மீது திணிக்கக்கூடாது - என்ற பெண்ணியக் கருத்தும் சொல்லப்படுகிறது.

## பவள விழா நாடகப் பரிசு

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை, 2000ஆம் ஆண்டு தனது பவள விழாவைக் கொண்டாடியது. அப்பொழுது அவர்கள் நடத்திய பல போட்டிகளில், வானொலி நாடகம் எழுதும் போட்டியில் எனது 'தனிக் குடித்தனம்' நாடகத்திற்கு முதலாம் பரிசு வழங்கப்பட்டது. அந்த விழாவைப் பார்க்கவும், எனக்குரிய பரிசை நேரில் சென்று வாங்கவும், கொழும்புக்குச் செல்ல விரும்பினேன். அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் பிரயாணம் செய்வது மிகவும் சிரமமான காரியம். பல கெடு பிடிகள். பிரயாணம் செய்வதற்கான அனுமதியைப் பெறும் முயற்சியிலேயே களைத்துப்போன நான், கொழும்புக்குப் போகும் திட்டத்தையே கைவிட்டு விட்டேன். எனது ஆசை, அனுமதி பெற நான் எடுத்த முயற்சிகள், பட்ட கஷ்டங்கள், அடைந்த ஏமாற்றம், இறுதியில் பவள விழா மலரைப் பெற்ற மகிழ்ச்சி – எல்லாவற்றையும் வைத்து ஒரு நாடகமே எழுதிவிட்டேன்! அதை இலங்கை வானொலிக்கும் அனுப்பினேன். ஒலிபரப்பினார்கள். என்னால் எதையும் நாடகமாக்க முடியும் என்பதற்கு இந்த நாடகமே சான்று!

எனது வானொலி நாடக உலகச் சாதனைகளும் நாடகத்தில் சொல்லப்படுகின்றன. சிலர் இதைச் சுயபுராணம் என்று சொல்லக்கூடும். ஓம். சுயபுராணம் தான். நான் ஒன்றும் புளுகவில்லையே! நான் சாதித்தவற்றைத் தானே சொல்கிறேன்? தமிழ் மக்களுக்கு 350 நாடகங்கள் கொடுத்தேன். தமிழில் வளராத நாடகத் துறையை வளர்ப்பதற்கு, எட்டு நாடக நூல்களை எழுதி வெளியிட்டேன். இவை பற்றிப் பேசக்கூடாதா?

இலங்கையில் இலக்கியச் சேவை செய்தமைக்காக பலருக்கு விருதுகளும் பரிசில்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. யார் யாருக்கு எவை எவை, என்னென்ன காரணங்களுக்காக வழங்கப்பட்டன என்பது ஒருவருக்கும் தெரியாது! சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும்தான் வெளிச்சம். இலங்கை வானொலி கடந்த 23 ஆண்டுகளாக எனது

நாடகங்களைத் தொடர்ந்து தயாரித்து ஒலிபரப்பி வந்தமைக்கும், நாடகம் எழுதும் போட்டிகளில் எனது நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்கியமைக்குமான காரணங்களை, இந்த நாடகம் எடுத்துக் கூறுகின்றது. இதனால் தமிழ்ச் சேவையினரின் நேர்மையும் நிரூபிக்கப்பட்டுள்ளது!

ஈழப் போர் தொடங்கிய காலத்தில் இருந்து, தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்கா! யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் பிரயாணம் செய்தவர்கள் பட்ட இன்னல்கள் ஒரு தனி ரகம். அவற்றில் கொஞ்சத்தை – ஒரு நாடகத்தில் சேர்க்கக்கூடியவற்றை – இந்த நாடகத்தில தந்துள்ளேன். பட்ட துன்பங்களைத் தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது. ஆனால், கால ஓட்டத்தில் எல்லாமே மறபட்டுப் போய்விடும். இந்த நாடகம் அவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும்!

இந்த நாடகத்தில் எனது மனைவியையும் மகனையும் உயிருடன் உலவ விட்டிருக்கிறேன். அவர்களது குணாதிசயங்களுக்கு ஏற்பவே, அந்தப் பாத்திரங்களைப் படைத்துள்ளேன்.

மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்ட இறைவன், என்னை மட்டும் விட்டுவைத்திருக்கிறார். எனது பேரப்பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கவோ? அல்லது என்னைக் கொண்டு இன்னும் சில நாடகங்களும், நூல்களும் எழுதுவிக்கவோ?

ஒரு மகன் போனால் என்ன? 350 நாடகங்களும் 14 நூல்களும் எழுதியிருக்கிறேன். எல்லாம் எனது பிள்ளைகளே! அவற்றை எல்லாப் பிள்ளைகளும் பயன்படுத்துவார்கள்!

## கலைஞர் கௌரவிப்பு

இன்று எல்லோரும் பரதநாட்டியம் ஆடுகின்றனர். பெருந்தொகைப் பணம் செலவழித்து நடன அரங்கேற்றங்களும் செய்கின்றனர். ஆனால், பரத நாட்டியக் கலையை அழியவிடாது பாதுகாத்த பெருமை, தமிழ் நாட்டில் வாழ்ந்த சில தேவதாசி குல குடும்பங்களையே சாரும்! அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த சில பெண்கள், கோவில்களில் நடனம் ஆடி பரதக் கலையைப் பாதுகாத்தனர்.

தேவதாசி குடும்பங்களைச் சேர்ந்த சில பெண்கள் இலங்கைக்கு வந்து, யாழ்ப்பாணத்துக் கோவில்களிலும் நடனமாடினர். இங்கே கர்நாடக இசை நாடகங்களிலும் நடித்து, இலங்கையருக்கு நாடக விருந்தும் வழங்கினர். நான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில் அப்படிப்பட்ட நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்.

சில குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலே நிரந்தரமாகக் குடியேறி இருந்தும், கலைச்சேவை செய்தன.

நானும் ஆரம்பத்தில் பொடியன்களுக்கே சேலை சுற்றி, 'பெண்கள் என்று நம்புங்கள்' என்று சொல்லியே நாடகங்கள் நடத்தினேன். எவ்வளவு சிறந்த நடிகர்களானாலும் சரி, பெண் பாத்திரங்களை பெண்களே நடிப்பது போல ஆண்களால் நடிக்க முடியாது!

இதை உணர்ந்தே, நான் பின்பு இந்தத் தேவதாசி குடும்பங்களைச் சேர்ந்த பெண்களையே, எனது நாடகங்களிலும் நடிக்க வைத்தேன். அதன் காரணமாக வேண்டிய பெண் பாத்திரங்களை வைத்து நாடகம் எழுத முடிந்தது. அந்தப் பெண் பாத்திரங்களையும் சரியான முறையில் அமைக்க முடிந்தது. அவர்களது நடிப்பால் எனது நாடகங்கள் மேலும் சோபித்தன. நான் மேடை நாடகத் துறையில் தொடர்ந்து காலூன்றி நின்றதற்கு, அந்த நடனராணிகளும் ஒரு காரணம்.

மேடை நாடகத் துறையில் இருந்துதான், வானொலி நாடகத் துறைக்குத் தாவினேன்.

அப்படியாக எனது நாடகங்களில் நடித்து, அவற்றைச் சிறப்பித்த நடிகையர் பலர். உண்மையான கலைச் சேவை செய்த அந்த நடிகைகளை நினைவு கூர்வதற்காகவே – நன்றிக்கடன் செலுத்தும் முகமாகவே இந்த நாடகத்தை எழுதினேன். இதில் எனது மேடை நாடக உலகச் சாதனைகளும், தவிர்க்க முடியாமல் இடம் பெற்றுவிட்டன. அதுவும் நல்லதுக்குத்தான். ஒரு நாடகாசிரியன் – நாடகக் கலைஞன் எப்படி உருவாகிறான் என்பதை எல்லோரும் அறியட்டுமே!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடந்த 50 வருட கால, நாடக வரலாற்றை ஆராய்பவர்கள் எல்லோரும் இந்த நாடகத்தையும் வாசித்துப் பார்ப்பார்கள்!

அந்தப் பெண்கள் யாழ்ப்பாணத்துக் கோவில்களில் நடனமாடினர். அந்தக் காலத்தில் நடனம் என்றால் கோவில்களில் தான். எல்லோரும் குவிந்து நின்று 'சின்னமேளம் பார்த்தார்கள்'. தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் எல்லோரும் அந்த நடனராணிகளை மறந்து விட்டனர். அரசாங்கமும் அவர்களைக் கவனத்தில் கொள்ளவில்லை. கலைச் சேவை செய்தமைக்காக, யார் யாருக்கோ என்னென்னவோ விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஓய்வூதியங்கள் கூடக் கொடுக்கப்படுகின்றன. உண்மையான கலைச் சேவை செய்த அந்தக் கலாராணிகளுக்கு, ஒன்றும் வழங்கப்படவில்லை!

இந்தியாவில் தேவதாசி முறை சட்ட மூலம் ஒழிக்கப்பட்டு விட்டது. இலங்கையில் அது தானாகவே அழிந்து விட்டது. அந்தக் குடும்பங்கள் பல, வாழ்வதற்கு மிகவும் சிரமப்பட்டன. அவர்களில் இன்னும் பலர், இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றனர்.

இந்த அநீதியைச் சுட்டிக் காட்டுவதற்காகவும் தான் இந்த நாடகத்தை எழுதினேன்!

padippakam

சிலர், எனக்கு இத்தகைய விருதுகள் ஏதும் வழங்கப்படவில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டத்தான், இந்த நாடகத்தை எழுதினேன் என்று சொல்லக்கூடும். அவர்களுக்குச் சொல்கிறேன்: அந்தக் கலாபூஷணங்களைப் பெறுவதற்கு, நான் மனுப்பண்ணுவது கூட இல்லை!

நான் நாடகத்தில் கூறியிருப்பது போல, எனது பெயர், புனைப்பெயர், அடையாளம், கௌரவம், பட்டம் எல்லாமே எனது பெயருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் 'அராலியூர்' என்ற எனது ஊரின் பெயர் தான்! அராலியூர் என்ற சொல்லைக் கேட்டதுமே, நேயர்கள் ஓடோடிச் சென்று, வானொலிப் பெட்டி அருகே இருந்து, நாடகம் கேட்கிறார்களே! எனக்கு இதையும் விடப் பெரிய கௌரவம் வேறு எது?

அராலி, நான் பிறந்த இடம் என்பதற்காக, நான் அந்தப் பெயரை என்னுடைய பெயருடன் சேர்த்துக் கொள்ளவில்லை. அங்கே நண்பர்களுடன் சேர்ந்து, 'அராலி சரஸ்வதி நாடக மன்றம்' என்ற ஒரு மன்றத்தை அமைத்து, 1954ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து இருபது ஆண்டு காலம், மேடை நாடகங்கள் நடத்தினேன். அங்கே நாங்கள் கொடிகட்டிப் பறந்தோம்! ஊரவர்கள் வந்து எங்கள் நாடகங்களைப் பார்த்து, ஆதரவு அளித்தனர். அந்த நன்றியறிதல் காரணமாகவும், எங்களது சாதனையை நினைவுகூரவும் தான், எனது ஊரின் பெயரை எனது பெயருடன் சேர்த்துக் கொண்டேன்!

முதலில் இந்தக் கதையை ஒரு சிறுகதையாக எழுதி, கனடாவில் உள்ள 'தமிழர் செந்தாமரை' என்ற சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டிக்கு அனுப்பினேன். அவர்கள் அதற்கு ஆறுதல் பரிசு தந்தார்கள். அந்தச் சிறுகதை பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைத் தாளைக்கூட எனக்குப் பார்க்கக் கிடைக்கவில்லை. இங்கே இலங்கை வானொலி மூலம், இலங்கையர் எல்லோரும் இந்நாடகத்தைக் கேட்டு விட்டனர்! இன்னும் கேட்பார்கள்!

வாழ் நாள் முழுவதும் மேடை நாடகம், வானொலி நாடகம் என்று நாடகக் கலையின் பல துளைகளிலும் தீவிரமாக உழைத்த, என்போன்ற ஒருவரால்தான், இப்படியான ஒரு நாடகத்தை ஆதாரபூர்வமாக எழுத முடியும்!

## அடாத்து

1995ஆம் ஆண்டு நடந்த யாழ்ப்பாண இடம் பெயர்வின் போதும், அதைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு தொடக்கம் நடக்கின்ற மீள்குடியேற்றத்தின் போதும், வராதவர்களது பொருள் பண்டங்களை அபகரிப்பதற்காக, இங்கு நடந்த போட்டிகளுக்கும், அதனால் ஏற்பட்ட சண்டைகளுக்கும் ஒரு கணக்கே இல்லை! அந்தச் சூழ்நிலையைத்தான் அடாத்து நாடகம் படம் பிடிக்கின்றது.



படிப்பகம்

## ஆசைகளும் அவலங்களும்

ஆசைகள் வந்தால், அவலங்களும் வரும். 1996ஆம் ஆண்டிலிருந்து, யாழ் குடாநாடு ராணுவ நிர்வாகத்தின் கீழ் இருந்த காலத்து, மக்களது வாழ்க்கை முறை இங்கே சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது.

## எங்களது சமகால வாழக்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்கள்

இவை எல்லாமே எங்களது சமகால சமூகத்தைச் சித்திரிக்கின்ற நாடகங்கள். நாம் வாழுகின்ற இந்த வாழ்க்கையைப் படம் பிடிக்கின்ற நாடகங்களே சிறந்த நாடகங்கள்! அவற்றை எழுதுவதிலேயே ஒரு நாடகாசிரியனது திறமை வெளிப்படுகின்றது. அதற்கு மாதிரிகள் (Models) பயன்படா. சமூகத்தைக் கூர்ந்து நோக்கி, யதார்த்தமாக எழுத வேண்டும்!

அத்தகைய நாடகங்களே மக்களுக்குத் தேவை. அவற்றின் மூலம் சமகால வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டலாம். வாழக்கைக்கு வேண்டிய விளக்கங்களைக் கொடுக்கலாம். சமுதாயத்தின் குறை நிறைகளை எடுத்துக் கூறலாம். மக்களுக்கு வேண்டிய கருத்துக்கள், நீதிகளையும் புகட்டலாம். சமூக வரலாற்றையும் (Social History) பதிவு செய்து வைக்கலாம்!

தங்களது இன்றைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற நாடகங்களுடன், மக்கள் தங்களை அறியாமலே ஒன்றித்து நின்று, அவற்றைப் பார்த்து, கேட்டு மகிழ்கின்றனர்!

தமிழ் மாணவர்கள் தமிழ் கற்பதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டு, மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற தமிழ் பாட நூல்களில், எங்களது சமகால வாழ்க்கையை சித்திரிக்கின்ற ஒரு நாடகம் கூட இல்லை!

பல்கலைக்கழக மாணவர்களுக்குக்கூட அந்த வகை நாடகங்கள் கற்பிக்கப்படுவதில்லை. இரு சாராருக்குமே வானொலி நாடகம் கற்பிக்கப்படுவதில்லை, எனவே சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்கள், வானொலி நாடகங்கள் ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் எனது நாடகங்களைப் படித்து பயன் பெறலாம்!

இந்த நூலை எல்லோரும் வாங்கிப் படித்துப் பயனடையட்டும் என்றே, விலையை மிகவும் குறைத்துப் போட்டிருக்கிறேன்.

இது எனது பத்தாவது மணிவிழா மலருமாகும். மணிவிழா கொண்டாடுபவர்கள் பாராட்டுரைகளையும், புகழ் ஆரங்களையும், மலர் மாலைகளையும் மற்றவர்களைக் கொண்டு தங்களுக்குச் சூட்டுவிப்பார்கள். நான் மற்றவர்களுக்கு எனது மணி விழா மலர்களை வழங்குகிறேன்!

padippakam

# நன்றிகள்

நான் இவ்வளவு தொகையான நாடகங்களை எழுதியிருக்கிறேன் என்றால், அதற்குக் களம் அமைத்துத் தந்தது இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையே. முதற்கண் தமிழ்ச் சேவைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்!

இந்த நூலில் உள்ள ஏழு நாடகங்களில் 'கல்வியா? கனடாக கல்யாணமா?' 'எங்கள் நாடு','அடாத்து', 'ஆசைகளும் அவலங்களும்' ஆகிய நான்கும் V. N. **மதியழகன் அவர்கள்** தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக இருந்த காலத்தில் ஒலிபரப்பப் பட்டவை. அவருக்கு எனது நன்றிகள்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், தேசிய ஒருங்கிணைப்பு செயற்றிட்டப் பணியகமும் இணைந்து நடத்திய நாடகம் எழுதும் போட்டியிலேயே, எனது 'எங்கள் நாடு' நாடகத்திற்கு முதலாம் பரிசு வழங்கப்பட்டது. அந்த நாடகப் போட்டிக்கும், அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவிற்கும், பொறுப்பாக இருந்தவர் **அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்கள்** ஆகும். அவர் இந்த அரசாங்கத்திலும் அமைச்சராக இருக்கிறார். அவருக்கும் எனது நன்றிகள்!

'கல்வியா? கனடாக் கல்யாணமா?' நாடகத்தை வானொலிக்காகத் தயாரித்தவர், இப்பொழுது தமிழ்ச் சேவையின் இயல் – நாடகக் கட்டுப்பாட்டாளராக இருக்கும் **மயில்வாகனம் சர்வானந்தா அவர்கள்.** அவருக்கும் எனது நன்றிகள்!

ஏனைய மூன்று நாடகங்களும் தமிழ்ச் சேயையின் **தற்போதைய பணிப்பாளரான திருமதி. அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களின்** காலத்தில் ஒலிபரப்பப்பட்டவை! அவருக்கும் எமது நன்றிகள்.

மிகுந்த உற்சாகத்துடன் பணியாற்றும் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள், குறுகிய காலத்தில் இரண்டு பெரிய விழாக்களைக் கொண்டாடினார். ஒன்று தமிழ்ச் சேவையின் **பவள விழா.** இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை, பல்வேறு துறைகளிலும் தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவைகளை அந்த விழா எடுத்துக் கூறியது!

மற்றையது **மெல்லிசை நாடகவிழா.** நான் அறிந்த வரையில், தமிழ்ச் சேவை இப்படியான ஒரு நாடக விழாவை இதுவரை நடத்தவில்லை. தமிழ்ச் சேவை, தமிழ் நாடகத்துறை வளர்ச்சிக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய சேவையை அந்த விழா எடுத்துக் கூறியது!

என்னிடமிருந்து 'பிறந்த மண்' என்ற சமூக நாடகத்தை வேண்டிப் பெற்று, அந்த விழாவில் அரங்கேற்றினர். அது எனக்கு அளிக்கப்பட்ட கௌரவமே! அந்த அரங்கேற்றத்தின் மூலம் தமிழ்ச் சேவையினர், தாங்கள் வானொலி நாடகத்தை மட்டுமல்ல, மேடை நாடகங்களையும் திறம்படத் தயாரித்து அளிக்க வல்லவர்கள் என்பதை நிருபித்தனர்!

கொழும்பு வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகத்தையும், விழாவையும், இலங்கை வானொலி இலங்கை முழுவதும் அஞ்சல் செய்தது.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை 2000 ஆம் ஆண்டு தனது பவள விழாவைக் கொண்டாடியது. அப்பொழுது அது நடத்திய பல போட்டிகளில், வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற நாடகம்.

# நாடகம்
# தனிக் குடித்தனம்

**பாத்திரங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **வானொலி நாடகத்தில் பங்கேற்றோர்** |
| 1. சரவணபவானந்தன் | ~ | அப்பா | ~ | கே.எம்.சித்தானந்தன் |
| 2. கனகாம்பிகை | ~ | அம்மா | ~ | ஏ.எம்.சி.ஜெயசோதி |
| 3. சிறீதரன் | ~ | மகன் | ~ | ஜெயரஞ்சன் யோகராஜன் |
| 4. லலிதா | ~ | சிறீதரனின் மனைவி | ~ | கமலினி செல்வராஜன் |

**காட்சி - 1**

***இடம் : யாழ்ப்பாணம். ஒரு பொது இடம்.***

சிறீதரன் :- லலிதா!

லலிதா :- என்ன சிறீதரன்?

சிறீதரன் :- எங்களுடைய காதல் பற்றி நான் இன்னும் வீட்டிலை சொல்லேல்லை.

லலிதா :- ஏன் இவ்வளவு காலமும் சொல்லாமல் இருந்தியள்?

சிறீதரன் :- சொன்னால் சண்டை வரும் எண்டு பயந்து இருந்திட்டன். *(அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான்)*

லலிதா :- துள்ளித்துள்ளி காதலிச்சிட்டு, இப்ப வீட்டிலை சொல்லப் பயப்பிடுறார்! சிறீதரன், நீங்கள் தானே வலிய வந்து என்னை காதலிச்சியள்?

சிறீதரன் :- ஓம் லலிதா. நான் தான் காதலிச்சன். ஏன் வீண் சண்டையை எண்டு, இவ்வளவு காலமும் சொல்லாமல் இருந்தன். இனிச் சொல்லுவம்.

லலிதா :- சிறீ என்ன பிரச்சினை? சாதி சமய வேறுபாடிலை. ஓரே ஆக்கள்.

சிறீதர :- அப்பா எல்லாத்துக்கும் சம்மதிப்பர். அம்மாவை, திருப்திப்படுத்துறதுதான் கஷ்டம்.

லலிதா :- ஏன், என்ன சொல்லுறா?



படிப்பகம்

padippakam



சிறீதர :- அவ எனக்கு பெரிய சீதனத்தோடை கலியாணம் பேசிக்கொண்டு இருக்கிறா.

லலிதா:- சிறீ, அதைச் செய்யப்போறியளா?

சிறீதர :- என்ன லலிதா இப்பிடிப் பேசூறாய்? என்னை உனக்கு தெரியாதா?

லலிதா:- சிறீதரன், நான் அப்பவே சொன்னனான் என்னிட்டை அதிக சீதணம் இல்லை, ஆக ஒரு வீடு வளவு தான் இருக்கு எண்டு. அதுகும் கிராமத்திலை இருக்கு. இப்ப அங்கை போகேலாது. நீங்கள் சம்மதிச்சுத்தானே காதலிச்சனீங்கள்?

சிறீதர :- லலிதா, நான் இப்பவும் மாறில்லை. அம்மாவுக்கு ஏதோ சமாதானம் சொல்லிச் சம்மதிக்க வைக்கிறன்!

லலிதா:- *(கவலையாக)* அவ சம்மதிக்காட்டா?

சிறீதர :- சம்மதிக்க வைப்பன் லலி. அவ சம்மதிக்காட்டா, நாங்கள் பதிவுத் திருமணம் செய்வம்!

## காட்சி - 2

***இடம் : யாழ்ப்பாணம். சரவணபவானந்தன் வீடு.***

கனகா :- தம்பி சிறீ! ஒரு நல்ல கலியாணம் வந்திருக்கடா. செய்யன்.

சிறீதர :- நான் இப்ப கலியாணம் செய்யேல்லை அம்மா.

கனகா :- நல்ல சீதணம், வீடுவளவு, காசு எல்லாம் தாறாங்கள்!

சிறீதர :- வேண்டாம், வேண்டாம்!

சரவண:- கனகம்பிகை பொம்பிளை எப்பிடி எண்டு நீ அவனுக்குச் சொல்லேல்லையே? சொன்னாச் சம்மதிப்பன். *(சிரிக்கிறார்)*

கனகா :- நல்ல வடிவான பெட்டையாம்! *(சிரிக்கிறார்)*

சிறீதர :- அம்மா, எனக்கு உந்தக் கலியாணம் வேண்டாம்!

சரவண:- கனகாம்பிகை வேண்டாமெண்டா விடு!

கனகா :- வயது முப்பதாச்சு. இன்னும் கலியாணம் செய்யாமல்..?

சிறீதர :- அம்மா எனக்கு பிடிச்ச பெண்ணைத்தான் கலியாணம் செய்வன்!

கனகா :- அப்பிடியெண்டா, ஆரையன் பாத்து வைச்சிருக்கிறியோ?

சிறீதர :- ஓம் அம்மா.

கனகா :- *(கோபமாக)* பாத்து வைச்சிருக்கிறியோ? ஆரவள்?

சரவண:- ஆள் ஆரண்டு அறிய முன்னமே கோபிச்செழும்புகிறாய் கனகாம்பிகை! *(சிரிக்கிறார்)*



படிப்பகம்

padippakam



சிறீதர :- என்னோடை வேலை செய்யிறவள். பெயர் லலிதா.

கனகா :- அவளிட்டை சீதணம் இருக்கே?

சிறீதர :- படிப்பு, அழகு, குணம், குடும்ப கௌரவம் எல்லாம் இருக்கம்மா!

கனகா :- கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு! சீதணம் இருக்கா?

சிறீதர :- வீடு வளவு இருக்கு. காசு பெரிசாய் இல்லை.

கனகா :- சிறீ! பத்து லட்சம் இனாம் வாங்கலாமடா, இப்ப உன்னைப்போல ஒரு மாப்பிளைக்கு!

சரவண:- கனகம்பிகை, பத்து லட்சம் வாங்கி ஆருக்கு குடுக்கப் போறாய்? மகள் புஷ்பாவும் கட்டீட்டாள்.

கனகா :- புஸ்பாவுக்கு குடுப்பம். அல்லது நான் வைச்சிருப்பன்!

சரவண:- உனக்கேன் காசு? இன்னும் கொஞ்ச நாளிலை அங்காலை போப்போறாய்! *(சிரிக்கிறார்)*

கனகா :- போகும் வரையும் வைச்சிருப்பம்!

சரவண:- அப்ப அவனுக்கு காசில்லை. உனக்குத்தான் காசு! *(சிரிக்கிறார்)*

கனகா :- நான் வைச்சிருந்து, பிறகு குடுப்பன் அவனுக்கு.

சரவண:- கனகாம்பிகை! நீ எத்தினை லச்சத்தோடை வந்தனி எண்டு சொல்லு பாப்பம்?

கனகா :- அது அந்தக் காலம். இப்ப இதுதான் சீதன றேட். இப்பிடி வாங்காட்டா மதிப்பில்லை!

சிறீதர :- சீதணம் வாங்காட்டாத்தான் எனக்கு மதிப்பம்மா!

கனக :- பத்து லட்சம் வாங்கினாத்தான்ரா எனக்கு மதிப்பு!

சரவண:- அப்ப உன்ரை மதிப்புக்குத்தான் கல்யாணம். சிறீதரன்ரை மதிப்புக்கில்லை! *(சிரிக்கிறார்)*

கனகா :- சீதண வீடு எப்பிடி, பெரிய வீடே?

சிறீதர :- பெரிய வீடு தான். அது மாவட்டபுரத்திலை. அங்கை இப்ப போகேலாது.

கனகா :- அதுகும் அப்பிடியே? அப்ப அந்த வீட்டாலும் சுகமில்லை. வீடு இருக்கோ, உடைச்சாச்சோ?

சிறீதர :- இருக்காம். போய்ப் பாத்தவை, சொன்னவையாம்.

கனகா :- எது இருந்தா என்ன, இல்லாட்டா என்ன, பத்து லட்சம் இல்லாட்டா நான் உந்தக் கலியாணத்.துக்கு சம்மதியன்!

சரவண:- கனகாம்பிகை நீயே கட்டுறது? சிறீயல்லோ? அவன்ரை எண்ணத்துக்கு கட்ட விடு.

கனகா :- நான் சம்மதம் தரன்! இருக்க வீடும் இல்லை...

சரவண:- ஏன் இந்த வீடு இருக்கு தானே? சிறீயும் இதிலை குடும்பமாய் இருக்கட்டன்.

கனகா :- என்ரை வீட்டிலை மற்றவை இருக்கிறது, எனக்குச் சகிக்காது!



படிப்பகம்

சரவண:- அப்ப அவன் வாடை வீட்டை எடுத்துக்கொண்டு போகட்டும்!

கனகா :- (*கவலையாக*) அப்ப இந்த வீடு என்னத்துக்கு இருக்கு? நீங்கள் ஏன் என்னையும் பிள்ளையையும் பிரிக்கிறியள்?

சரவண:- உனக்கு ஒண்டுக்கும் சம்மதம் இல்லை. (*சிரிக்கிறார்*)

சிறீதர :- அம்மா நான் லலிதாவைத்தான் கட்டப் போறன். நீங்கள் சம்மதம் தந்தா முறையாக் கட்டுவன். இல்லாட்டா பதிவுத் திருமணம் செய்வன்!

சரவண:- கனகாம்பிகை பதிவுத் திருமணம் செய்யிறதிலும் பாக்க, நாங்களும் நிண்டு, கலியாணம் செய்து வைக்கிறது நல்லது தானே? எங்களுக்கும் மதிப்பு. சரியெண்டு சொல்லு..!

கனகா :- (*அரைமனமாக*) ம்....... சரி!

சிறீதர :- (*மகிழ்ச்சியாக*) நல்ல அம்மா! கலியாணத்துக்கு ஒழுங்கு செய்யிறன்!

## காட்சி - 3

***இடம் : யாழ்ப்பாணம். சரவணபவானந்தன் வீடு.***

சிறீதர :- (*அவசரமாய்*) லலிதா தண்ணியைக் கொண்டாரும். வாரும்!

லலிதா:- (*தூரத்தில் நின்று*) இதோ வந்திட்டன்!

கனகா :- நான்தான் சமைச்சு வைச்சனான். அதை எடுத்துப்போட்டுச் சாப்பிட இவ்வளவு நேரம்! தண்ணியும் பிந்தூது!

லலிதா:- இந்தாருங்கோ தண்ணி. (*ரீயைக் கொடுக்கிறாள்*)

கனகா :- இரண்டு பேரும் வேலைக்குப் போறியள். உங்களுக்கு வேலைக் கஷ்டம் எண்டா, ஒரு வேலைக்காறியை வையுங்கோ. வீட்டு வாடகையும் இல்லை!

சிறீதர :- சரி வா லலிதா. பஸ்சுக்கு லேட்டாகுது. (*போகிறார்கள்*)

சரவண:- கனகம்மா உதைச் சொல்லிக் காட்டாட்டா, என்ன இப்ப?

கனகா :- எதை?

சரவண:- நீ சமைச்சு வைக்கிறாய் எண்டதை.

கனகா :- ஏன் நான்தானே சமைச்சு வைக்கிறன்? சொன்னா என்ன?

சரவண:- நீ வழக்கமாக செய்யிற வேலை தானே?

கனகா :- நான் சமைச்சு வைக்க, அவ பெரிய லேடி மாதிரி வந்து மேசேல இருந்து சாப்பிடூறா!

சரவண:- உனக்குக் கொதி வந்திட்டுது! (*சிரிக்கிறார்*)

கனகா :- எனக்கொரு கொதியும் இல்லை! அப்பவும் நேரத்துக்கு வெளிக்கிட்டு போக முடியேல்லை!

சரவண:- அது அவைக்குத் தெரியும்தானே? நீ ஏன் சொல்லூறாய்?

கனகா :- பிள்ளை குட்டிக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் குடுக்கத்தானே வேணும்?

சரவண:- வீட்டு வாடகை பற்றியெல்லாம் ஏன் பேசினனி?

padippakam



கனகா :- என்ரை வீட்டிலை தானே இருக்கினம்?
சரவண:- உன்ரை வீட்டிலை, உன்ரை பிள்ளை இருக்குது.
கனகா :- அவளும் இருக்கிறாள் லலிதா!
சரவண:- உன்ரை மருமேள்! அதைச் சொல்லிக்காட்ட வேணுமா?
கனகா :- ஏன் சொன்னா என்ன?
சரவண:- மருமேளுக்குச் சுடும். வீண் கொழுவல் வரும்!
கனகா :- அது ஒரு கொழுவலும் வராது!

## காட்சி - 4

***இடம் : பஸ்தரிப்பு நிலையம்.***

லலிதா:- என்ன சிறீ, உங்கடை அம்மா கனக்கக் கதைக்கிறா?
சிறீதர :- என்ன சொல்லூறா?
லலி :- எங்களுக்குச் சமைச்சுப் படைக்கிறாவாம்!
சிறீதர :- அவதானே சமைச்சு வைக்கிறா லலி?
லலிதா:- சோறு தான் அவ சமைச்சது. கறி நான் வைச்சனான்.
சிறீதர :- ஏதோ சமைக்கிறாவே?
லலிதா:- *(ரோசமாக)* அப்படியெண்டா விடட்டு. முழுச் சமைலையும் நான் செய்யிறன்!
சிறீதர :- அவ செய்ததை விடா.
லலிதா:- அப்ப சொல்லிக்காட்டக் கூடாது!
சிறீதர :- வேலைக்காறி வைக்கச்சொன்னா, வைக்கப் போறியா லலி?
லலிதா:- *(ரோசமாக)* ஓ தாராளமாய் வைக்கிறன்! நான் மாதச் சம்பளக்காறி. வேலைக்காரி வைக்கிறன்!
சிறீதர :- வேண்டாம் லலி. அம்மா செய்தாத்தான் அம்மாவுக்குத் திருப்தி.
லலிதா:- *(கோபமாக)* அப்பதான் பிறகு குத்திக்காட்டலாம்!
சிறீதர :- என்ன சொல்லூறாய் லலி?
லலிதா:- *(கோபமாக)* வாடகை குடுக்காமல் வீட்டிலை இருக்கிறமாம்! குடுங்கோ,மாதம், மாதம் வாடகை!
சிறீதர :- இதென்ன லலி சின்னப்பிள்ளை மாதிரி. அம்மா சொல்லுறதுகளை பெரிசு படுத்திக்கொண்டு......
லலிதா:- *(ரோசமாக)* சிறீ உங்களுக்கு அவ அம்மா! எனக்கு மாமி. அவ சொல்லூறது எனக்குச் சுடும்!
சிறீதர :- வயது போன ஆக்கள் சொல்லூறதை, பெரிசு படுத்தக்கூடாது. வா, வா பஸ் வருது!
*(பஸ் வரும் சத்தம். பஸ்ஸில் ஏறிப் போகிறார்கள்)*



படிப்பகம்

padippakam



## காட்சி - 5

*இடம் : ஒரு பொது இடம்*

சிறீதர :- லலிதா! நாங்கள் ஒரு மோட்டச் சைக்கிள் எடுப்பமே?

லலிதா:- சிறீ ஏன் இப்ப மோட்டச் சைக்கிள்?

சிறீதர :- ஓடத்தான். வேறை எதுக்கு? ரண்டு பேரும் ஒ.ஃ.பீசுக்குப் போய் வரலாம்.

லலிதா:- வீண் சிலவு. முதல்ல வாங்கூற சிலவு, பிறகு பெற்றோல் சிலவு...

சிறீதர :- நேரத்துக்குப் போய் வரலாம். பஸ்சுக்கு ஓடத் தேவையில்லை. தூங்கத் தேவையில்லை. *(சிரிக்கிறான்)*

லலிதா:- நேரத்துக்கு வந்தா வீட்டிலும் ஆறி இருக்கலாம்.

சிறீதர :- பாத்தியா! உனக்கு விளங்கூது. ஒ.ஃ.பீசிலை எத்தினை பேர் எடுத்து வைச்சிருக்கிறாங்கள்?

லலிதா:- எவ்வளவு வரும்?

சிறீதர :- ஐம்பதிலை இருந்து எவ்வளவுக்கும் எடுக்கலாம்.

லலிதா:- ஒரு லட்சத்துக்கு நல்ல சைக்கிளா எடுப்பம்.

சிறீதர :- சரி லலி நானே வாங்குறன்.

லலிதா:- வேண்டாம் சிறீ. என்னுடைய காசிலை அரைவாசி, உங்கடை காசிலை அரைவாசியாகப் போட்டு எடுப்பம்.

சிறீதர :- லலி! எங்களுக்கை இனி என்ரை உன்ரையெண்டு என்ன பேதம்? *(சிறீதரன் சிரிக்க, லலிதாவும் சிரிக்கிறாள்)*

லலிதா:- உங்கடை காசிலை வாங்க, மாமி என்ன சொல்லுறாவோ?

சிறீதர :- அது நான் உழைச்ச காசு. எங்கடை காசை நாங்கள் சிலவழிக்கிறத்துக்கு அம்மா என்ன சொல்லூறது? நாங்கள் பஸ்சுக்கு ஓடுற ஓட்டம் எங்களுக்கெல்லோ தெரியும். *(சிரிக்கிறார்கள்)*

## காட்சி - 6

*இடம் : சரவணபவானந்தன் வீடு.*

சிறீதர :- லலிதா! வாரும் நேரமாகுது. *(மோட்டச் சைக்கிள் ஸ்ராட் பண்ணும் சத்தம்)*

லலிதா:- என்ன அவசரப்படுத்தூறியள் சிறீ. வெளிக்கிட்டல்லா வரவேணும்?

சிறீதர :- ஏறும்...... ஏறும்....... ஏறியாச்சா?

லலிதா:- ஓம் சரி. *(சிறீதரனும் லலிதாவும் மோட்டார் சைக்கிளில் ஏறிப் போகிறார்கள்)*

கனகா :- *(எரிச்சலாக)* ஏறிப் பின்னுக்கு இருந்து போறாள்!

சரவண:- அப்ப என்ன முன்னுக்கு இருந்து போகேல்லை எண்டு கவலைப்படுறியா? *(சிரிக்கிறார்)*

கனகா :- இல்லை உல்லாசமாக இருந்து போறாள் எண்ணூறன்!



படிப்பகம்

padippakam



சரவண:- கந்தோருக்குப் போகுதுகள்!

கனகா :- இப்ப ஏன் மோட்டச் சைக்கிள் எண்டு கேக்கிறன்? இவ்வளவு காலமும் பஸ்சிலை போனவை தானே?

சரவண:- அப்ப தனி ஆக்கள். இப்ப ரண்டு பேர். உழைக்குதுகள். ரண்டுபேரும் நேரத்துக்குப் போகலாமல்லே?

கனகா :- ஒ.ஃ.பீசுக்கில்லை, உலாத்து!

சரவண:- நேரம் மிச்சம். உடம்பு அலுப்பு இராது!

கனகா :- உதெல்லாம் ஒவ்வொரு சாட்டுகள். மோட்டச் சைக்கிள் வாங்கப்போறன் எண்டு, எனக்கொரு சொல்லுச் சொல்லேல்லை!

சரவண:- ஆ! அதுதான் உனக்குக் கோபம். *(சிரித்து)* கலியாணம் கட்டும் வரையும் தான் தாயாரிட்டை உத்தரவு வாங்கூறது. கலியாணம் செய்தா, மனைவீட்டைத் தான் உத்தரவு வாங்க வேணும்! கனகா, நான் உன்னிட்டைத்தானே எல்லாத் துக்கும் உத்தரவு வாங்கூறனான்? *(சிரிக்கிறார்)*

கனகா :- வீண் சிலவு. சைக்கிள் ஒரு லட்சம் போகும். இனிப் பெற்றோல்?

சரவண:- அதுகள் உழைக்குதுகள். எதையாவது வாங்கி, எதையாவது விட்டோடட்டன். உனக்குக் கொதி! நீ மோட்டச் சைக்கிள் ஓடேல்லை, மருமகள் ஓடுறாள் எண்டு. *(சிரிக்கிறார்)*

கனகா :- எனக்கொரு கொதியுமில்லை!

சரவண:- நீ கந்தோரிலை வேலை பாக்கவுமில்லை. அந்தக் காலத்திலை மோட்டச் சைக்கிளும் இல்லை. இப்ப இருக்குது! அதுகள் அனுபவிக்கட்டன்.

கனகா :- இனி அவள் வீட்டிலை இராள். பறந்துகொண்டுதான் திரியப் போறாள்!

சரவண:- கனகம், நான் சொன்னன், உனக்குப் பொறாமை எண்டு. *(சிரிக்கிறார்)*

கனகா :- சீதணக் காசும் கொண்டுவரேல்லை. கிடக்கிற காசையும் இப்பிடி முடிச்சா.....?

சரவண:- உன்னிட்டைக் காசு கேட்டவையோ? அதுகள் தாங்கள் உழைச்ச காசிலை ஓடுதுகள்.

கனகா :- இனி அவள் அவனை ஆட்டிவைக்கப் போறாள்!

சரவண:- நீ என்னை ஆட்டி வைக்கிற மாதிரி! *(சிரிக்கிறார்)*

## காட்சி - 7

***இடம் : சரவணபவானந்தன் வீடு.***

கனகா :- தம்பி சிறீ, எங்கையடா வெளிக்கிட்டிருக்கிறியள்?

சிறீதர :- என்ரை நண்பன் ஒருத்தன்ரை பிள்ளையின்ர பிறந்தநாள் விழா. அதுதான் நாங்கள் ரண்டுபேரும் போறம்.



படிப்பகம்

padippakam



கனகா :- ஒரு கோயில் குளத்துக்கும் போறதில்லை. எந்த நாளும் உலாத்து!

சிறீதர :- அழைச்சாப் போகத்தானே அம்மா வேணும்?

கனகா :- எங்கடை வீட்டிலை ஒரு கொண்டாட்டமும் இல்லை. ஊர் முழுக்கப் போறியள்!

சிறிதர :- அம்மா, எங்கடை வீட்டிலும் தேவை வரேக்கை வைப்பம், கொண்டாட்டம்!

கனகா :- உதுக்குத்தான் வாங்கினனீங்கள் என்ன? உலாத்த?

சிறீதர :- இல்லை அம்மா. ஓ.்.பீசுக்குப் போக.

கனகா :- காலேலை ஓ.்.ப்பீஸ், மாலேலை உலாத்து! ஓ.்.ப்பீஸ் தப்பினாலும் உலாத்துத் தப்பாது!

சிறீதர :- சிலவேளைதானே அம்மா போறம்.

கனகா :- உந்த மோட்டச் சைக்கிள் எவ்வளவு காசடா?

சிறீதர :- ஒரு லட்சம் ரூபாய் அம்மா.

கனகா :- அம்மா! அவ்வளவு காசா?....... ஆற்றை காசு?

லலிதா:- மாமி! ரண்டுபேருமாக் காசு போட்டுத்தான் வாங்கினனாங்கள்!

கனகா :- வீண் காசு. உதிலை ஓடுறதும் ஆபத்து. வித்துவிடடா உதை!

சிறீதர :- ஆசைப்பட்டு வாங்கி இன்னும் ஒரு வரியம் கூட ஆகேல்லை. அதுக்கை விக்கவா?

சரவண:- உனக்கு ஏதும் நட்டமே? அதுகள் உழைக்குதுகள் வாங்கி ஓடுதுகள்!

கனகா :- ஆபத்தல்லே உது? மோட்டுச் சைக்கிள்!

சரவண:- அதெல்லாம் பிள்ளையளுக்குத் தெரியும். நீ பேசாதை!

கனகா :- என்னை உதிலை ஒரு நாளும் ஏத்தேல்லை.

சிறீதர :- சரி வா அம்மா! எங்கை போகப் போறாய்? கொண்டுபோய் விடுறன்!

சரவண:- சிறீ என்னையும் ஒரு நாளும் ஏத்தி ஓடேல்லையடா.

சிறீதர :- சரி நீங்களும் வாருங்கோ அப்பா......

சரவண:- பிள்ளையள், எங்களுக்கு கிளடுகளுக்கு ஏன் உதை? நீங்கள் இளம் பிள்ளையள் ஓடுங்கோ!

சிறீதர :- நேரமாச்சு. லலிதா வா போவம்.

லலிதா:- வந்துட்டன்.

சிறீதர :- ஏறீட்டியா? சரி போட்டுவாறம்.

லலிதா:- போட்டு வாறம்.

*(சிறீதரனும் லலிதாவும் மோட்டச் சைக்கிளில் ஏறிப் போகிறார்கள்)*

கனகா :- போட்டுவாறன் எண்டு எனக்குச் சொல்லீட்டுப் போறாள்!

சரவண:- நல்ல பழக்கம்தானே, கனகாம்பிகை?



படிப்பகம்

padippakam



கனகா :- நான் நிக்கிறன், தான் உலாத்தப் போறன் எண்டு சொல்லீட்டுப் போறாள்!

சரவண:- ஏன் கருத்துப் பிடிக்கிறாய்?

கனகா :- எந்த நாளும் உலாத்து. உவள் வீட்டிலை ஒரு வேலையும் செய்யிறதில்லை. நானும் இனிச் சமைக்கமாட்டன்!

சரவண:- சரி விடு. அவையே சமைச்சுச் சாப்பிடட்டும்.

கனகா :- எனக்குச் செய்த கையும் காலும் கேளாது.

சரவண:- அப்ப பேசாமல் செய். புறுபுறாதை!
*(சிறீதரனும் லலிதாவும் மோட்டச் சைக்கிளில் ஓடிக்கொண்டே பேசுகிறார்கள்)*

லலிதா:- சிறீ நாங்கள் மோட்டச் சைக்கிள் வாங்கினது மாமிக்குப் பிடிக்கேல்லை, என்ன?

சிறீதர :- அப்பிடித்தான் தெரியுது.

லலிதா:- நாங்கள் உலாத்துறதும் பிடிக்கேல்லை.

சிறீதர :- நாங்கள் தேவைக்குத்தானே வாங்கினம்? தேவைக்குத்தானே போய்வாறம்?

லலிதா:- அவவுக்கு என்னிலைதான் கோபம்.

சிறீதர :- ஏன்? நான்தானே சைக்கிள் வாங்கினது?

லலிதா:- அவ நான்தான் வாங்கினது எண்டு நினைக்கிறா.

சிறீதர :- அம்மாவுக்கு நான் சொல்லூறன் லலிதா.

லலிதா:- *(கவலையாக)* மாமி என்னைத்தான் காஞ்சு கொண்டிருக்கிறா.

சிறீதர :- லலி, நீ அப்பிடி நினைக்காதை!

லலிதா:- *(தழுதழுத்த குரலில்)* அவ குத்தலாகக் கதை சொல்லேக்கை, எப்பிடிப் பேசாமல் இருக்கிறது?

சிறீதர :- அப்ப என்ன செய்யப்போறாய்?

லலிதா:- *(கவலையாக)* நாங்கள் மோட்டச் சைக்கிளை விப்பம்!

சிறீதர :- சீ, எவ்வளவு ஆசைப்பட்டு வாங்கின சைக்கிள். எவ்வளவு வசதியாய் இருக்கு! இதை விக்கவா?

லலிதா:- அப்ப நாங்கள் விலகிப் போவம் சிறீ.

சிறீதர :- என்ன சொல்லூறாய் லலி?

லலிதா:- நாங்கள் தனிக் குடித்தனம் போவம்!

சிறீதர :- என்ன சொல்லுறாய் லலி. அப்பா அம்மாவிட்டை இருந்து பிரிஞ்சா?

லலிதா:- ஒண்டா இருக்க விடாமல், குறை சொல்லிக் கொண்டிருந்தா, என்ன செய்யிறது?

சிறீதர :- அம்மா சொல்லுறதைப் பொருட்படுத்தாதை லலிதா!

லலிதா:- *(அழுகையுடன்)* எப்பிடிப் பொருட்படுத்தாமல் இருக்கிறது? குத்தல்! குத்தல்! ஒரே குத்தல்!

சிறீதர :- லலி, நான் அம்மாவுக்குச் சொல்லூறன்.



படிப்பகம்

padippakam



## காட்சி - 8

***இடம் :– சரவணபவானந்தன் வீடு.***

கனகா :- பிள்ளை லலிதா, உங்களுக்கு நெடுக உலாத்து!

லலிதா :- இல்லை மாமி, தேவையோடைதான் உலாத்துறம்.

கனகா :- ஒரு நாளும் வீட்டிலை தங்கூறதில்லை!

சிறீதர :- அம்மா நாங்கள் எங்கை உலாத்தினாலும், இரவுக்கு வீட்டை தானே வாறம்?

கனகா :- ஓ நீங்கள் இரவுத் தங்கலுக்கு வாருங்கோ. நான் வேலைக்காறி மாதிரிச் சமைச்சு வைக்கிறன்!

லலிதா :- *(கோபமாக)* அப்பிடியெண்டா விடுங்கோ. எங்களுக்கு வேண்டிய சமையலை நானே செய்யிறன்!

கனகா :- *(கோபமாக)* என்ன பாகப் பிரிவினை செய்யப் போறியோ?

லலிதா :- நீங்கள் தானே சொன்னது, நான் சமைக்கிறதில்லை எண்டு!

சரவண:- கனகா சண்டை வேண்டாம். விடு உந்தக் கதையை!

கனகா :- *(கோபமாக)* என்னெண்டு விடுறது? குடும்பத்தைப் பிரிக்கப் போறாளாம்! அவலலை மயக்கி எடுத்தது காணாதெண்டு, இப்ப குடும்பத்தையும் பிரிக்கப் போறாளாம்!

லலிதா :- *(ரோசமாக)* நான் ஒண்டும் உங்கடை மகனை மயக்கேலை! அப்படியெண்டா அவரைக் கேளுங்கோ. சிறீ என்ன பேசாமல் நிக்கிறியள்? சொல்லுங்கோ!

சிறீதர :- ஓமம்மா நான் தான் லலிதாவைக் கேட்டது, என்னைக் கட்டச் சொல்லி.

லலிதா :- எனக்கு ஒருத்தரும் சமைச்சுத் தர வேண்டாம். எங்களுக்குத் தேவையானதை நானே சமைப்பன்!

சரவ :- இல்லைப் பிள்ளை, மாமியோடை சேர்ந்து சமைக்கலாம்.

லலிதா :- மாமா, அப்படிக் கூட்டாகச் சமைச்சுத்தானே குறை வந்திருக்கு?

சரவண:- இனி வராது! இனி வராது!

லலிதா :- *(அழுகையுடன்)* ஒண்டா ரண்டா? எத்தினை குறை, எத்தினை குத்தல்! நான் உழைக்கிறன். நான் சமைப்பன்!

சிறீதர :- லலிதா நீ வேலைக்குப் போறனி. உனக்குத் தனியச் சமைக்கிறது கஷ்டம் தானே?

லலிதா :- எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. நான் சமைப்பன். *(தழுதழுத்து)* இந்த மாதிரிக் குறை கேக்கிறதைத்தான் சகிக்கேலாது!

சரவண:- அப்பிடிக் குறை வராமல் நான் பாக்கிறன் பிள்ளை.

லலிதா :- வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் எண்டு, நான் வந்த நாள் துவக்கம் நடக்குது. நாங்கள் தனியச் சமைப்பம்.

சிறீதர :- லலி! இப்ப வெளிக்கிடு, லேட்டாகுது.



படிப்பகம்

padippakam



லலிதா :- நான் ஒரு மணித்தியாலம் முந்தி எழும்பினன் எண்டா, எல்லாம் செய்துடுவன். என்னை என்ரை போக்கிலை விடுங்கோ!

சரவண :- சரி கனகா, இந்த வீட்டிலை தானே இருக்கப் போறம்? பிள்ளை தனியச் சமைக்கட்டும்.

சிறீதர :- சரி லலிதா, சண்டை இல்லாமல் சமாதானமாகச் சமைப்பம். *(சிரிக்கிறான்)*

## காட்சி - 9

***இடம் : சரவணபவானந்தன் வீடு.***

லலிதா:- வாருங்கோ சாப்பிட!

சிறீதர :- *(வந்து)* லலிதா என்ன சாப்பாடு?

லலிதா:- புட்டும் குழம்பும்.

சிறீதர :- *(இளக்காரமாக)* புட்டா?

கனகா :- தம்பி சிறீ இஞ்சைவாடா, தோசை சுட்டு வைச்சிருக்கிறன்.

சிறீதர :- அம்மாவிட்டை போய் சாப்பிடட்டா லலி?

லலிதா:- *(வெறுப்பாக)* போய்ச் சாப்பிடுங்கோ!

சிறீதர :- நீ மனமாகச் சொல்லேல்லை.

லலிதா:- நான் எப்படி மனமாகச் சொல்லுவன்? நான் ஏன் சமைச்சு வைச்சிருக்கிறன்?

சரவண:- கனகா, நீ உதிலை தலையிடாதை. விடு அதுகள் எதையோ சமைச்சுச் சாப்பிடட்டும்.

கனகா :- எந்த நாளும் உப்பிடித்தான். புட்டும் சம்பலும், சோறும் கறியும். சும்மா சாட்டுக்குச் சமைக்கிறது! ஒரு நாளாவது மணம் குணமாகச் சமைக்கிறனியே?

லலிதா:- என்ரை மையல் எனக்குத் தெரியும்! உங்களுக்கு விருப்பமானா, மகனைக் கூட்டிக் கொண்டு போய் சாப்பாட்டைக் குடுங்கோ!

கனகா :- சாப்பாட்டைக் குடுத்தாவல்லோ? எந்த நாளும் உலாத்து! உலாத்து! எப்பிடி மெலிஞ்சு போச்சு பொடி!

சரவண:- கனகா முப்பது வரியம் மகனுக்குச் சாப்பாடு குடுத்திட்டாய். காணாதே? இனி மருமகளிலை விடு!

கனகா :- இப்பவும் அவன் என்ரை பிள்ளைதான்!

சரவண:- அப்ப ஏன் கலியாணம் கட்டி வைச்சனி?

கனகா :- நானே கட்டி வைச்சது? அவன் தான் விரும்பிக் கட்டினான்!

சரவண:- அப்ப அப்பிடியே, விருப்பம் போலை சாப்பாட்டையும் சாப்பிடட்டும்!

கனகா :- நான் விடமாட்டன்! என்ரை பிள்ளைக்கு நான் சாப்பாடு குடுக்கக் கூடாதே?

லலிதா:- எதையும் குடுங்கோ. என்னைக் குறை சொல்லத் தேவையில்லை!



படிப்பகம்

padippakam



கனகா :- சொல்லாமல் எப்பிடி? நீதானே இடேல வந்து குழப்பினது?

சரவண:- கனகா, நீ அதுகளின்ரை குடும்பத்தைக் குழப்பூறது எண்டே நிக்கிறாய்!

லலிதா:- *(கோபமாக)* சிறீ! இது சரிவராது! நாங்கள் போவம்!

சிறீதர :- எங்கை போப் போறாய் லலி?

லலிதா:- நாங்கள் தனிக் குடித்தனம் போவம்!

கனகா :- பாத்தியா! அவள் இதுக்குத்தான் வழி வகுத்தவள்!

சரவண:- கனகா, நீயல்லோ இப்ப சண்டையைத் துவக்கினது?

கனகா :- நீங்கள் மருமேளின்ரை பக்கம்!

சரவண:- நான் உண்மையைச் சொன்னன்!

லலிதா:- ஏன் சண்டையை? நாங்கள் தனிக் குடித்தனம் போவம்!

சிறீதர :- பொறு, லலிதா பொறு!

லலிதா:- தினமும் இதே பாட்டு! எத்தினை நாளைக்குப் பொறுக்கிறது?

சிறீதர :- அம்மாவின்ரை சாப்பாடும் வேண்டாம், உன்ரை சாப்பாடும் வேண்டாம் லலிதா. வா, வெளீலை போய் ஹொட்டல்லை சாப்பிட்டுட்டு வருவம்.

லலிதா:- நான் வரேல்லை. இந்தச் சாப்பாட்டை என்ன செய்யிறது?

சிறீதர :- அது இருக்கட்டும். நீ வா ஹொட்டலுக்கு!

லலிதா:- எனக்குச் சாப்பாடு வேண்டாம்!

சிறீதர :- இப்ப சாப்பிடுறதுக்காகவல்ல. இந்த இடத்தாலை போக. போய் உலாத்திக் கொண்டு வந்தா, மூட் மாறீடும். சண்டையும் நிண்டுடும்! *(லேசான சிரிப்பு சிரிக்கிறான்)*

சரவண:- போட்டு வா பிள்ளை. நல்லது.

லலிதா:- சரி வாருங்கோ போவம்.

கனகா :- *(நக்கலாக)* உழைக்கிறியள்தானே? போய் ஹொட்டல்லை புறியாணி சாட்பிட்டுட்டு வாருங்கோ!
*(சிறீதரனும் லலிதாவும் மோட்டச் சைக்கிளில் ஏறிப் போகிறார்கள். மோட்டச் சைக்கிள் ஓடும் சத்தம்)*

சரவண:- அதுகள் புறியாணியைச் சாப்பிட்டா என்ன? எழுத்தாணியைச் சாப்பிட்டா என்ன? கனகாம்பிகை, நீ அதுகளின்ரை குடும்ப விஷயத்திலை தலையிடாதை!

கனகா :- என்ரை பிள்ளையை நான் விட்டுக் குடுக்கட்டோ அவளுக்கு?

சரவண:- கலியாணம் செய்துட்டா, அதுகள் தனிக் குடும்பம்.

கனகா :- எந்த நிலையிலையும் தாய் பிள்ளை உறவு மாறாது. *(எரிச்சலாக)* மோட்டச் சைக்கிளிலை ஏறிப் பறக்கிறாள்!

சரவண:- நீ துரத்தினாய், அதுகள் பறக்குதுகள்! (சிரித்து). கனகாம்பிகை வீண் கொழுவல் எடுக்காதை!

கனகா :- என்ன, எங்கையோ கிடந்த பிச்சைக்காறி, என்னிலை ஆதிக்கம் செலுத்தவோ?



படிப்பகம்

padippakam



சரவண:- அவள் பிச்சைக்காறி இல்லை. படிச்சவள். உத்தியோகம் பாக்கிறவள். வீடு வாசல் காசு எல்லாம் கொண்டந்தவள்!

கனகா :- அதுக்காக என்னிலை ஆதிக்கம் செலுத்தவோ?

சரவண:- நீதான் அதுகளிலை ஆதிக்கம் செலுத்துறாய்! ஏன் தலையிடுகிறாய்?

கனகா :- நான் என்ரை பிள்ளையோடை பேசக் கூடாதே? அவன் நான் சொல்லுறதைக் கேட்கக் கூடாதே?

சரவண:- சொல்லுறதைச் சொல்லு. ஆனால் கொளுவாதை!

கனகா :- ஏதோ சொல்லி அவனை மயக்கீட்டாள். அவன் இப்ப நான் சொல்லுறது ஒண்டையும் கேக்கிறதில்லை!

சரவண:- கனகாம்பிகை நீ இன்னும் எவ்வளவு காலம் இருந்து புத்திமதி சொல்லப் போறாய்? அதுகள் நீண்ட காலம் வாழப்போகுதுகள். ஆளை ஆள் சொல்லுறதைக் கேட்டு நடக்கட்டன். *(சிரிக்கிறார்)*

கனகா :- நான் என்ரை பிள்ளையை ஒரு நாளும் கைவிடன்!

சரவண:- உது கடைசியாய் தனிக்குடித்தனத்திலதான் போய் முடியப்போகுது! மருமேள் இப்பவே கேக்கிறாளாம்.

கனகா :- என்ன கேக்கிறாளாம்?

சரவண:- தனிக் குடித்தனம் போவமோ எண்டு.

கனகா :- பாத்தியளா! பாத்தியளா! அவளுக்கு அதுதான் திட்டம். என்னையும் மகனையும் பிரிக்கிறது!

சரவண:- அதுக்கு நீ உதவி செய்யிறாய்! *(சிரிக்கிறார்)*

கனகா :- அந்தக் கெட்டித்தனத்தையும் பாப்பம்!

## காட்சி - 10

***இடம் : சரவணபவானந்தன் வீடு.***

லலிதா :- *(கவலையாக)* இஞ்சை பாருங்கோ, காலமை கறி வைப்பம் எண்டு போனா, உங்கடை அம்மா அடுப்புக்கு முன்னாலை குறுக்கை நிக்கிறா!

சிறீதர :- நீ மற்ற அடுப்பிலை வையன் லலிதா.

லலிதா :- ரண்டு அடுப்பையும் அவதான் கவர் பண்ணுறா. இண்டைக்கு கறி இல்லாமல் இடியப்பம் சாப்பிட வேணும்.

சரவண:- கனகாம்பிகை உதைப் பிறகு சமைச்சா என்ன? அதுகள் சமைச்சுச் சாப்பிட்டுட்டுப் போகவிடன்.

கனகா :- நான் என்ன அவளைக் கையிலை பிடிக்கிறனே, சமைக்காதை எண்டு? சமைக்கட்டன்.

சரவண:- நீ என்ன செய்யிறாய்? இஞ்சாலை வா பாப்பம்!

கனகா :- நான் தண்ணி சுட வைக்கிறன்.

சரவண:- அது அவை போன பிறகு வைக்கலாம் தானே?



படிப்பகம்

padippakam



லலிதா :- இப்பிடித்தான் எல்லாத்திலும். கிணத்தடிக்குக் குளிப்பம் எண்டு போனா, அந்த நேரம் தான் எதையாவது தோய்ச்சுக் கொண்டு நிப்ப. வேணுமெண்டு, நேரம் பாத்துக் கக்கூசுக்கை இருக்கிறது. *(அழுகிறாள்)*

கனகா :- ஏன்ரி நான் கிணத்தடி ரோய்லெற்றுக்குப் போகப்படாதே?

சிறீதர :- போங்கோவன் அம்மா, நாங்கள் போன பிறகு!

லலிதா :- அவவாலை ஒவ்வொரு நாளும் ஒ.ஃ.பிசுக்கு லேட்! *(அழுகிறாள்)*

சிறீதர :- லலிதா அழாதை. பொறு! பொறு!

லலிதா :- *(ஆவேசமாக)* எத்தினைக்கெண்டு பொறுக்கிறது? எத்தினை நாளைக்குப் பொறுக்கிறது? என்னாலை இனிப் பொறுக்கேலாது! வாருங்கோ தனிக்குடித்தனம் போவம்!

சிறீதர :- அவசரப்படாதை லலிதா. நீ இனி தனி அடுப்பிலை சமை.

லலிதா :- இனி இஞ்சை இருக்கேலாது! இருந்தா ரத்தம் கொதிச்சு எனக்கு சுகவீனம் வந்திடும்!

கனகா :- அவளுக்கு உழைக்கிறன் எண்ட திமிர்!

லலிதா :- ஓ நான் உழைக்கிறன். சுதந்திரமா இருப்பன்!

கனகா :- வந்த நாள் துவக்கம் நீ உதுக்குத்தான் வழி வகுத்தனி. எனக்குத் தெரியும், அவனையும் என்னையும் பிரிக்க!

சரவண:- கனகாம்பிகை! இப்ப ஆர் பிரிக்கிறது?

லலிதா :- நேரம் போகுது. வெளிக்கிடுங்கோ ஒ.ஃ.பீசுக்கு!

சிறி :- சாப்பிட்டுட்டுப் போவம் லலிதா.

லலிதா :- சாப்பாடு ஆய்த்தமில்லை.

கனக :- நான் சமைச்சு வைச்சிருக்கிறன். சாப்பிட்டுட்டுப் போடா.

லலிதா :- போய் சாப்பிட்டுட்டு வாருங்கோ.

சிறீதர :- நீயும் வா லலிதா.

லலிதா :- நான் வரேல்ல. நீங்கள் சாப்பிடுங்கோ.

சிறீதர :- நானும் சாப்பிடேல்லை. நேரம் போட்டுது. வா போவம். *(மோட்டார் சைக்கிளில் சிறீயும் லலிதாவும் போகிறார்கள்)*

கனகா :- பொடியைப் பட்டினி போட்டு கூட்டிட்டுப் போறாள்!

சரவண:- சமைக்க நீ விட்டாவெல்லோ? *(சிரிக்கிறார்)*

கனகா :- அவளுக்கென்ன, காலேலை வெள்ளண எழும்பிச் சமைக்க?

சரவண:- மருமேளும் எழும்ப, நீயும் எழுப்பீடுவாய்! *(சிரித்து)* உது கடைசியாக பிரிவினேலைதான் போய் நிக்கப் போகுது! சரவணபவானந்தனும் மகனும் பிரிஞ்சிட்டடினம் எண்டு எனக்கும் பேர்!

கனகா :- வாற பேர் வரட்டும்!



படிப்பகம்

padippakam



## காட்சி – 11

***இடம் : சவணபவானந்தன் வீடு.***

லலிதா :- சிறீ, நாங்கள் தனிக் குடித்தனம் போவம்!

சிறீதர :- லலிதா, தனிக்குடித்தனம் போறது பற்றி என்னோடை நீ பேசாதை!

லலிதா :- இஞ்சை இருந்தா, சண்டை பிடிச்சுப் பிடிச்சு, நான் செத்துப் போவன்!

சிறீதர :- அக்கா புஷ்பாவும் கொழும்புக்குப் போட்டா. அப்பாவுக்கும் அம்மாவுக்கம் நாங்கள் தானே கதி?

லலிதா :- அதை மாமி உணருறதாய் தெரியல்லையே!

சிறீதர :- நீ கொஞ்சம் பொறுமையைக் கைப்பிடி லலிதா. எல்லாம் சரிவரும்.

லலிதா :- *(தழுதழுத்து)* நான் பொறுமையைக் கடைப்பிடிச்சு கடைப்பிடிச்சு, பொறுமையின் எல்லைக்கே போட்டன்! மாமி பத்து வார்த்தை பேசினா, நான் ஒரு வார்த்தை பேசுவன்! அதையும் பேச வேண்டாம் எண்ணுறியளா? நானும் ஒரு மனிதப் பிறவிதானே?

சிறீதர :- நான் அம்மாவையும் கண்டிக்கிறன். நீ இன்னும் கொஞ்சம் பல்லைக் கடிச்சுக் கொண்டிரு பாப்பம்.

லலிதா :- நான் அப்பிடி மூண்டு வரியம் இருந்திட்டன். இன்னும் பல்லைக் கடிச்சனென்டா பல்லுத்தான் உடையும்! *(அழுகையினூடு சிரிக்கிறாள்)*

சிறீதர :- அம்மா திருந்துவா. உன்ரை அருமையை உணருவா!

லலிதா :- அவவுக்கு அடிப்படேலையே என்னைப் பிடிக்கேல்லை! அவ இப்பிடித்தான் இருப்ப!

சிறீதர :- நான் சொல்லூறன் அம்மாவுக்கு கடைசி முறையாக.

லலிதா :- *(மெல்ல)* இன்னும் ஒண்டு சிறீ

சிறீதர :- என்ன லலிதா, சொல்லு!

லலிதா :- *(நாணத்துடன்)* நான் உண்டாகியிருக்கிறன்!

சிறீதர :- *(வியப்புடன்)* என்ன சொல்லுறாய் லலிதா?

லலிதா :- *(நாணத்துடன்)* நான் கர்ப்பமாயிருக்கிறன்!

சிறீதர :- *(மகிழ்ச்சியாக)* லலி! இதை நீ ஏன் எனக்கு முன்னமே சொல்லேல்லை? கேக்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கு! நான் அப்பாவாகப் போறன்!

லலிதா :- சிறீ ஆகவும் சந்தோஷப்படாதேங்கோ. ஆக மூண்டு மாதம் தான்! கவனமாயிருக்க வேணும்!

சிறீதர :- ஓம் லலி. இந்தக் காலத்திலை வலு கவனமாக இருக்க வேணும்!

லலிதா :- சண்டை பிடிக்காமல், கோபிக்காமல், ரத்தக் கொதிப் படையாமல்... அப்பிடி ஏதும் நடந்தா, குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படும்!



படிப்பகம்

padippakam



சிறீதர :- ஓம், ஓம் லலிதா. கவனமாய் இருக்க வேணும். சண்டை பிடியமாமல் இரு!

லலிதா :- இஞ்சை இருந்தா, கட்டாயம் சண்டை வரும். நாங்கள் தனியப் போயிட்டமெண்டால், நிம்மதியாய் இருக்கலாம்!

சிறீதர :- இந்த நேரத்திலை உனக்கு உதவி தேவையே! ஆர் தாறது?

லலிதா :- அம்மா, தங்கச்சி..... தனியப் போனா, அவையும் வந்திருந்து பாப்பினம்.

சிறீதர :- அவையை இஞ்சை வரச் சொல்லன் லலிதா.

லலிதா :- அவை இஞ்சை வராயினம். தனி வீடெண்டா வருவினம். என்னைச் சகிக்காத மாமி, அவையைச் சகிப்பவா?

*(கனகாம்பிகையும் சரவணபவானந்தனும் வருகின்றனர்)*

கனகா :- பிள்ளை லலிதா! பேரப்பிள்ளை வரப்போகுது எண்டு எனக்கும் வலு சந்தோஷம்! நானே உன்னைப் பாக்கிறன்! பேரப்பிள்ளையையும் பாக்கிறன்.

லலிதா :- நீங்கள் கஷ்டப்படாதேங்கோ மாமி. என்ரை அம்மா பாப்ப. அவவுக்கும் பேரப்பிள்ளை தானே?

சரவண:- வேண்டாம், கனகாம்பிகை. உனக்குத் திடீரெண்டு குணம் மாறாது.இப்ப பேரப்பிள்ளை வரப்போகுதெண்ட சந்தோஷத்திலை, உப்பிடிச் சொல்லுறாய்! பிறகு உன்ரை குணம் மேலாடிச்சுதெண்டா, அது பேரப்பிள்ளைக்கும் ஆபத்து! *(சிரிக்கிறார்)* லலிதாவின்ரை அம்மாவே பாக்கட்டும்!

லலிதா :- நாங்கள் கோபிச்சுக் கொண்டு போகேல்லை மாமி. எங்கடை வசதிக்காகத்தான் போறம். சந்தோஷமாய்த்தான் இருக்கப்போறம்!

சிறீதர :- நீ விரும்பின நேரம் வந்து எங்களைப் பாக்கலாம் அம்மா.

கனகா :- சரவணபவானந்தனும் மகனும் பிரிஞ்சு போட்டினம் எண்டு பிறகு வசை வராதே?

சரவண:- கனகாம்பிகை அது அந்தக் காலத்திலைதான் கூட்டுக் குடும்பம். இப்ப தனிக் குடும்பம் தான் ஃபாஷன். அவரவர் சுகதுக்கம் அவரவரோடை. ஒண்டா இருந்து குத்துப்படுறத்திலும், பிரிஞ்சு தனித்தனியா, சந்தோஷமாக ஒற்றுமையாக இருக்கிறது நல்லது தானே? *(சிரிக்கிறார்)*

கனகா :- ஓம் ஓம் தனிக்குடித்தனமாக இருக்கிறது நல்லதுதான்!

சரவண :- கனகாம்பிகை! நீ சண்டை பிடிக்க ஆளில்லை எண்டு கவலைப்படுறாய் போலை? நான் இருக்கிறன் தானே? நாங்கள் வழக்கம் போலை சண்டை பிடிச்சு, பிடிச்சு சமாதானமாக இருப்பம்! *(எல்லோரும் சிரிக்கின்றனர்)*

***இலங்கை வானொலி*** ***25.11.2000***

> **ஒண்டா இருந்து குத்துப்படுறத்திலும் பிரிஞ்சு, தனித்தனியா, சந்தோசமாக, ஒற்றுமையாக இருக்கிறது நல்லதுதானே!**



படிப்பகம்

padippakam



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்பு செயற்றிட்டப் பணியகமும் இணைந்து, 1998 ஆம் ஆண்டு நடத்திய, வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற நாடகம்.

# நாடகம்
# எங்கள் நாடு

### பாத்திரங்கள்

| | பாத்திரம் | | வானொலி நாடகத்தில் பங்கேற்றோர் |
|---|---|---|---|
| 1. | தர்மராசா | ஓர் அரசாங்க ஊழியர் | மயில்வாகனம் சர்வானந்தா |
| 2. | செல்வராணி | அவரது மனைவி | ஏ.எம்.சி.ஜெயஜோதி |
| 3. | சாந்தி | அவரது மகள் | கமலினி செல்வராஜன் |
| 4. | ரமணன் | அவரது மகன் | பீ.திருச்செந்தூரன் |
| 5. | குணசேனா | ஓர் அரசாங்க ஊழியர் | எஸ்.செல்வசேகரன் |
| 6. | கருணாவதி | அவரது மனைவி | மகேஸ்வரி ரட்ணம் |

### காட்சி - 1

***இடம் : கொழும்பு நகரம், நடு ரோட்.***

***காலம் : நவம்பர் மாதம் 1995.***

*(தருமராசாவும் குணசேனாவும் சந்திக்கின்றனர்)*

குண :- மச்சான் தர்மராசா! ஆப்டர் ஏ வெரி லோங் ரைம்!

தரும :- ஹலோ குணசேனா! *(கை குலுக்குகின்றனர்)* 1983ம் ஆண்டு இனக்கலவரத்தோடையல்லா யாழ்ப்பாணம் ஓடினனான்? சரியா 13 வரியம்!

குண :- நல்லா மெலிஞ்சு போனது தர்மா!

தரும :- நீயும்தான் குணா.

குண :- எதுக்கு இந்த பக்கம் வந்தது?

தரும :- யாழ்ப்பாணம் இடம் பெயர்வு பற்றிக் கேள்விப்படேல்லையா குணா?

குண :- கேள்விப்பட்டன். ஆமி வாறது, சனமெல்லாங் ஓடறது! *(சிரித்து)* ஏன்? ஏன்? பயமா?

தரும :- ஆமிக்குப் பயப்பிடாமல் முடியுமா?

குண :- சீ! சீ! அவண் ஒண்டுங் செய்யமாட்டாங்! எல்லாங் ஜனாதிபதி சொல்லி இறுக்கி, தமிழ் மக்களுக்கி உதவி செய்து, அவங்கட நல்லேண்ணத்த பெற வேணுங் சொல்லி!

தரும :- அது தமிழ் மக்களுக்குத் தெரியுமா? அதுகள் ஓடுதுகள்!

குண :- தர்மா! அப்ப நீ ஏங் மச்சாங் கொழும்புக்கு வந்தது?



படிப்பகம்

padippakam



தரும :- சாவச்சேரிலை இருக்கேலாது. சரியான சனம். அங்கையும் ஆமி வரும்தானே? பெண்சாதி பிள்ளையள் எல்லாம் பயந்து அழுது! அதுதான் இஞ்சை வந்துட்டன்.

குண :- இங்கிட்டுங் ஆமி இறுக்குதானே?

தரும :- இஞ்சை இருக்கிற ஆமி. அங்கை சண்டை பிடிச்சுக்கொண்டு வாற ஆமி! கோபத்திலை வந்தா, எல்லாரையும் சுட்டுத் தள்ளீடும்!

குண :- இல்லே! இல்லே! அப்பிடி செய்யமாட்டாங்! ஆமி யாப்பணேயைப் பிடிச்சது. இப்ப தமில் ஆக்கல் எல்லாங் யாப்பணே போறது!

தரும :- அவங்கள் போகட்டு. நான் போகேல்ல. என்ரை பெண்சாதி பிள்ளை பயப்பிடுது!

குண :- கொலும்பில எங்க இருக்கறது மச்சாங்?

தரும :- என்ரை பிறெண்ட் ஒருத்தன்ரை வீட்டிலை. அது ஒரு சின்ன வீடு. அதுக்கை நடராசாவின்ரை குடும்பம் இருக்கு, என்ரை குடும்பம் இருக்கு. நிக்கவே இடமில்லை!

குண :- *(அனுதாபத்துடன்)* அப்படியா பௌ!

தரும :- என்ரை குடும்பத்திலை நாலுபேர், சாவச்சேரிலை இருந்த மாதிரித்தான் இஞ்சையும் இருக்கிறம். (சிரித்து) ஒரு இடம் எடுத்துத்தா மச்சான்!

குண :- கொழும்பில வீடு எடுக்கறது கஸ்டங்! எல்லாங் இந்த தமில் ஆக்கலாலே வந்தது! சறியான காசு வாறது.

தரும :- அதைப்பற்றிப் பறவாயில்லை, ஒரு வீடு எடுத்துத்தா மச்சான்!

குண :- ஐம்பதாயிரம் றூபா அட்வான்ஸ். மாசங் கூலி ஐயாயிரங். காசு இறுக்கா? *(சிரிக்கிறான்)*

தரும :- இருக்கு மச்சான். என்ரை மூத்த மகன் கனடாவுக்கப் போயிருக்கிறான், அகதியாக. அவன் உழைச்சு அனுப்புறான். அந்தக் காசு காணும்.

குண :- மகன் கனடாவில காசு உலைக்கறது? அப்ப புலிக்கு காசு குடுக்கறது இல்லே?

தரும :- இல்லை மச்சான். நாங்கள்தான் வாங்கிக் சிலவளிக்கிறது. யாழ்ப்பாணத்திலை சாமான்கள் எல்லாம் சரியான விலை. கனடா காசிலைதான் சீவிச்சனாங்கள். இஞ்சையும் அந்தக் காசிலை தான் சீவிக்கப்போறம்!

குண :- நாங்கல் நினைக்கறது, புலிக்கி காசு குடுக்கதாங், கனடா போறது சொல்லி! *(சிரிக்கிறார்)*

தரும :- சீச்சீ! எங்கடை சிலவுக்குத்தான். பிள்ளையள் காசு உழைச்சு அனுப்பூது. அதாலைதான் நாங்கள் சீவிக்கிறம்.

குண :- வா மச்சாங் தர்மா, ஒரு ரீ குடிப்பம்.



படிப்பகம்

padippakam



தரு :- இப்ப ரீ வேண்டாம் மச்சான். (கெஞ்சி) எனக்கு ஒரு வீடு எடுத்துத்தா!

குண :- ஒண்டா வேலை செஞ்சங். சம்பலங் எடுத்தங், குடிச்சு கூத்தாடினங்! இப்ப வேற வேற! அன்னியப்பட்டு போனங்!

தரும :- *(கவலையாக)* மச்சான் குணசேனா, நானும் நீயும் மட்டுமா? தமிழ் சிங்கள இனங்களே ரண்டாப் பிரிஞ்சிட்டுது!

குண :- *(கவலையாக)* இந்த நாடே ரண்டாப் பிரிஞ்சிட்டுது தர்மா! வடக்கே எல்லாங் புளி. இப்ப யாப்பணேயை ஆமி புடிச்சது. இடேலை வண்ணீல புளி! போகவற முடியாது! எண்ணமாதறி இறுந்த நாடு! சா!

தரும :- அதுக்கு கவலைப்படாதை மச்சான். இப்ப என்ரை கவலை, இருக்கிறதுக்கு ஒரு வீடில்லை! முதல்லை எனக்கு ஒரு வீடு எடுத்துத்தா மச்சான்!

குண :- கொழும்பிலே தமிழ் ஆக்கல் எல்லாங் மண்வீடு, கொட்டில், குச்சு, தாவாறங் எல்லாங் இருக்கறது.

தரும :- அந்த மாதிரி வீடு எனக்கு வேண்டாம். நல்ல டீசெண்டான வீடாக எடுத்துத்தா. எவ்வளவு வாடையும் நான் குடுப்பன்!

குண :- சறி பாக்கறது மச்சாங்.

தரும :- மச்சான் குணா, அப்பிடிச் சொல்லாதை! நான் அகதி! வீடில்லாதவன்! நீ இந்த ஊர்க்காறன். நீ நினைச்சா, வீடு எடுத்துத்து தரலாம்!

குண :- மச்சாங் தர்மா, நீ என்ர பெஸ்.ஃபிறெண்ட்! உனக்கு உதவி செய்யாமே, வேற தாருக்கு ஒதவி ஹெல்ப் செய்யப் போறது? வீடு எடுத்து தாறங் மச்சாங்!

## காட்சி - 2

***இடம் : கொழும்பு குணசேனா வீடு***

***காலம் : (அன்று மாலை குணசேனாவும் அவரது மனைவி கருணாவதியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)***

குண :- தருமராசா, மிந்தி என்னோட கொலும்பிலே வேலை செய்தது. இப்ப அகதியா வந்திருக்கறது. வீடு வேணுங் சொல்லறது.

கருண:- இஞ்சாருங்கோ குணா, நான் வீடு கூலிக்குக் குடுக்கேல்லை! இப்ப அதுகும் தமில் ஆக்கலுக்கி குடுக்கேலா!

குண :- தருமராசா என்ரை பெஸ்ட்.ஃபிரெண்ட். அதுகள் நல்ல மினிசு அப்பா.

கரு :- அதுக்கு நீங்கல் ஒறு ஹெல்ப் செய்யுங்கோ. நான் வீடு குடுக்க ஏலா!

குண :- குடும்பத்தோட வந்திரிக்கறான், அவண் பொஞ்சாதி ரண்டு புள்ளையள். மனிதாபிமான உணர்விலை நாங்க ஒதவி செய்ய வேணுங்!



படிப்பகம்

padippakam



கரு :- ஏன் வந்தது?

குண :- யாப்பணேயை ஆமி புடிச்சிட்டுது. அவங்க பயத்தில ஓடி வந்திருக்கி.

கரு :- என்ன பயங்?

குண :- கருணா, பயம்தானே? ஆமி பொலிஸ் எண்டா, இங்கிட்டு நாங்கலே பயப்படுறது தானே? பொம்பிலைக்கி பயங் வாறது தானே?

கரு :- குணா, அதுக்கு நாங்க வீடு குடுக்கேலா!

குண :- கருணா, வீடு இல்லே, ஒரு பக்கங், அனெக்ஸ் குடுப்பம்.

கரு :- அனெக்சும் குடுக்கேலா, குனெக்சும் குடுக்கேலா!

குண :- உனக்குக் கருணாவதி எண்டு பேர். ஒரு கொஞ்சங் கருணா இல்லே! *(சிரிக்கிறார்)*

கரு :- கருணாவதிக்குக் கருணை இறுக்கு! அதுக்காக கஸ்டப்படேலா. *(சிரித்து)* அதிலும் தமில் ஆக்கலுக்கி குடுத்தா கறைச்சல் வாறது!

குண :- என்ன கறைச்சல்? அதுகள் ஒரு கறைச்சலும் தாறது இல்லே! எங்கட சிங்கல ஆக்கல்தாங் கறைச்சல் தாறது!

கரு :- அவங்கல் குண்டு கொண்டுவாறது!

குண :- அதுகள் பாவம்! குடியிறுக்க வலி இல்லாமே வந்து நிக்கறது! குண்டு எப்புடி கொண்டு வாறது? *(சிரிக்கிறார்)*

கரு :- அவங்கள் குண்டு கொண்டு வறாட்டியுங், பொலிஸ் வந்து புடிக்கறது!

குண :- நான் சொல்லறது பொலிசுக்க, இங்க குண்டு இல்லே சொல்லி.

கரு :- பிறகு அவங்கள் எங்களையும் சேத்து புடிக்கறது. *(சிரிக்கிறாள்)*

குண :- கருணாவதி அது நாங் பாத்துக் கொள்ளறது. குண்டும் வாறது இல்லே, பொலிசுங் வாறது இல்லை..... இந்த அனெக்சுக்கு ஐம்பதாயிரங் ரூபா அட்வான்ஸ், மாதங் அஞ்சாயிரங் ரூபா கூலி!

கரு :- சீ, காசக்கு இல்லே, பாவங் எண்டு! உங்கட பிரெண்ட் எண்டு, எடம் குடுக்கறன்.

குண :- *(லேசாகச் சிரித்து)* ஹி.. .ஹி ... கருணா! என்னவோ எடம் குடுத்தா சறி!

கரு :- ஆனா ஒண்டு குணா......

குண :- என்ன கருணா?

கரு :- அவங்க இந்த பக்கங் வரக்கூடா! அவங்க அந்த பக்கங், நாங்க இந்த பக்கங்!

குண :- ஓவ், ஒவ் அவங்க அந்த பக்கங், நாங்கல் இந்த பக்கங்!



படிப்பகம்

padippakam



## காட்சி - 3

*இடம் : கொழும்பு குணசேனா வீடு*

குண :- கருணாவதி, இன்டைக்கி தருமராசா குடும்பம் இங்கிட்டு வாறது. அனெக்ஸ் இறுக்க வாறது!

கரு :- வந்தா, கூட்டீட்டுப்போய் அனெக்ஸ் காட்டி விடுறது!

குண :- இஞ்ச எங்கட வீட்டுக்கு வந்து, உபசறிச்சு தாங் அங்கால அனுப்ப வேனுங்.

கரு :- ஏங் அப்புடி குணா? வாடகைக்காறன் அனெக்சுக்கு போறதுதானே?

குண :- கருணா ஒரு மரியாதைக்கு. தருமராசா எண்ட ஃபிறேண்ட்!

கரு :- அது ஒங்களோட. வாடை ஆக்களே அப்புடி உபசறிக்கறது இல்லே!

குண :- யாப்பணேலை இறுந்து வந்தது.......

கரு :- அதுக்குதாங் இறுக்க எடம் குடுத்தது நாங்க.

குண :- அவை தமில் ஆக்கல். நாங்கள் தங்களே புறக்கணிச்சது ஏண்டு அவங்க நினைக்கபடாது! நாங்கள் தமில் ஆக்கல சமமாக நடத்துறம் எண்டு காட்ட வேனுங்!

கரு :- விலங்கறது! விலங்கறது! என்ன செய்யறது?

குண :- கூட்டி, வாடிவெண்ட சொல்லி, ரீ குடுத்து, இறுக்க விட வேனுங்.

கரு :- ஹறி! ஹறி!

குண :- ஆ வாறது! தருமராச பொஞ்சாதி, ரண்டு பிள்ளைங்க. வாறுங்க தரும, வாறுங்க!

கரு :- இறுங்கோ இறுங்கோ! வாடிவெண்ட!
*(தருமராசாவும் செல்வராணியும் சாந்தியும் ரமணனும் வந்து இருக்கிறார்கள்)*

குண :- இவதாங் என்னோடை பொஞ்சாதி கருணாவதி! இவர்தாங் என்னோட ஃபிரெண்ட் தருமராசா.........

தரும :- இவதான் என்னுடைய பெண்சாதி செல்வராணி

செல் :- *(கவலையாக)* பேர் செல்வராணி! என்ரை செல்வம் எல்லாத்தையும் விட்டுட்டு, அகதியாக வந்து நிக்கிறன்!

தரு :- செல்வராணி இவர்தான் என்னுடைய நண்பர், குணசேனா. இவ என்னுடைய மகள் சாந்தி, இவர் என்னுடைய மகன் ரமணன்.

கரு :- இவ என்ன செய்யறது?

சாந் :- நான் ஏ/எல். மூண்டாம் முறை எடுக்கப் போறன்.

கரு :- இவறு தம்பி?

ரம :- நான் ஏ.எல். ஒருக்கா எடுத்தனான்.

செல் :- சரி போவமா ஏனெக்சுக்கு?



படிப்பகம்

padippakam



கரு :- பொறுங்க. ரீ குடிச்சிட்டு . . . . . . போறது!

செல் :- இப்ப என்னத்துக்கு ரீ? *(அசட்டுச்சிரிப்பு)*

கரு :- அப்ப கூல்ரிங்க்ஸ் கொண்டுவாறது. ஒறு நிமிசங். *(உள்ளே போய் வந்து கூல் றிங்க்ஸ் பரிமாறுகிறாள்)* இந்தாருங்கோ! அப்ப பயத்திலேதாங் கொலும்புக்கு வந்தது?

செல் :- வேறை என்ன? பயம் தான் காரணம்!

கரு :- இஞ்சையும் பிடிக்கறதுதாங் தமில் ஆக்கலை?

ரமண :- அது சண்டை பிடிச்சுக்கொண்டு வாற ஆமி. கோபத்தோடை வருமெல்லா மாமி? அதுதான். *(எல்லோரும் சிரிக்கிறார்கள்)*

குண :- பயப்பட வேணாங். இங்க உங்களே ஆமி பிடிக்காமே நாங் பாக்கறது! *(சிரிக்கிறார்)*

தரு :- நன்றி குணசேனா, நன்றி!

குண :- ∴பிறெண்டுக்கு என்ன நன்றி? *(சிரிக்கிறார்)*

செல் :- அப்ப கருணாவதி அக்கா, உங்கடை பிள்ளையள்?

கரு :- மகன் றஞ்சித் என்ஜினியறிங் படிக்கிறார், பேராதெனிய, மகள் பி.எஸ்.ஸி. படிக்கறது!

செல் :- சரி அனெக்சுக்குப் போவம்.

கரு :- சறி வாறுங்க!
*(எல்லோரும் அனெக்சுக்குப் போகிறார்கள்)*

ரமண :- ஓ . . . இதுதானா? ஒரு அறையும் விறாந்தையும்.

செல் :- நாங்கள் இருந்த இடத்துக்கு இது திறம்! திறம்!

சாந் :- நல்லா கூட்டித் துடைச்சு விட்டிருக்கு.

கரு :- எல்லாங் நாங் தாங் செய்து குடுத்தது!

செல் :- தளபாடம் ஒண்டும் இல்லை.

சாந் :- தளபாடம் போட இடமில்லை! *(சிரிக்கிறாள்)*

குண :- தர்மா லைற், வாட்டர் சப்ளை, எல்லாம் இறுக்கி. தனி பாத்றூம் கக்கூஸ் . . . .

தரும :- நல்ல வசதி! நன்றி குணா! நன்றி!

## காட்சி - 4

***இடம் : தருமராசா குடியிருக்கும் அனெக்ஸ்.***

சாந் :- அம்மா, அங்கை கருணா அன்ரி வாறா.
*(கருணாவதி வருகிறாள்)*

செல் :- வாருங்கோ கருணா அக்கா, இருங்கோ. என்ன விசேஷம்?

கரு :- செல்வா, நாலைக்கி உங்கல் எல்லாறுக்குங் எங்கல் வீட்டில விறுந்து! *(சிரிக்கிறாள்)*

செல் :- என்ன விசேஷம்?

கரு :- நாளைக்கி வெசாக். நாங்க விறுந்து குடுக்கற வலக்கங்.



படிப்பகம்

padippakam



செல் :- உங்கடை சொந்தக்காறர் ....?

கரு :- அது இண்டைக்கி. நாலைக்கி நீங்கலுக்கி விறுந்து! *(சிரிக்கிறாள்)*

ரமண :- அப்பா, அம்மா போட்டு வாருங்கோ.

கரு :- ஆஹா, தம்பி ரமணன், எல்லாறுங் வரவேனுங். எங்கட பிள்ளையளுங் வந்து நிக்கறது, பெராதெனியா இருந்து.

செல் :- சறி வாறம். விருந்து சாப்பிடக் கிடைச்சிரிக்கா? *(சிரிக்கிறாள்)*

கரு :- சைவ சாப்பாடுதாங்.

சாந் :- நீங்கள் மச்சம் சாப்பிடுறதில்லையா மாமி?

கரு :- மச்சங் மிச்சங் சாப்பிடுவங் சாந்தி. வெசாக், போயா நாட்கலுக்கி சைவம்! *(சிரிக்கிறாள்)*

ரமண :- நாங்களும் அப்படித்தான் மாமி. விரத நாட்களிலை சைவம்.

செல் :- சரி வாறம் கருணா அக்கா! வாறம்.

கரு :- சறி வாறேங்! *(கருணாவதி போகிறாள்)*
*(சைக்கிள் மணி அடிக்கும் சத்தம்)*

செல் :- சைக்கிள், கடிதமாக்கும். ரமணன் போய் வாங்கியாடா. *(தருமராசா வருகிறார்)*

தரு :- நான் போறன் *(வாங்கி வந்து)* யாழ்ப்பாணத்திலை இருந்து பாஸ்கரன் எழுதியிருக்கிறார். நாங்கள் கடிதம் போட்டனாங்களல்லோ, வீட்டைப் பாத்துக் கொள்ளச் சொல்லி?

செல் :- என்ன எழுதியிருக்கினம்?

தரு :- வீடு பத்திரமாய் இருக்காம். சாமான்கள் களவு போகுதாம். சாமான்களைப் பாதுகாக்கிறதெண்டா, யாழ்ப்பாணம் வரட்டாம். தங்களாலை பாதுகாக்க ஏலாதாம்! இந்தா செல்வா நீயே வாசிச்சுப்பார்.
*(செல்வராணி கடிதத்தை வாங்கி வாசிக்கிறாள்)*

செல் :- உந்தச் சாமான்களை பாதுகாக்கிறதுக்காக, யாழ்ப்பாணம் போக முடியுமே?

தரு :- போய் எல்லாத்தையும் காப்பாற்றுவம்.

செல் :- சீ நான் வரன்! வயது வந்த பிள்ளையளோடை!

ரமண :- இஞ்சையும் பிடிக்கிறாங்கள் தானே அம்மா?

செல் :- ரமணன் உன்னை இன்னும் பிடிக்கேல்லையே?

சாந் :- அது குணசேனா மாமா பாதுகாப்பு தாறதிலையல்லோ?

செல் :- அப்ப நீயும் போப்போறியாடி சாந்தி?

சாந் :- ஏ.எல்.சோதினை எடுக்கவேணும். போனா, படிக்கலாம் அம்மா.

செல் :- இஞ்சை படியன்.

சாந் :- இஞ்சை எப்பிடிப் படிக்கிறது? இருக்கக் கதிரையுமில்லை மேசையம் இல்லை ...

தரு :- ஒரே புளுக்கம். அறேக்கை அடைபட்டுக்கிடக்க முடியுமே?



படிப்பகம்

padippakam



ரமண :- அப்ப கனடாவுக்குப் போவம் அப்பா.

சாந் :- கனடாவிலை குளிருமடா ரமணா! *(சிரிக்கிறாள்)*

செல் :- ஒரு இடமும் போறதில்லை. இஞ்சைதான் இருக்கிறது!

தரு :- சரி கொம்மாவின்ரை தீர்ப்புத்தான், இறுதித் தீர்ப்பு!

## காட்சி - 5

***இடம் : தருமராசா குடியிருக்கும் அனெக்ஸ்.***

*(குணசேனாவும், கருணாவதியும் வருகிறார்கள்)*

சாந் :- அம்மா, குணசேனா அங்கிளும், கருணா மாமியும் வருகினம்.

செல் :- வாருங்கோ வாருங்கோ!

தரும :- இருங்கோ எண்டு சொல்லக் கதிரையள் இல்லை! *(சிரிக்கிறார்)*

குண :- காறியங் இல்லே, நாங்க அதுக்கு வந்தது இல்லே.

தரும :- அப்ப எதுக்கு?

கரு :- நாங்க றண்டு பேருங் கத்தரகம போறம். செல்வராணி நீங்களும் வாறதா?

செல் :- ஏன் கதிர்காமம்?

கரு :- வேறை எதுக்கு செல்வா? வந்தனா பண்ணத்தாங்.

செல் :- நீங்களும் கதிர்காமம் போறதா?

குண :- முலு சிங்கல ஆக்கலும் போய்க் கும்படறது. சிங்கல ராஜா எல்லாங் அங்கை கும்பிட்டிருக்கி.

தரு :- எப்பிடி போறியள் குணா?

குண :- றெயின்தாங், றெயில்தாங்!

ரமண :- *(பயந்து)* வழிலை பிடிச்சா? எனக்கு பயம்! நான் வரேல்லை!

சாந் :- *(பயந்து)* என்னையும் பிடிப்பங்கள்! நானும் வரேல்லை!

குண :- என்ன பயங்? எங்களோட வாறதுதானே?

செல் :- கதிர்காமம் பாடல் பெற்ற தலம். அருணகிரிநாதரே பாடியிருக்கிறார்! எனக்கு இதுவரை போக்க கிடைக்கேல்லை.

கரு :- அப்ப வாறது, எங்கலோட வாறது!

செல் :- *(பயந்து)* வழிலை பிடிப்பங்களோ எண்டு பயமாக்கிடக்கு..!

குண :- சும்மா பயப்பட வேனாங்! நாங்க வாறது தாணே?

தரு :- இஞ்சை பிடிச்சா, எந்தப் பொலிஸ் ஸ்ரேஷன் எண்டாவது தேடலாம். அங்கை பிடிச்சா, எங்கை கொண்டு போனது எண்டு கூடத் தெரியாது!

குண :- பிடிக்க நாங் விடமாட்டேங் தர்மா!

ரமண :- *(பயந்து)* ஐயோ எனக்குப் பயம்! நான் வரேல்லை!



படிப்பகம்

padippakam



சாந் :- *(பயந்து)* எனக்கு கதிர்காமம் போற ஆசையை விட, பிடிப்பாங்கள் எண்ட பயம்தான் அதிகம்!

குண :- நாங்க கத்தரகம போறது. அப்ப உங்களே இஞ்ச புடிக்கறது. எங்களோட வாறது, அங்க பிடிக்கறது இல்லே! *(சிரிக்கிறார்)*

தரு :- சறி வாறம் குணா. எல்லோருமாப் போவம். பயப்பிடாமல் போவம்!

## காட்சி - 6

***இடம் : கதிர்காமம்.***

*(அந்த இடத்திற்கு உரிய கலகலப்புச் சத்தங்கள், மரங்களில் குருவிகள் கூவுகின்றன, அரோகராச் சத்தங்கள் கேட்கின்றன)*

சாந் :- *(மகிழ்ச்சியாக)* கதிர்காமம் எண்டாக் கதிர்காமம்தான்!

ரமண :- பால்போலை வெள்ளை மணல்!

தரு :- மாணிக்க கங்கை ஆற்றோடை வந்த மணல்.

செல் :- கதிர்காமக் கந்தனைக் காணவேணும் எண்டு வந்தனான். அந்த ஆசை நிறைவேறீட்டுது!

கரு :- செல்வா, எங்களால என்டு சொல்லுங்க. *(சிரிக்கிறார்)*

செல் :- ஓம், ஓம் கருணா, உங்களாலைதான்! *(சிரிக்கிறாள்)*

சாந் :- நல்ல பெரிய மருத மரங்கள்!

தரு :- ஆற்றங் கரையளிலைதானே மருதமரங்கள் வளருறது சாந்தி?

ரமண :- ஆத்திலை இறங்கிக் குளிப்பமா?
*(ஆற்றில் தணிணீர் ஓடும் சத்தம் கேட்கிறது)*

செல் :- ரமணன், குளிச்சுட்டுத்தானேடா கோயிலுக்குப் போகவேணும்?

குண :- தர்மா, ஆலமில்லே. பயமில்லாம எறங்கி குலிக்கறது!
*(மாணிக்க கங்கையில் இறங்கிக் குளிக்கிறார்கள்)*

சாந்தி :- ஊ! சரியான குளிர்த் தண்ணி!

தரு :- ரமணன், சாந்தி, குளிச்சது காணும் வாருங்கோ.

சாந் :- அப்பா கொழும்பு அவியலுக்கும், புளுக்கத்துக்கும் மாணிக்க கங்கைத் தண்ணி குளிர்ச்சியா, இதமா இருக்கு!
*(குளித்துவிட்டு வந்து, உடை மாற்றிக் கொண்டு கோவிலுக்குப் போகிறார்கள்)*

செல் :- அர்ச்சனைத் தட்டு ஒண்டு வாங்குங்கோ, கோயிலுக்குப் போவம்.
*(எல்லோரும் அர்ச்சனைத்தட்டுகள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போகிறார்கள்)*

கரு :- சறி வாறுங்க, இப்பிடி வாறுங்க செல்வா.

செல் :- கருணா அக்கா இதுதான் கதிர்காமக் கந்தன் கோயிலா?

கரு :- ஓவ், ஓவ் இதுதாங். அரிச்சனெ தட்டை கப்புறாளேட்ட குடுக்கறது.
*(அர்ச்சனைத் தட்டுகளைக் கொடுக்கிறார்கள்)*



படிப்பகம்

padippakam



செல் :- இந்தாருங்கோ, அப்பனே! முருகா! *(அரோகரா சத்தங்கள்) (எல்லோரும் முருகனிடம் வேண்டுதல் விடுக்கின்றனர்)*

கரு :- கத்தறகம தெய்யோ! இந்த நாட்டிலை இனங்களுக்கி இடையே ஒத்துமை வற செய்!

குண :- கத்தறகம தெய்யோ! இந்த நாட்டுக்கு சமாதானங் வாறச் செய்!

செல் :- முருகா எங்களைக் காப்பாற்று! இலங்கேலை உள்ள தமிழ் மக்கள் எல்லோரையும் காப்பாற்று!

தரு :- இலங்கேலை உள்ள சிங்கள மக்களையும் காப்பாற்று! எல்லா இன மக்களையும் காப்பாற்று!

ரமண :- முருகா இந்த உலகத்திலை உள்ள மக்கள் எல்லாரையும் காப்பாற்று!

சாந் :- உலகத்திலை உள்ள ஜீவராசியள் எல்லாத்தையும் காப்பாற்று, முருகா!

தரு :- சாந்திதான் சரி. ஜீவராசியள் எல்லாத்தையும் காப்பாற்றச் சொல்லி வேண்டுதல் விடுத்திருக்கிறாள்! (எல்லோரும் சிரிக்கின்றனர்)

சாந் :- ஏன் அப்பா, அவர்தானே எல்லாத்தையும் காப்பாற்றுறவர்?

தரு :- வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்! அங்கை பார் கப்புறாளையும் அரிச்சனைத் தட்டோடை வாறார். முருகன் எங்கள் எல்லாருடைய கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டுட்டார்! *(மணி அடிக்கும் சத்தம். அர்ச்சனைத் தட்டுகளை வாங்குகிறார்கள்)*

குண :- வாருங்கோ, அங்காலை உள்ள கோயிலுக்குப் போவம்.

செல் :- அங்காலையும் கோயில்கள் இருக்கா?

கரு :- வள்ளி அம்மான், தெய்வானை அம்மன், கணேசர் கோயில் அங்கால இறுக்கி.

சாந் :- அந்தத் தெய்வங்களிட்டும் போய், எங்களுடைய வேண்டுகோள்களை சொல்லுவம்.

குண :- பின்னேரம், செல்லக் கதிர்காமம் போவம்.

தரு :- செல்லக் கதிர்காமத்திலும் இந்த நாட்டுக்குச் சமாதானம் வரவேணும் எண்டு பிரார்த்திப்பம்!
*(அரோகராச் சத்தங்கள் கேட்கின்றன)*

## காட்சி - 07

*இடம் : கொழும்பு தருமராசா குடும்பம் குடியிருக்கும் அனெக்ஸ்.*
*(சைக்கிள் மணி அடிக்கும் சத்தம்)*

செல் :- சைக்கிள் மணிச் சத்தம் கேக்குது. தம்பி ரமணன் போய் வாங்கியாடா.

ரமண :- *(போய் கடிதத்துடன் வந்து)* இந்தா அம்மா, அப்பாவுக்கு தருமராசாவுக்கத்தான் கடிதம்.



படிப்பகம்

padippakam



தரும :- *(வாங்கி வாசித்து)* யாழ்ப்பாணத்திலை இருந்து பாஸ்கரன் குடும்பம் கடிதம் போட்டிருக்கினம்.

செல் :- பாஸ்கரன் அண்ணை என்ன எழுதியிருக்கிறார்?

தரும :- யாழ்ப்பாணத்துக்குத் திரும்பாதவேன்ரை வீடுகள் எல்லாத்திலும் களவெடுக்கிறாங்களாம். வரப் பிந்தினா, முழு வீடுமே போயிடுமாம்! கெதியா வரட்டாம். இந்தா செல்வா, நீயே வாசிச்சுப்பார்.

செல் :- *(வாங்கி வாசித்து)* நாங்கள் ஆமிக்குப் பயந்து இஞ்சை ஓடியந்தா, எங்கடை வீட்டைக் களவெடுக்கிறாங்கள்!

தரும :- இப்ப என்ன செய்யப்போறாய்?

சாந் :- யாழ்ப்பாணதம் போவமே அம்மா? இஞ்சை கொழும்பிலை அடைபட்டுக் கிடக்கேலாது.

செல் :- யாழ்ப்ணாத்திலை ஆமியல்லேடி சாந்தி! ஆக்களைப் பிடிக்கிறாங்களாம். உங்கினை பேப்பர்களிலை வருது.

சாந் :- இஞ்சையும் பொலிசும் ஆமியும் தமிழரைப் பிடிக்கிறாங்கள்தானே அம்மா?

ரமண :- இஞ்சைதான் மோசம்! ஆமி பொலிஸ் எண்டு சொலலிக்கொண்டு, கள்ளரும் வந்து களவெடுக்கிறாங்கள்!

செல் :- எங்களிட்டை இன்னும் ஒருத்தரும் வரேல்லை.

தரும :- அது குணசேனா தடுத்துக் கொண்டு நிக்கிறத்திலையல்லோ?

செல் :- ஓம், ஓம் குணசேனா அண்ணை இருக்கிறத்திலைத்தான்! நாங்கள் யாழ்ப்பாணமே போவம். இஞ்சை வீணா காசைக் சிலவழிக்கிறம். அங்கை போய், வீட்டையாவது காப்பாற்றுவம்!

தரும :- செல்வா, கனடா போவமா, தம்பி குமரனிட்டை? (சிரிக்கிறார்)

சாந் :- கனடா என்னத்துக்கு? நாங்கள் வீடு வாசலைக் காப்பாற்றுவமப்பா! அப்பதானே அதிலை இருக்கலாம்.

செல் :- அங்கை போனா உனக்குக் கல்யாணம் செய்யலாமடி சாந்தி,! *(சிரிக்கிறாள்)*

சாந் :- நான் இப்ப கலியாணம் செய்யேல்லை! நான் ஏ.எல். சோதினை எடுத்து கம்பஸ் போப்போறன்.

ரமண :- அப்பா, என்னை மட்டும் கனடாவுக்கு அனுப்பீட்டு, நாங்கள் மூண்டு பேரும் யாழ்ப்பாணம் போங்கோ! *(சிரிக்கிறான்)*

சாந் :- ரமணன், உன்னை அனுப்ப பத்து லட்சம் வேணும்! அண்ணேட்டை அவ்வளவு இருக்கா?

ரமண :- அதெல்லாம் இருக்கும். நீங்கள் அனுப்புங்கோ!

தரும :- நாங்கள் இப்ப யாழ்ப்பாணம் போறதோ இல்லையோஎண்டு யோசிச்சுக் கொண்டிருக்கிறம். அதுக்கை நீ கனடா போறாய்!

ரமண :- போனா, நானும் உழைச்சு அனுப்புவனப்பா.



படிப்பகம்

தரும :- டேய் ரமணன், நீ யாழ்ப்பாணம் வந்து படிச்சு, ஏ.எல். எடுத்து பல்கலைக்கழகம் போகப்பார். உந்தக் கனடாக் கனவுகளை விட்டுட்டு!

ரமண :- எனக்குப் படிப்பு சரிவராதப்பா.

சாந் :- நான் படிக்கத்தான் போறன்.

செல் :- அப்ப என்ன, யாழ்ப்பாணம் போவம். வீடாவது மிஞ்சும்!

தரும :- பயமில்லையா யாழ்ப்பாணம் போக?

சாந் :- பயம்தான்! ஆனா இஞ்சை கிடந்து அவியாமல் போவம்.

செல் :- சாந்தி அங்கை பெட்டையளுக்குத்தான்ரி சரியான பயம்!

சாந் :- பறவாய் இல்லை, போவம் அம்மா.

ரமண :- அங்கையெண்டா ஓடி ஒளிக்கலாமல்லே? இஞ்சை ஒளிக்கவும் இடமில்லை! *(சிரிக்கிறான்)*

சாந் :- இஞ்சை ஒளிக்வல்ல, இருக்கவே இடமில்லை! சரியான குச்சு!

தரும :- அப்பிடிச் சொல்லாதேங்கோ பிள்ளையள். அங்காலை குணசேனா மாமாவுக்குக் கேக்கப்போகுது.

ரமண :- உள்ளதுதானே அப்பா, குச்சுதானே?

தரும :- குணசேனா மாமா என்ரை சினேகிதன். அவர் எனக்காகவல்லோ இந்த அனெக்சைத் தந்தவர். அவருக்கு நாங்கள் நன்றி சொல்ல வேணும்!

செல் :- ஓம், ஓம், நன்றி சொல்ல வேணும். கொழும்பிலை தமிழ் ஆக்கள் இருக்கிற கேவலங்களோடை பாத்தா, இந்த இடம் திறம்! (சிரிக்கிறாள்)

தரும :- கருணாவதியும் நல்ல மனிசி. அதுகள் நல்ல மனிசர்! வீட்டுக்காறர் எண்டு எங்களுக்கு நடப்புக் காட்டேல்லை. ஒரு கரைச்சலும் தரேல்லை!

செல் :- எவ்வளவு உதவிகள் செய்ததுகள். சாப்பாடுகள் பலகாரங்கள் தந்து, கதிரை மேசை தந்து . . .

ரமண :- நாங்களும் அவைக்குப் பலகாரங்கள் குடுத்தனாங்கள்தானே அம்மா?

தரும :- அது மட்டுமேடா ரமணா, உன்னைப் பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போகாமல் பாதுகாத்ததே குணசேனா மாமாதான்! அதுக்காகவேனும் அவருக்கு நன்றி சொல்ல வேணும்!

சாந் :- அப்பா, குணசேனா மாமா குடும்பம்தானே எங்களைக் கூட்டிக்கொண்டு போய், கதிர்காமம் காட்டினது? இல்லாட்டா நாங்கள் கதிர்காமத்தை நினைச்சும் பார்த்திருப்பமே, இந்தக் காலத்திலை?

செல் :- எல்லாத்துக்குமாக நாங்கள் அவைக்கு நன்றி சொல்லீட்டு போவம்

தரும :- செல்வா, நாளைக்கு நீயும் நானுமாப் போய், நன்றி சொல்லுவம்.

padippakam



## காட்சி - 8

***இடம் : கொழும்பு குணசேனாவின் வீடு***

*(குணசேனாவும் கருணாவதியும் இருக்க தருமராசாவும் செல்வராணியும் வருகின்றனர்)*

குண :- ஆ! கருணாவதி, தருமாவும், செல்வராணியும் வாறது.

கரு :- ஏங் வாறது காலமே வெல்லன? வாறுங்க, வாறுங்க இறுங்க! *(தருமராசாவும், செல்வராணியும் வந்து இருக்கின்றார்கள்)*

குண :- என்ன விசேசங் வந்தது?

தரும :- நாங்கள் யாழ்ப்பாணம் போப்போறம். உங்களுக்குச் சொல்லீட்டுப் போகத்தான் வந்தனாங்கள்.

கரு :- *(வியப்புடன்)* யாப்பாணேயா? ஏன் இப்ப யாப்பணேக்கு போறது?

செல் :- நெடுக இரவல் இடத்திலை இருக்கலாமே அக்கா? நாங்கள் எங்கடை இடத்துக்குப் போகத்தானே வேணும்?

கரு :- தங்கச்சி செல்வராணி! இலங்கை முலுவதுங் எல்லாறுங்குங் சொந்தங். எல்லாங் எல்லாறுடைய எடம்! *(சிரிக்கிறாள்)*

தரும :- இல்லை மச்சான் குணசேனா. இஞ்சை வாடகை வீட்டிலைதானே இருக்கிறம்? எங்களுடைய சொந்த வீடு யாழ்ப்பாணத்திலைதானே இருக்குது? *(சிரிக்கிறாள்)*

செல் :- எங்களுடைய வீடு வாசல் அங்கை அலையுது. சரியான களவுகளாம் கடிதம் வந்தது.

தரும :- நாங்கள் போய் வீடுவாசலைப் பாதுகாத்தாத்தானே அங்கை இருக்கலாம்?

செல் :- இல்லாட்டா எங்களுக்கு வீடில்லாமல் போயிடும்!

கருண:- என்ன செல்வா, நாங்கள் ஒங்களே உபசறிச்சது சறியில்லேயா?

செல் :- ஐயோ கருணா அக்கா! நீங்கள் எங்களை வாடைக்காறர் போலை நடத்தேல்லை! சொந்தக்காறர் போலையல்லோ நடத்தினியள்! விருந்துகள் வைச்சியள்!

தரு :- விருந்து சாப்பிட்டுச் சாப்பிட்டே, எங்களுக்கு வயிறு வெடிச்சுப் போச்சு! *(சிரிக்கிறார்)*

கருண:- நீங்கலுங் எங்கலுக்கி விறுந்து வைச்சதுதானே செல்வா? *(சிரக்கிறாள்)*

செல் :- கதிர்காமத்துக்கு கூட்டீட்டுப் போனியள். இல்லாட்டா, நாங்கள் கதிர்காமத்தையே பாத்திருக்கமாட்டம்!

தரும :- செலவும் கூடிப்போச்சு. வீண் செலவு!



படிப்பகம்

padippakam



குண :- நாங்க என்ன செய்யலாம்? மச்சாங் தர்மா, இப்ப கொழும்பிலே உல்ல ரேட்டுக்கு வாடகை வாங்கினது!

தரும :- அதிலை பிழை இல்லை. அது சரி, நீங்கள் அனெக்ஸ் வாடகைக்கு குடுக்கவே இருக்கேல்லையே! எங்களுக்காகத்தானே தந்தியள்!

செல் :- நல்லபடியாய் நடத்தினியள். நீங்கள் செய்த உதவியள் எல்லாத்துக்கும் நன்றி!

தரும :- இனி இஞ்சை இருக்கச் சரியான பயம். கண்டபடி கைது செய்யிறாங்கள். பிள்ளையள் பயப்பிடுது!

குண :- தர்மா, பொலிஸ் வந்து உங்களுக்கு ஒரு கறைச்சலும் தராமே நாங் பாத்துக் கொண்டது!

தரும :- ஓம் குணா, நீங்கள் எங்களைப் பாதுகாத்தியள். ஆனா கொழும்பு முழுக்கக் கைதுகள்!

கரு :- அங்க யாப்பணேலும் பிடிக்கிறாங்கதானே ஆக்களே?

செல் :- சும்மா பிடிக்கிறதோ அக்கா? கற்பழிப்பும் செய்யிறாங்கள்!

குண :- அவங்கள எல்லாங் அறெஸ்ட் பண்ணி, வலக்கு போட்டது தானே எங்கட ஆண்டுவ!

தரும :- ஓம் ஓம் குணசேனா. ஆமி பொதுமக்கள், மத்தீலை வாழேக்கை, இதுகளைத் தவிர்க்கேலாது!

குண :- இஞ்சையும் ஆமி, பொலிஸ் சில நேறங் அப்புடித்தாங். *(சிரிக்கிறார்)*

தரும :- ஆமி காம்பிலை இருக்கவேணும்! பொலிஸ், பொலிஸ் ஸ்ரேஷன்லை இருக்க வேணும்! அப்பதான் பொதுமக்கள் நிம்மதியாக இருக்கலாம்!

குண :- போர் நடக்கற நேரத்தில அது சறிவாறது இல்லே தருமராசா! சமாதானங் வந்தாதாங் அது சறிவாறது!

கரு :- சமாதானங் கொண்டுவாறது தாங் அரசாங்கத்திண்ட நோக்கங்!

தரும :- போராலை சமாதானத்தை கொண்டுவர முடியாது. சமாதானமான பேச்சுவார்த்தை மூலம்தான், சமாதானத்தைக் கொண்டுவரலாம். உலகம் முழுக்க அப்பிடித்தான் நடந்திருக்கு!

குண :- எங்கட அரசாங்கத்திண்ட திட்டங் அதுதாங். ஜனாதிபதி சமாதான திட்டங்தானே குடுத்திருக்கு?

தரும :- அது நல்லது! அதிகார பரவலாக்கல் திட்டம்! ஆனா அதை இனி பாராளுமன்றத்திலை நிறைவேற்றவேணுமே?

கரு :- பாஸ்பண்ணி எல்லாங் சறிவாறது! எல்லாறுக்குங் இந்த நாட்டிலே உறிமை இறுக்கு!

குண :- சிங்கல மக்கலுக்கு மட்டுந்தாங் இந்த நாடு சொந்தங் எண்டு நினைச்சதாலேதாங், சண்டே வந்தது!



படிப்பகம்

padippakam



செல் :- எல்லாருக்கும் இந்த நாடு சொந்தம் எண்டதை ஏற்றுக்கொண்டா, சண்டை இல்லை. சமாதானமாக வாழலாம். *(சிரிக்கிறாள்)*

தரும :- மச்சான் குணசேனா, ஆயிரக் கணக்கான வருஷங்களாக சிங்களவரும் தமிழரும் இந்த நாட்டிலை ஒற்றுமையாக வாழ்ந்தவைதானே? அன்னியர் ஆட்சிக் காலத்திலை ஒரு சண்டையும் இல்லை! சுதந்திரம் வந்த பிறகுதான் சண்டையும் வந்தது!

குண :- நாங்கள் சிங்கல ஆக்கல்தாங் பிழை விட்டது! எல்லா இனங்களுக்கும் இந்த நாடு சொந்தங். எல்லாருங் இங்கே வாலவேனும் எண்டு ஏத்துக் கொண்டா, சமாதானமாக ஒத்துமையா வாளலாம்! *(சிரிக்கிறார்)*

கரு :- அதேதாங் ஜனாதிபதி செய்ய போறது!

தரும :- எங்களுடைய உரிமையைத் தந்துட்டா, பிறகு நாங்கள் சண்டை பிடியாமல் ஒற்றமையாக வாழலாம். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறம்!

குண :- அந்த நாள் வாறது தர்மா. கட்டாயம் வாறது!

தரும :- அந்த நல்ல நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறம்!

செல் :- சரி போட்டுவாறம், கருணாவதி அக்கா, குணசேனா அண்ணை.

தரும :- சறி போட்டு வாறம் குணா!

குண :- எப்ப புறப்படறது தர்மா?

தரும :- நாளைக்கு.

குண :- அப்ப நாங்களும் வாறது, பிறியாவிடை சொல்ல. *(சிரிப்பு)*

## காட்சி - 09

***இடம் : தருமராசா குடியிருக்கும் அனெக்ஸ்***

தரும :- போட்டுவாறன் குணா!

செல் :- போட்டுவாறம் கருணா அக்கா!

கரு :- *(கவலையாக)* செல்வா! நான் உங்கலுக்கு எடங் தர மறுத்தன். இவருக்காகத்தாங் தந்தன். இந்த ஒறு வறியங் ஒங்களோட பலகின பொறகு, உங்கலே பிறியிறது கவலையாய் இறுக்கு!



படிப்பகம்

padippakam



செல் :- எங்களை நல்ல படியாக உபசரிச்சியள். உங்களை விட்டுப் பிரியிறது எங்களுக்கும் ஒரு மாதிரியாகத்தான் இருக்கு! என்ன செய்யிறது கருணா அக்கா? எங்கடை இடத்துக்குப் போகவேணுமே!

கரு :- செல்வா, இந்த நாட்டில எல்லா எடம் எல்லாறுங்குங் சொந்தங்!

செல் :- ஆனா, எங்கடை வீடு யாழ்ப்பாணத்திலைதானே இருக்குது? அதைக் காப்பாற்ற நாங்கள் போகவேணும். அப்பதானே நாங்கள் அதிலை இருக்கலாம்? எங்கள் பிரதேச அதிகாரத்தை எங்களிட்டைத் தந்துட்டா, நாங்கள் சமாதானமாக வாழத் தயார் கருணாவதி அக்கா!

தரும :- மச்சான் குணசேனா! யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதிதானே? நான் வேறை எங்கையும போகமாட்டன்! இந்த நாட்டிலை தான் இருப்பன்!

சாந் :- இஞ்சை கஷ்டம் இல்லாமல் வந்து போகக்கூடிய வசதி வருகிறபொழுது, வருவம் மாமா!

ரமண :- தேவை ஏற்படுகிற பொழுது வருவம் மாமி!

குணசேனாவும், கருணாவதியும் :- இந்த நாடு இங்க வாலூற எல்லாறுங்குங் சொந்தங்!

தருமராசாவும், செல்வராணியும் :- இது எங்களுடைய நாடு! எங்கள் நாடு!

***இலங்கை வானொலி*** ***7.11.1998***



படிப்பகம்

padippakam



1995ஆம் ஆண்டு இலங்கை வானொலி நடத்திய, சானா ஞாபகார்த்த நாடகப் போட்டியில், மூன்றாம் பரிசு பெற்ற நாடகம்.

# நாடகம்
# கல்வியா? கனடா கல்யாணமா?

## பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அமரேசன் | – | அப்பா |
| 2. | பரமேசுவரி | – | அம்மா |
| 3. | ராஜினி | – | அவர்களது மூத்த மகள் |
| 4. | சிந்துஜன் | – | அவர்களது மகன் |
| 5. | வளர்மதி | – | அவர்களது இளைய மகள் |
| 6. | சுபாஜினி | – | அவர்களது இளைய மகள் |
| 7. | துளசி | – | அவர்களது இளைய மகள் |
| 8. | தம்பிப்பிள்ளை | – | கல்யாண தரகர் |
| 9. | ராஜ்குமார் | – | கனடா மாப்பிள்ளை |

## காட்சி - 1
***இடம் : அமரேசன் வீடு***

ராஜினி :- *(வந்து)* அப்பா எனக்கு பல்கலைக்கழகம் கிடைக்குது!

அமரேசன் :- என்ன ராஜினி. ஏ.எல். றிசல்ற் வந்துட்டுதா?

ராஜினி :- வெட்டுப்புள்ளி வந்திட்டுது அப்பா. எனக்கு வாசிற்றி கிடைக்கும்!

அமரேசன் :- *(சந்தோஷமாக)* கொங்கிறாட்ஸ்! பாராட்டுக்கள் ராஜினி!

பரமேசுவரி :- *(உள்ளே இருந்து வருகிறாள்)* என்ன ராஜினி கம்பஸ் கிடைக்குதா உனக்கு?

ராஜி :- *(மகிழ்ச்சியாக)* ஓம் அம்மா. கட்டாயம் கிடைக்கும்! இவ்வளவு காலமும் படிச்ச படிப்புக்குப் பலன் கிடைச்சுட்டுது!

பர :- சும்மா படிப்பா, ராப்பகல் மூச்சுவிட நேரமில்லாத படிப்பல்லா?

ராஜி :- எல்லாப் பிள்ளையளும் அப்பிடித்தானம்மா படிக்கிறது!

அம :- எல்லாருக்கும் வாசிற்றி கிடைக்கிறதில்லை. உனக்கு கிடைக்குது! லக்தான்!

ராஜி :- லக் இல்லை அப்பா. என்ரை படிப்பு! *(லேசான சிரிப்பு)*

சிந்து :- *(வந்து மகிழ்ச்சியாக)* என்னம்மா, அக்காவுக்கு கம்பஸ் கிடைக்குதா?

பர :- ஓமடா சிந்துஜன்.



படிப்பகம்

வளர் :- *(வந்து)* என்ன அக்காவுக்கு கம்பஸ் கிடைக்குதோ?

அம :- ஓமடி வளர்மதி. மூத்த பிள்ளைக்கு வாசிற்றி கிடைச்சுட்டுது. இனி மற்றப் பிள்ளையளுக்கும் கிடைக்கும்!

சிந்து :- அப்பா! நான் இப்பவே ஆயத்தம் வாசிற்றி போக. *(சிரிக்கிறான்)*

வளர் :- நானும் றெடி கம்பஸ் போக! *(சிரிக்கிறாள்)*

அம :- சும்மா கிடையாதடி வளர்மதி. கொக்கா என்ன மாதிரிப் படிச்சவள் தெரியுமே? நீங்களும் அப்பிடிப் படியுங்கோ!

வளர் :- படிக்கிறம் தானே அப்பா!

ராஜி :- எனக்கு மூண்டாம் முறை தான் கம்பஸ் கிடைச்சிருக்கு!

சிந்து :- நான் இந்த முறை, ரண்டாம் முறையே எடுப்பட்டுக்காட்டுறன் பாரக்கா!

வளர் :- நான் முதலாம் முறையே எடுபட்டுக்காட்டுறன்! *(சிரிக்கிறாள்)*

அம :- கனக்கப் புளுகாதேங்கோ, போய்ப் படியுங்கோ!

பர :- பாஸ் பண்ணி வந்தா, ஒரு வாத்தி வேலையாவது கிடைக்கும்!

அம :- ஏன் வாத்திவேலை எண்டு குறைவா ஆசைப்படுறாய் பரமேஸ்? நிர்வாக சேவேலை சேர்தா என்ன? ஒரு லெக்சரராக வந்தால் என்ன?

பர :- உங்களுக்கும் எண்ணம் தான் மகளைப் பற்றி! *(சிரிக்கிறாள்)*

அம :- பரமேஸ்! உவையெல்லாம் என்ன ஆகாயத்தாலை வந்தவையே? கிளாஸ் எடுத்தா, எதுகும் கிடைக்கும்!

ராஜி :- எனக்கு ஒரு கிளாசும் வேண்டாம். பாஸ் பண்ணினாலே போதும்!

சிந்து :- வாசிற்றீக்கை நுழையிறது தானக்கா கஷ்டம். உள்ளை போயிட்டா, படிக்கிறது சுகம்!

அம :- சரியடா சிந்துஜன், வளர்மதி, போய்ப் படியுங்கோ! *(சிந்துஜனும், வளர்மதியும் உள்ளே போகிறார்கள்)*

பர :- இஞ்சை பிரிந்தா வாறா. பிள்ளை பிரிந்தா! உமக்கும் கம்பஸ் கிடைக்குதா?

பிரிந் :- ஓம் பரமேஸ் மாமி! எனக்கும் ராஜினிக்கும் ஒரே மாக்ஸ் தானே? கிடைக்குது!

பர :- சந்தோஷம் பிரிந்தா!

பிரிந் :- ஆட்ஸ் தானே மாமி!

அம :- ஆட்ஸ் எண்டாப்போலை, எல்லாருக்கும் கிடைக்குதா பிள்ளை? பிறகு எல்லாருக்கும் தானே உத்தியோகம் கிடைக்குது?

ராஜி :- அதெல்லாம் வேண்டாம் அப்பா. இப்ப படிச்சாலே போதும்!

பிரிந் :- ஓமடி ராஜி!

ராஜி :- அம்மா! நாங்கள் ஒரு றவுண்ட் போய், எங்கடை மற்றச் சினேகிதியளைச் சந்திச்சுக் கொண்டு வாறம்.

padippakam



பர :- பொறு பிளளை பிரிந்தா ரீ குடிச்சுட்டுப் போகலாம்.

பிரிந் :- இப்ப ஏன் மாமி ரீ யை? நாங்கள் வாறம்.

பர :- உங்களுக்கு ரீ வேண்டாமெண்டாலும், சோதினை பாஸ் பண்ணின சந்தோஷத்தைக் கொண்டாடத்தானே வேணும்? இந்தாருங்கோ பிள்ளையள் குடியுங்கோ! *(பரமேசுவரி ரீ கொண்டு வந்து கொடுக்கிறாள்)*

பிரிந் :- *(ரீ குடித்து விட்டு)* சரி வாறம் மாமி!

ராஜி :- போட்டுவாறம் அம்மா! *(போகிறார்கள்)*

அம :- ராஜினி வாசிற்றிக்கு எடுபட்டுட்டாள். இனி மற்றப் பிள்ளையளின்ரை கவலைதான்!

பர :- கவலை இல்லை எண்ணுறியள்! அவளுக்கு கலியாணம் கட்டி வைக்க வேண்டாமே? *(சிரிக்கிறாள்)*

அம :- நீ அதை ஏன் இதுக்கை கொண்டாறாய்? இப்ப அவள் படிக்கட்டும்! இந்தச் சந்தோஷத்தை அனுபவியன்!

பர :- கலியாணத்தைப் பற்றியும் யோசிக்கத்தானே வேணும்? ராஜிக்கு வயது இருபது.

அம :- ஓ அது இருக்கட்டும். அவள் படிக்கட்டும்.

பர :- ஓ, படிக்கட்டும்! படிக்கட்டும்! நான் சும்மா சொன்னன்!

## காட்சி - 2

***இடம் : அமரேசன் வீடு***

அம :- பரமேஸ்! தம்பிப்பிள்ளை வருது .... கலியாணத் தரகர்... ஏன் இஞ்சை வாறார்...?

பர :- பொறுங்கோவன். வரட்டும் கேப்பம். *(தம்பிப்பிள்ளை வருகிறார்)*

அம :- தம்பிப்பிள்ளை! வா, வா, இரு. .... என்ன விசேஷம் இருந்தாப்போலை இந்தப்பக்கம்?

தம்பி :- அமரேசன் அண்ணை! எல்லாம் அலுவலோடை தான் வந்திருக்கிறன்! *(சிரிக்கிறார்)*

அம :- அது தானே! நீ சும்மா வரமாட்டியே! சொல்லு விஷயத்தை!

தம்பி :- பொடியன் ஒருத்தன் கனடாவிலை இருந்து வந்திருக்கிறான். அவனுக்கு கலியாணம் செய்ய உடனடியாக ஒரு பொம்பிள்ளை தேவை!

பர :- உடனடியாகவா அண்ணை? *(சிரிக்கிறாள்)*

அம :- எங்களிட்டை பொம்பிளை இல்லையே தம்பிப்பிள்ளை!

தம்பி :- ஏன் இல்லை! உங்கடை மூத்த மகள் இருக்கிறாவல்லோ?

அம :- ஆர் ராஜினியோ? அவள் பல்கலைக்கழகத்துக்குப் போப் போறாள் படிக்க.



படிப்பகம்

padippakam



தம்பி :- அதைப்பற்றிப் பிறகு பேசுவம் அமரேசன் அண்ணை. *(சிரித்து)* எங்களுக்கு இப்ப உடனடியாப் பொம்பிளை தேவை. பொடியன் இந்த மாத முடிவிலை கனடா திரும்ப வேணும். என்ன சொல்லுறியள்?

அம :- தம்பிப்பிள்ளை! ஏன் என்னிட்டை வந்தீருக்கிறியள்? அதுகும் கடைசி நேரத்திலை!

தம்பி :- கலியாணம் பொருந்துறதெண்டாச் சும்மாவே அமரேசன் அண்ணை? இடம் பிடிக்க வேணும். சாதகம் பொருந்த வேணும். ஒண்டும் பொருந்தேல்லை. நான்தான் அவைக்குச் சொன்னது உங்களிட்டைப் பொம்பிளை இருக்கெண்டு! அதுக்குப் பிறகு பொடியன் உங்கடை பிள்ளையைப் பாத்திருக்கிறான். அவனுக்குப் பொம்பிளை பிடிச்சுக் கொண்டுது! *(சிரிக்கிறார்)*

பர :- ஏன் ராஜினிக்கு என்ன குறை? நல்ல வடிவான பொம்பிளை என்னைப் போலை!

அம :- ஓ உன்னைப்போலை ....? *(சிரிக்கிறார்)*

பர :- ஏன் நான் வடிவில்லையே? என்ரை அழகிலை மயங்கியல்லே .... *(சிரிக்கிறாள்)*

அம :- பரமேஸ், அதெல்லாம் அந்தக் காலத்துக் கதை! *(சிரிக்கிறார்)*

தம்பி :- அமரேசன் அண்ணை, இப்ப இந்தக் காலத்துக்கு வாருங்கோ! என்ன சொல்லுறியள்?

அம :- எங்களுக்குச் சொல்லாமலே, பொம்பிளையும் காட்டிப் போட்டாய்! *(சிரிக்கிறார்)*

தம்பி :- இதென்னண்ணை, றோட்டாலை போற பிள்ளையை ஆரும் பாக்கலாம் தானே? *(சிரிக்கிறார்)*

பர :- எங்கடை அழகான பொம்பிளை! ஆரும் பாக்கட்டு. பாத்ததும் நல்லதாப் போச்சு! *(பெருமையாக)* அதாலை தானே பொடியன் ஆள் விட்டிருக்கிறான், கலியாணம் பேச! *(சிரிக்கிறாள்)*

அம :- பொடியன் என்ன வேலை?

தம்பி :- மற்றப் பொடியள் மாதிரி இல்லை. இவன் என்ஜினியர்! அங்கை கனடாவுக்குப் போய்ப் படிச்சு, என்ஜினியரானாவன்!

அம :- தம்பிப்பிள்ளை! உப்பிடித்தான் எல்லாரும் சொல்லுறது! *(சிரிக்கிறார்)*

பர :- நீங்கள் சும்மா இருங்கோ! வெளிநாடு போன பொடியள் செய்யிற வேலையளைக் கேட்டுக்கொண்டு .... அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்!

தம்பி :- தங்கச்சி பரமேசுவரி! உள்ளது தான்! பொடியன் உழைச்சு, வீடு, கார் எல்லாம் வாங்கியிருக்கிறான்!



படிப்பகம்

padippakam



பர :- அப்ப நல்ல மாப்பிளையல்லோ? சொல்லுங்கோ அண்ணை. உவை ஆர் பகுதி?

தம்பி :- அதெல்லாம் நல்ல இடம். வட்டுக்கோட்டை. நீங்கள் விசாரிக்கலாம். இந்தாருங்கோ குறிப்பு, பாருங்கோ.

அம :- சீதணம் என்ன கேக்கினம்?

தம்பி :- ஒரு சதமும் சீதணம் வேண்டாமாம்! பொம்பிளை தந்தாலே போதுமாம். கூட்டீட்டுப் போற சிலவையும் அவனே ஏற்றுக் கொள்ளுறானாம்!

பர :- *(உற்சாகமாக)* அப்ப சோக்கல்லோ! இப்பிடி ஒரு இடம் கிடைச்சிருக்கா? நீங்கள் சம்மதம் எண்டு சொல்லுங்கோ!

அம :- என்னைக் கேளாமலே சம்மதம் குடுத்துட்டாய்! *(சிரிக்கிறார்)*

பர :- இதுக்குச் சம்மதம் குடாமல், வேறை எதுக்குச் சம்மதம் குடுக்கிறது? *(சிரிக்கிறாள்)*

அம :- அவள் பல்கலைக்கழகப் படிப்புக்கு எடுபட்டிருக்கிறாள்... குடும்பத்திலை மூத்த பிள்ளை...

பர :- அதுதான் இன்னும் நாலு பிள்ளையள் இருக்கே ! சிந்துஜன், வளர்மதி, சுபாஜினி, துளசி.... அதுகளைப் படிப்பியுங்கோவன்!

அம :- அதுகள் வாசிற்றிக்கு எடுபடுதுகளோ என்னவோ....?

பல :- எல்லாம் எடுபடுங்கள்! இது ஒரு சுவீப்! இதை விடமுடியாது!

அம :- எல்லாம் வடிவா விசாரிக்க வேணும். பொடியன்ரை பேரென்ன தம்பிப்பிள்ளை?

தம்பி :- என்னண்ணை கலியாணம், கிலியாணம் செய்திட்டு வந்திருப்பனோ எண்டு விசாரிக்கப் போறியளா? நல்லா விசாரியுங்கோ! நான் விபரமெல்லாம் கொண்டுவந்து தாறனே! பொடியன்ரை பேர், நல்லகுமார்! சின்னத்துரை மாஸ்ரர் பகுதி.

பர :- அவன் சீதணம் ஒண்டும் வேண்டாம் எண்டு சொல்லூறான். பிறகு ஏன் சந்தேகப்படுறியள்? தம்பிப்பிள்ளை அண்ணை எங்களுக்குப் பூரண சம்மதம்!

அம :- பிள்ளையைக் கேளாமல் சம்மதம் சொல்லூறாய்!

பர :- கரும்பு தின்னக் கைக்கூலியா? கனடாவுக்குப் போகக் கசக்குமே? *(சிரித்து)* அவள் சொல்ல முன்னம் சரி எண்ணுவள்!

தம் :- உடனடியாக அலுவல் முடிக்கவேணும்! பொடியன் இந்த மாதம் முடியக் கனடா திரும்பவேணும்!

பர :- உடனடியாக விஷயத்தை ஒப்பேற்றுறது தான் எங்களுக்கும் விருப்பம். தம்பிப்பிள்ளை அண்ணை. நீங்கள் தொடர்ந்து கருமங்களைக் கவனியுங்கோ!

அம :- எதுக்கும் பிள்ளையையும் ஒரு சொல்லுக்கேக்க வேணும். தம்பிப்பிள்ளை ரண்டு நாளிலை வாவன்!

தம்பி :- சரி அமரேசன் அண்ணை. நான் வாறன். *(போகிறார்)*



படிப்பகம்

padippakam



## காட்சி - 3

***இடம் : அமரேசன் வீடு***

பர :- ஒரு கலியாணப் புறப்போசல் வந்திருக்கடி ராஜினி.

ராஜி :- *(வியப்புடன்)* புறப்போசலோ அம்மா?

பர :- ஓமடி, கனடா மாப்பிளை!

ராஜி :- அதுக்கு, எனக்கென்ன?

பர :- உனக்குத்தானடி கலியாணம்!

ராஜி :- அம்மா! எனக்கு இப்ப கலியாணம் வேண்டாம்! நான் படிக்கப் போறன்!

அம :- பரமேஸ்! சரி, கதை முடிஞ்சுது!

பர :- நீங்கள் சும்மா இருங்கோ! என்ஜினியர் மாப்பிள்ளை?

ராஜி :- *(அலட்சியமாக)* அதுக்கு எனக்கு என்னம்மா?

பர :- உழைச்சு, வீடு, கார் எல்லாம் வாங்கி வைச்சிருக்கிறான்!

ராஜி :- உழைச்சா வாங்கலாம் தானே?

அம :- உதுகளைச் சொல்லி, உனக்கு ஆசை வருதோ எண்டு பாக்கிறா கொம்மா! *(சிரிக்கிறார்)*

ராஜி :- அப்பா! எனக்குப் படிக்கத்தான் ஆசை!

பர :- கூட்டிக் கொண்டு போற சிலவும் அவனோடை! சீதணமும் கேக்கேல்லை!

அம :- பிள்ளை! நாங்களாகவே கனடாவுக்குப் போறதானா, இப்ப பத்து லட்சம் வேணும்!

ராஜி :- நான் போக விரும்பினாத்தானே அப்பா? *(சிரிக்கிறாள்)*

பர :- எத்தினை பேர் போட்டாளவை! சொல்ல முன்னம் பறந்துடுவளவை!

ராஜி :- அம்மா! அவளவை சும்மா இருக்கிற ஆக்கள். வாழ ஆசைப்பட்டு, காசுக்கு ஆசைப்பட்டு ஓடுதுகள்! நான் பல்கலைக்கழகம் போய்ப் படிக்கத்தான் ஆசைப்படுறன்!

பர :- இல்லையடி ராஜி, பட்டதாரியளும் போறாளவை. உத்தியோகத்திலை இருக்கிறவளவை கூட, பாக்கிற வேலையைச் சுளட்டி எறிஞ்சுட்டு ஓடுறாளவை!

ராஜி :- நல்லா ஓடட்டும்!

அம :- பிள்ளை, ராஜினி! இப்ப மூண்டு வரியம் கஷ்டப்பட்டுப் படிக்க வேணும். பிறகு உத்தியோகம் தேடவேணும். இது போன உடனையே வாழலாமல்லே?

வளர் :- *(வந்து)* அவளவை படிச்சுப் பாத்து, உத்தியோகம் பாத்து, அதுகள் கஷ்டமெண்டு விட்டுட்டு ஓடுறாளவை. அக்காவும் இனி படிச்சுப்பாத்து, கஷ்டமாய் இருந்தா, பிறகு போவ கனடாவுக்கு! *(சிரிக்கிறாள்)*



படிப்பகம்

padippakam



ராஜி :- தங்கச்சி வளர்மதி, எனக்குப் படிக்கிறது கஷ்டமில்லை. சந்தோஷம்! 39

பர :- உப்பிடிக் கஷ்டப்பட்டுப் படிச்சுப் பாஸ்பண்ணீட்டும், பிறகு ஒருத்தனைக் கட்டத்தானே வேணும்?

ராஜி :- அதைப் பிறகு பாப்பம் அம்மா!

பர :- பிறகு இந்த மாப்பிளை போயிடுவனே!

ராஜி :- அம்மா! உலகத்திலை உவன்தானா ஆக ஒரு மாப்பிளை? *(நக்கல் சிரிப்பு)* உவன் போனா, இன்னொருத்தன்!

பர :- ஐஞ்சு லட்சம் கேப்பன் இனாம்!

ராஜி :- நான் கேளாதவனைக் கட்டுறன் அம்மா! *(சிரிக்கிறாள்)*

அம :- அப்பிடி ஒரு மாப்பிளை கிடைக்காமலும் போகலாம். உங்கை எத்தினை பேர் கட்டாமல் இருக்கிறாளவை?

ராஜி :- அப்பா! கிடைக்காட்டா, நான் கட்டாமல் இருப்பன்!

பர :- ராஜி! உனக்குக் கீழை மூண்டு பெட்டையள் இரக்கிறாளவையடி. அவளவையையும் யோசிச்சு நட!

ராஜி :- அப்ப, என்னை விட்டுட்டு, தங்கச்சியளுக்குக் கட்டி வையுங்கோ!

பர :- அதுக்குக்கூட எங்களிட்டைக் காசில்லையேடி!

ராஜி :- அதுக்கு நான் ஒண்டும் செய்யேலாது!

வளர் :- நீ கனடாவுக்குப் போ அக்கா!

ராஜி :- ஏன் வளர்மதி என்னைக் கலைக்கிறாய்? நான் போட்டா, இருக்கிற சீதனமெல்லாம் உனக்கு வரும் எண்டோ? *(சிரிக்கிறாள்)*

வளர் :- *(தழுதழுத்து)* சத்தியமா நான் அப்பிடி நினைக்கேல்லை அக்கா! இஞ்சை எங்களோடை இருந்து கஷ்டப்படாமல், நீ போய், சந்தோஷமாய் வாழட்டும் எண்டு தான், சொல்லுறன்! உனக்காகத்தான் சொல்லுறன் அக்கா!

ராஜி :- தங்கச்சி வளர்மதி! எனக்கு இஞ்சை இருந்து படிக்கிறது தான்ரி சந்தோஷம்!

சிந்து :- நீ கனடாவுக்குப் போ அக்கா!

ராஜி :- நீ ஏன்ரா அப்பிடிச் சொல்லுறாய் சிந்துஜன்?

சிந்து :- நீ கனடாவுக்குப் போனாத்தானே அக்கா, பிறகு நானும் அங்கை வரலாம்! *(சிரிக்கிறான்)*

வளர் :- அண்ணேன்ரை ஆசை! *(சிரித்து)* சுயநலம்! சுயநலம்!

சிந்து :- தங்கச்சி! நான் கனடா போனா, காசுழைச்சு உங்களுக்கெல்லாம் சீதணம் அனுப்புவனல்லே? அதுக்குத்தானடி நான் போக விரும்பூறன்! பொது நலம்! பொது நலம்! *(சிரிக்கிறான்)*

வளர் :- எங்களுக்கு நீ ஒரு காசும் அனுப்பவேண்டாம்!



படிப்பகம்

சிந்து :- நான் காசனுப்பாட்டா, நீ சீதணத்துக்கு என்னடி செய்வாய்?

வளர் :- நான் எதையோ செய்வன்!

அம :- டேய் சிந்துஜன்! நீ படிக்கிறதை விட்டுட்டு, கனடா போற பிராக்கே இப்ப பாக்கப்போறாய்? போய்ப் படியடா!

சிந்து :- *(நகைச் சுவையாக)* நல்லதுக்குக் காலமில்லை. சரி நான் வாறன்! *(போகிறான்)*

ராஜி :- அப்ப குடும்பத்தினர் எல்லாரும் என்னைப் போகச் சொல்லித்தான் சொல்லூறியள்! இப்ப சுபாஜினியும், துளசியும் நிண்டா, அவளவையும் போகத்தான் சொல்லுவளவை!

அம :- நான் போகச் சொல்லி வற்புறுத்தேல்லைப் பிள்ளை. நீ விருப்பமானால் போ, அல்லது விடு!

ராஜி :- அப்பா! நான் பல்கலைக்கழகம் தான் போகப்போறன்!

பர :- இப்ப முடிவு கட்டாதை! கொஞ்ச நாள் தாறம். நல்லா, யோசிச்சு முடிவு சொல்லு!

ராஜி :- இனி யோசிக்க ஒண்டும் இல்லை. எல்லாம் தீர்மானிச்சாச்சு! சரி வாறன்! *(போகிறாள்)*

பர :- *(கவலையாக)* என்ன இப்பிடிச் சொல்லீட்டுப் போறாள்?

அம :- நான் சொன்னனே பரமேஸ்!

பர :- என்ன ராஜியை அவளின்ரை எண்ணத்தக்கே விடப் போறியளா?

அம :- வேறு வழி இல்லை!

பர *(ஆசையாக)* சீதணம் இல்லாத கலியாணம்! உழைப்புக்காற மாப்பிளை ....

அம :- மற்றவேன்ரை காசுக்கு ஆசைப்படாதை!

பர :- *(கோபமாக)* நாலு பெட்டையள் பெத்து வைச்சிருக்கிறியள்! அதை மறந்துடாதேங்கோ!

அம :- ஏதோ இருக்கிறதைக் குடுத்துக் கரை சேர்ப்பம்! இனி லட்சங்கள் இல்லாதவை வாழுறதில்லையா?

பர :- *(இரந்து)* ஒருத்திக்குக்கூட எங்களிட்டைச் சீதணம் இல்லை! ஒரு பெட்டையையாவது அனுப்புவம்!

அம :- அவள் தொடுகிலும் முடியாதெண்டு சொல்லூறாள்! ஆ! தம்பிப்பிள்ளை வருது!

பர :- பொறுங்கோ! அந்தாளுக்கு முற்றுச் சொல்லாதேங்கோ! ரண்டு நாள் தவணை கேப்பம்!
*(தம்பிப்பிள்ளை வருகிறார்)*

அம :- தம்பிப்பிள்ளை வா, வா, இரு. என்ன நாளைக்கல்லோ வாறமெண்டனி? இண்டைக்கே வந்திட்டாய்?

தம்பி :- மாப்பிளை வீட்டுக்காறர் அவசரப்படுத்திச்சினம், போய்ப் பாத்தா எண்டு...... *(சிரிக்கிறார்)*

padippakam



பர :- நாங்கள் இன்னும் ராஜியோடை பேசேல்லை. ரண்டு நாள் கழிச்சு வாவன் அண்ணை!

தம்பி :- என்ன இன்னும் பேசேல்லையா? தங்கச்சி! நீங்கள் உப்பிடிக் கடத்திக் கொண்டு நிண்டியளெண்டா, இந்த மாப்பிளையை ஆரன் தட்டிக்கொண்டு போயிடுவங்கள்! *(சிரிக்கிறார்)*

பர :- இல்லை அண்ணை, நாங்கள் கட்டாயம் ரண்டு நாளிலை முற்றுச் சொல்லுவம்!

தம்பி :- சரி அமரேசன் அண்ணை, ரண்டு நாளிலை வாறன்! *(போகிறார்)*

## காட்சி - 4

***இடம் : பிரிந்தா வீடு***

பிரி :- வா, வா ராஜினி, என்ன வாசிற்றிபோக எல்லாம் ஆயத்தமா?

ராஜி :- எல்லா ஆயத்தமும் செய்த பிறகு, ஒரு புதுப்பிரச்சினை வந்திருக்கடி பிரிந்தா. என்னாலை தீர்மானிக்க முடியேல்லை. அதுதான் உன்னிட்டை வந்தனான்.

பிரிந் :- என்னடி பிரச்சினை? சொல்லு!

ராஜி :- ஒரு கலியாணப் புறப்போசல் வந்திருக்கு. கனடா மாப்பிளை. அங்கை போய்ப் படிச்சு என்ஜினியர் ஆனவராம். சொந்த வீடு, கார் எல்லாம் இருக்காம்.

பிரிந் :- அப்ப போவன்ரி.

ராஜி :- என்னடி பிரிந்தா, நீயும் இப்பிடிச் சொல்லூறியே?

பிரிந் :- ராஜி! நான் வேறை என்னத்தைச் சொல்ல? *(சிரிக்கிறாள்)*

ராஜி :- பெண் எண்டா, ஆரோ ஒருத்தனைக் கட்டி பிள்ளையளைப் பெத்து வழ்ந்தாச் சரியா?

பிரிந் :- கலியாணம் கட்டத்தானேடி வேணும்?

ராஜி :- பெண் படிக்க வேண்டாமா? அவளுக்கு வேறை ஆசையள், கனவுகள், லட்சியங்கள் இருக்கக்கூடாதா?

பிரிந் :- என்னென்ன ஆசையளை எல்லாம் தேக்கி வைச்சிருக்கிறாயடி மனதிலை? (சிரிக்கிறாள்)

ராஜி :- நான் பல்கலைக்கழகம் போய், படிக்க ஆசைப்படுறனடி!

பிரிந் :- ஏன்ரி வீணாப் படிச்சுக் கஷ்டப்படுறாய்? வாழ்க்கை அழைக்குது! போ கனடாவுக்கு! *(சிரிக்கிறாள்)*

ராஜி :- பிரிந்தா! நான் வெறும் சோதினைக்காகப் படிக்கேல்லையடி! எனக்குச் சரியான அறிவுப்பசி! *(ஆசையாக)* வாசிற்றிக்குப் போய் விரிவுரையாளர் சொல்லுறது எல்லாத்தையும் கேட்டுப் படிக்கவேணும், நூல்நிலையத்திலை உள்ள அத்தினை புத்தகங்களையும் வாசிக்க வேணும் எண்டு எவ்வளவு கனவுகள் கண்டன்!



படிப்பகம்

பிரிந் :- நூல் நிலையத்திலை உள்ள புத்தகங்கள் எல்லாத்தையும் படிக்கிறதெண்டது முடியாத காரியம் ராஜி. அங்கை லெக்சரேஸ் தாற நோட்சைப் படிக்கவே நேரம் சரியாம்!

ராஜி :- மனம் இருந்தால் படிக்கலாமடி பிரிந்தா. இரவு பகலாப் படிச்சா!

பிரிந் :- *(வியப்புடன்)* ஓ அந்த மாதிரிப் படிக்கப்போறியா? படிச்சுப் பட்டம் எடுத்து........ பிறகு......

ராஜி :- வெளி உலகத்திலை வந்து, எங்கடை அறிவைப் பிள்ளையளுக்குப் புகட்டுறது தான்!

பிரிந் :- பிறகு கலியாணம் கட்டத்தானேடி வேணும் ராஜி! அவன் சீதணமல்ல. இனாம் கேப்பன், பத்து லட்சம்! *(சிரித்து)* அப்ப என்ன செய்வாய்?

ராஜி :- கட்டாமல் இருக்கிறதுதான்!

பிரிந் :- ராஜி! old maid எண்டு சொல்லுவினமடி அப்பிடியான, ஆக்களை! வயதான மாது! அப்பிடி இருக்கப்போறியா? *(சிரிக்கிறாள்)*

ராஜி :- அதிலை என்ன குறை பிரிந்தா? படிப்பிருக்கு. உழைப்பிருக்கு. பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் குடுத்து, பயனுள்ள வழீலை நேரத்தைச் செலவிட்டுக் கொண்டு இருப்பன்! மற்றவை என்ன சொன்னா எனக்கென்ன?

பிரிந் :- நாலு சகோதரங்கள் இருக்கெண்டு சொன்னியேடி? நீ போனா, அதுகளையும் கூப்பிடலாம். அல்லது இருக்கிற சீதணத்தைக் கொண்டு அதுகளும் வாழும்! உன்ரை சகோதரங்களுக்காக நீ தியாகம் செய்யன்!

ராஜி :- நான் அவைக்கு உழைச்சுக் குடுப்பன்!

பிரிந் :- என்னத்தைக் குடுக்கப்போறாய்? நீ அங்கை போனா, அதுகளுக்கு எவ்வளவோ உதவியள் செய்யலாம்.

ராஜி :- நானே வாழுவனோ என்னவோ தெரியாது. வெளிநாடு போன பொடியங்களைப் பற்றிப் பலவிதமான கதையள் உலாவுது. குடிகாறனோ என்னவோ?

பிரிந் :- இந்த நாளிலை ஆர் தான் குடியாமல் இருக்கிறான்?

ராஜி :- வெளிநாடுகளிலை, என்ன கூத்துகள் ஆடினாங்களோ?

பிரிந் :- இஞ்சை இருக்கிறவங்கள் ஆடுற கூத்தெல்லாம் உனக்குத் தெரியுமோ? உங்கை எல்லாரும் விரும்பிப் போறாளவை! போனதிலை அதிகமானதுகள் சந்தோஷமாய் வாழுதுகள்!

ராஜி :- சிறை வாழ்க்கை! வெளீலை போய் வரேலாதாம். அவங்கள் போய் உழைச்சுக் கொண்டு வர, நாங்கள் வீட்டுக்கை அடைப்பட்டுக் கிடந்து, அவிச்சு அவிச்சு, குடுக்கிறது தான் வாழ்க்கை! *(நக்கல் சிரிப்பு சிரிக்கிறாள்)*

padippakam



பிரிந் :- இஞ்சையெண்டா உலாவித்திரியலாம். எல்லாரையும் உன்னரை அழகாலை மயக்கலாம்! *(சிரிக்கிறாள்)*

ராஜி :- போடி பிரிந்தா! நான் ஒருத்தரையும் மயக்கேல்லை!

பிரிந் :- ஏன் கண்ணன், ரவி, சசிதரன் . . . . . *(சிரிக்கிறாள்)*

ராஜி :- அவங்கள் என்ரை அழகிலை மயங்கினதுக்கு நான் என்ன செய்யலாம்? நான் ஒருத்தரையும் மயக்கேல்லை!

பிரிந் :- வாசிற்றிக்குப் போனா, கம்பஸ்சையே ஒரு கலக்கு கலக்கலாம்! பலரை மயக்கலாம்! (சிரிக்கிறாள்)

ராஜி :- பிரிந்தா! என்ரை அழகையிட்டு எனக்குப் பெருமைதான்! ஆனா, நான் ஆரையும் மயக்க விரும்பேல்லை! அதுக்காக நான் போகாமல் விட விரும்பேல்லை!

பிரிந் :- சரி உடனடியாக முடிவெடாதை! நல்லா யோசிச்சுச் செய்!

ராஜி :- உடனடியாகத்தான் முடிவு சொல்லட்டாம். மாப்பிளை இந்த மாதமே திரும்ப வேணுமாம்!

பிரிந் :- அப்ப போடி! நானெண்டாப் போயிடுவன்! *(சிரிக்கிறாள்)*

ராஜி :- *(நம்பாமல்)* உண்மையாகத்தான் சொல்லூறியா பிரிந்தா? படிப்பை விட்டுட்டுப் போவியா?

பிரிந் :- ஓ போவன்! உங்கை எத்தினை பேர் போட்டாளவை! படிப்பை விட, வாழ்வு தான் முக்கியம்!

ராஜி :- *(ஆவலாக)* அப்ப எனக்குப் பதிலா நீ போடி பிரிந்தா!

பிரிந் :- போடி! இது உனக்கு வந்த கலியாணம்!

ராஜி :- நான் விட்டுத்தாறன்! உண்மையாகத்தான் சொல்லூறன்!

பிரிந் :- ராஜி! உன்ரை அழகிலை அவர் மயங்கியிருக்கலாம்! உங்கடை குடும்பத்தை அவை விரும்பியிருக்கலாம். அந்தக் கதையை விடு! நான் சும்மா ஒரு கதைக்குச் சொன்னன். நீ போடி ராஜினி!

ராஜி :- இன்னும் ஆரோடையன் யோசிக்கவேணும்!

பிரிந் :- ஆரோடை யோசிக்கப் போறாய்?

ராஜி :- எங்களுக்கு தமிழ் படிப்பிச்ச மாஸ்ரர் பாலசுந்தரம்...

பிரிந் :- ஓமடி நல்ல அறிவும் அனுபவமும் உள்ளவர். சரியான ஆலோசனை கூறுவர். வா, நானும் வாறன். ஒரு நாளைக்குப் போவம்!

## காட்சி - 5

### *இடம் : அமரேசன் வீடு*

பர :- அப்ப என்னடி சொல்லூறாய் ராஜி?

ராஜி :- *(உறுதியாக)* அம்மா! நான் அண்டைக்கே என்ரை முடிவு சொல்லீட்டனே! இனி என்னோடை உதுபற்றிப் பேசாதை!

பர :- *(ஆசையாக)* பத்து லட்சமடி! உழைப்புக்காற மாப்பிளை!



படிப்பகம்

padippakam



ராஜி :- அம்மா! பத்து லட்சம் தானா வாழ்வு?

பர :- ஓமடி! புத்தகத்தை சப்புறதுதானடி வாழ்வு! *(சிரிக்கிறாள்)*

அம :- பரமேஸ்! அவள் தன்ரை முடிவு சொல்லீட்டாள். உதோடை உந்தக் கதையை விடு! விருப்பம் இல்லாத பிள்ளையை வற்புறுத்தக் கூடாது! எங்களிலும் வசதி குறைஞ்ச சனமும் வாழுதுதானே?

பர :- உன்ரை தங்கச்சிமாருக்காகத் தியாகம் செய்யன்ரி ராஜி!

ராஜி :- அம்மா! நான் அவைக்கு உழைச்சுக் குடுப்பன்.

பர :- *(நக்கலாக)* குடுப்பாய்! உழைச்சு உன்ரை பாடே பாக்கமாட்டாய்!

அம :- பரமேஸ்! அவள் வேண்டாமெண்டா, அவளோடை உந்தக்கதை பேசாதை!
*(வளர்மதியும் சிந்துஜனும் வருகிறார்கள்)*

வளர் :- *(உருக்கமாக)* அக்கா! நான் சும்மா சொன்னனான். எங்களுக்காக நீ தியாகம் செய்யாதை! உனக்கு விருப்பம் இல்லாட்டா, நீ போகாதை!

சிந்து :- அக்கா! எனக்கு கனடா போக விருப்பமெண்டா நான் எப்பிடியோ போவன்! நீ எனக்காகத் தியாகம் செய்யாதை!

பர :- வளர்மதி நீ போவன்ரி அக்காவுக்குப் பதிலாக!

வளர் :- *(வெறுப்பாக)* நான் போகேல்லை! நான் இப்பதானே ஓ.எல். பாஸ் பண்ணினனான்? நான் இன்னும் படிக்கவேணும்!

பர :- உங்கை பதின்னாலு, பதினைஞ்சு வயசுக்காறியள் எல்லாம் போறாளவை, பாஞ்சுவிழுந்து!

வளர் :- போகட்டும். நான் படிக்கப்போறன்!

அம :- வயது ஆகப் பதினைஞ்சுதானே? பயப்பிடுறாள்!

பர :- அவள் துணிஞ்சவள் போவள்! என்னடி வளர்மதி? *(சிரிக்கிறாள்)*

வளர் :- நான் போகேல்லை அம்மா!

அம :- ராஜியே பயப்பிடுறாள். வளர்மதி அங்கை போய்ச் சமாளிக்கமாட்டாள்! அவளைக் கேளாதை!

பர :- சுபாஜினியையும், துளசியையும் கேக்கலாம் எண்டா, அதுகள் ஆகச் சிறிசுகள். சுபாவுக்கு பதின்னாலு, துளசிக்கு பன்ரண்டு!

அம :- பரமேஸ்! தம்பிப்பிள்ளை வருது ......

பர :- என்ன சொல்லப் போறியள்?

அம :- பிள்ளையள் நீங்கள் உள்ளுக்குப் போங்கோ! *(வளர்மதியும் சிந்துஜனும் வீட்டினுள் செல்கின்றனர்)* உள்ளதைச் சொல்லுறது தான், மகள் மாட்டமெண்டுட்டாள் எண்டு!

பர :- சும்மா அவசரப்பட்டுச் சொல்லிக் கெடுக்காதேங்கோ! அது நான் ஏதோ சொல்லிச் சமாளிக்கிறன். நீங்கள் பேசாமல் இருங்கோ?



படிப்பகம்

padippakam



அம :- என்ன சொல்லிச் சமாளிக்கப் போறாய்? வா, வா, தம்பிப்பிள்ளை. நாளைக்கல்லோ வாறமெண்டனி? *(தம்பிப்பிள்ளை வருகிறார்)*

தம்பி :- அமரேசன் அண்ணை! மாப்பிள்ளை வீடு என்னை இருக்கவிட்டாவல்லோ? பொடியன் மாதம் முடியத் திரும்ப வேணும்! உங்கடை முற்று என்ன?

அம :- மகள் கனடா போக மாட்டம் எண்டுட்டாள் தம்பிப்பிள்ளை. வாசிற்றிக்கு எடுப்பட்டிருக்கிறாள். படிக்கப் போறாளாம்!

தம்பி :- இது பெரிய அதிசயமாய் இருக்கே! *(சிரித்து)* சரி நாங்கள் வேறை இடம் பாக்கிறம்!

பர :- (*அவசரப்பட்டு*) பொறு, தம்பிப்பிள்ளை அண்ணை. அவருக்கு ஒண்டும் தெரியாது? அது நான் கேட்டுச் சொல்லுறன்.

தம்பி :- மாட்டமெண்டுட்டாப் பிறகு என்ன தங்கச்சி!

பர :- அண்ணை! அது நானல்லோ சரிப்பண்ணித் தாறது. அவளுக்கு ஒண்டும் விளங்கேல்லை. நீ கொஞ்சம் பொறுத்துக்கொள்!

தம்பி :- நாள் போகுது! பொடியன் போகவேணும்!

பர :- ரண்டு நாள் தா அண்ணை! ரண்டே ரண்டு நாள்!

தம்பி :- ஒரு நாள் தாறன். நாளைக்கு வாறன்!

பர :- சரி.

அம :- அது சரி தம்பிப்பிள்ளை. அவை ஏன் வேறை இடம் பாக்காமல், எங்களையே கலைச்சுக் கொண்டு நிக்கினம்?

தம்பி :- கலியாணம் எண்டாச் சும்மாவா அமரேசன் அண்ணை? படிப்பு, அழகு, குடும்பம், குணநடை, சாதகம் எத்தினையைப் பார்க்கவேணும்? இனி, தேட நேரமும் வேணும்! பொடியனுக்கு உங்கடை பிள்ளையைப் பிடிச்சுப் கொண்டுது!

பர :- ஒவ்வொரு நாளும் வாறியள் . . . . . . (*சிரிக்கிறாள்*)

தம்பி :- மாப்பிள்ளை வீட்டாருக்கு அவசரம். எனக்குத் தரகு. அவை தரகு காசு தருகினம். நீங்களும் தந்துடுங்கோ! (*சிரிக்கிறார்*)

பர :- ஓம், ஓம் அதுக்கு ஒரு தடையும் இல்லை!

தம்பி :- சரி நாளைக்கு வாறன். இதுதான் கடைசி நடை! வாறன்! (*சிரித்துவிட்டுப் போகிறார்*)

## காட்சி - 6

### *இடம் : பாலசுந்தரம் ஆசிரியர் வீடு*

*(ராஜனியும் பிரிந்தாவும் வருகிறார்கள்)*

பால :- ஓ ராஜினி, பிரிந்தா! வாருங்கோ பிள்ளையள்! என்ன பல்கலைக்கழகம் போக ஆய்த்தமெல்லாம் செய்தாச்சோ? *(சிரிக்கிறார்)*

ராஜி :- நாங்கள் வாசிற்றி போக ஆய்த்தங்கள் செய்துகொண்டிருக்க, எனக்கு புது அழைப்பு ஒண்டு வந்திருக்கு சேர்!



படிப்பகம்

பால :- *(ஆவலாக)* என்ன ராஜினி? என்ன?

ராஜி :- ஒரு கலியாணப் புறப்போசல் வந்திருக்கு சேர். மாப்பிளை கனடாவிலை இருந்து யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்!

பால :- என்ன வேலையாம்?

பிரிந் :- என்ஜினியர் எண்டு சொல்லுகினம். உப்பிடித்தான் எல்லாரும் சொல்லூறது!

பால :- அது எதுவாயிருந்தாலும் பறவாய் இல்லை. என்ஜினியர் அல்லாத பொடியளும் அங்கை நல்லாய் உழைக்கிறார்கள். பெட்டையளும் விரும்பிப் போறாளவை அவங்களைக் கட்ட!

பிரிந் :- நானும் போகச் சொல்லீட்டன் ராஜினியை!

ராஜி :- வீட்டிலும் எல்லாரும் போகத்தான் சொல்லுகினம். ஆனா எனக்குப் போக மனமில்லை. தீர்மானிக்க முடியேல்லை. அதுதான் சேர் உங்களிட்டை வந்தனான்.

பிரிந் :- நீங்கள்தான் சேர் சரியான ஆலோசனை கூறுவியள். படிப்பிக்கிற பொழுதெல்லாம் எவ்வளவு கருத்துக்களைச் சொல்லுவியள்!

பால :- கலியாணம் எண்டது வாழ்க்கேலை ஒரு முக்கியமான கட்டம். பல்கலைக்கழகப் படிப்பும் அப்பிடித்தான்! இஞ்சை ரண்டும் ஒண்டை ஒண்டு எதிர்த்து நிக்குது.

பிரிந் :- அதா, இதா எண்டு நிக்குதுகள் சேர்! *(சிரிக்கிறாள்)*

பால :- பிள்ளையள்! விரும்பம் இல்லாதது எதையும் செய்யக்கூடாது! காசுக்காகவோ, மற்றவை சொல்லுகினம் எண்டதுக்காகவோ செய்யக்கூடாது!

ராஜி :- எனக்குப் படிக்கத்தான் சேர் விருப்பம்! *(ஆசையாக)* என்னுடைய ஆசை, கனவு எல்லாம் அதுதான் சேர்!

பால :- ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் எமாப்புடைத்து எண்டு சொல்லூது திருக்குறள். கற்ற கல்வி ஏழேழு பிறவிக்கும் வருமாாம்!

பிரிந் :- ஏன் மறுபிறவியை? இந்தப் பிறவீலையே கல்வி கற்றவனுக்கு மதிப்பு, உழைப்பு, அந்தஸ்து எல்லாம் இருக்குத்தானே சேர்?

ராஜி :- எனக்கு ஒண்டும் வேண்டாம். படிப்புக்காகப் படிக்க விருப்பமாய் இருக்கு! அவ்வளவுதான்!

பால :- எல்லாராலும் படிக்க முடியிறதில்லை. எல்லாருக்கும் பல்கலைக்கழகத்திலை படிக்க வாய்ப்புக் கிடைக்கிறதில்லை!

பிரிந் :- அங்கை என்ன சேர் விரிவுரையாளர்கள் தாற நோட்சை எழுதிப் படிக்கிறது தானே? அவையும் எல்லாத்தையும் வடிவாப் படிப்பிக்கிறதில்லையாம்!

பால :- பிள்ளை, பிரிந்தா, அங்கைதானே நீங்கள் விரும்பிப் போறியள் படிக்க? *(சிரிக்கிறார்)*

padippakam



பிரிந் :- படிக்கிறதுக்கு, அதைவிடச் சிறந்த ஸ்தாபனம் இல்லையே சேர்? அதாலைதான்! *(மூவரும் சிரிக்கின்றனர்)*

பால :- பல்கலைக்கழகத்திலை எல்லாத்தையும் படிப்பிக்கிறதில்லை. படிப்பிக்கவும் முடியாது! படித்த லெக்சரேர்ஸ் இதை இதைப் படியுங்கோ எண்டு சொல்லுவினம். படிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. பல்கலைக்கழகப் படிப்பு எண்டது ஒரு வழிகாட்டல் தானே?

ராஜி :- நல்ல நூல் நிலையம் இருக்கு. அதிலை உள்ள புத்தகங்களையெல்லாம் படிக்க வேணும் போலை இருக்கு எனக்கு!

பால :- அப்பிடிச் செய்யக்கூடாது! அப்பிடிச் செய்ய வாழ் நாள் போதாது. தெரிவு செய்துதான் வாசிக்க வேணும். அதுக்கும் வழிகாட்டல் தேவை!

பிரிந் :- படிச்சுட்டு வந்து, பிறகும் கலியாணம் செய்யத்தானே சேர் வேணும்! படிச்சு பட்டம் எடுத்திட்டா, பிறகு அதுக்கு ஏத்த மாப்பிளைதான் வேணும். சும்மா மாப்பிளையே கிடையாது. அந்தஸ்தான மாப்பிளையை எங்கை பிடிக்கிறது? கிடைச்சாலும் அவங்கள் பத்து லட்சம் கேப்பங்கள்! இனாம்!

பால :- உள்ளதுதான் பிருந்தா.

பிரிந் :- ஆண்கள் படிச்சுட்டு வந்தா, நல்ல சீதனம் பொம்பிளை எல்லாம் தேடி வருது! பெண் படிச்சா, நிலைமை இன்னும் மோசமாகுது! இது அநீதிதானே சேர்?

பால :- அநீதிதான் பிள்ளையள்! சமூகம் செய்யிற அநீதி! படைப்பிலேயே அமைஞ்ச அநீதி! கடவுள் தான் அந்த அநீதியை இழைச்சிருக்கிறார்! *(சிரிக்கிறார்)*

ராஜி :- எண்டாலும் படிப்புக்கு ஒரு மதிப்பிருக்கு சேர். அதுக்காகவே படிக்கலாம்!

பால :- படிச்சா மட்டும் காணாது ராஜினி. அந்த அறிவுப்படி வாழவேணும். அந்த அறிவு மற்றவைக்குப் பயன்பட வாழவேணும். அதிலைதான் மனத்திருப்தி ஏற்படும்!

பிரிந் :- படிப்பைவிட வாழ்க்கை பெரிசு தானே சேர்?

பால :- அது அவரவர் கண்ணோட்டத்தை பொறுத்தது பிரிந்தா. என்ரை பிள்ளையள் ரண்டுபேரும் படிச்சுப் பட்டம் பெறவேணும் எண்டுதான் விரும்பினன். குமரன்தான் படிச்சுப் பட்டதாரி ஆனான். ரவி வெளிநாடு போப்போறன் எண்டான். அவன்ரை எண்ணத்துக்கே விட்டுவிட்டன்.

ராஜி :- வீட்டு நிலைமையும் மிக மோசம் சேர். நாலு சகோதரங்கள். அதிலை மூன்று பெண்கள். எல்லாரும் என்னைப் போகத்தான் சொல்லுகினம்!



படிப்பகம்

பால :- பிள்ளை ராஜினி! வீட்டார் சொல்லூறதையும் நாங்கள் கவனிக்கத்தான் வேணும். பெற்றார் உங்களுக்கு நன்மை பயக்கக் கூடியதைத்தானே சொல்லுவினம்! அவைக்கு நாங்கள் தொல்லை குடுக்கக்கூடாது!

ராஜி :- நீங்கள் ஒரு நல்ல யோசினை சொல்லுவியள் எண்டு நாங்கள் உங்களிட்டை வந்தம். நீங்கள் கடைசியா என்னிலையே கொண்டு வந்து விட்டுட்டியள், தீர்மானம் எடுக்கிற பொறுப்பை!

பால :- பிள்ளை ராஜினி! இது வாழ்க்கைப் பிரச்சினை. அவரவருக்கும் என்ன தேவை எண்டதை, அவரவரே தான் தீமானிக்க வேணும்!

பிரிந் :- நானெண்டாப் போயிடுவன்!

பால :- அப்ப நீர் போமன் பிரிந்தா!

பிரிந் :- இல்லை சேர், இது ராஜிக்கு வந்த புறப்போசல். அவளைப் பாத்துத்தான் அவை ஆசைப்பட்டுக் கேக்கினம். ராஜியே தீர்மானிக்கட்டும் தனக்கு என்ன வேணும் எண்டதை!

ராஜி :- சரி சேர், சொன்ன ஆலோசனையளுக்கு நன்றி! நாங்கள் வாறம்!

பால :- பொறுங்கோ பிள்ளையள், வந்தனீங்கள் ரீ குடிச்சுட்டுப் போங்கோ! *(உரத்து)* பிள்ளையள்! ரண்டு ரீ போட்டாருங்கோ!

## காட்சி -7

*இடம் : அமரேசன் வீடு*

பர :- ராஜினி! என்னடி பிள்ளை சொல்லூறாய்?

ராஜி :- நான் கனடாவுக்குப் போகேல்லை அம்மா!

பர :- இஞ்சை நிண்டு, படிச்சுக் கஷ்டப்படப்போறாய்?

ராஜி :- அம்மா! நான் அங்கை போய், ஆரோ முகம் இல்லாதவளாய் இருக்க விரும்பேல்லை! இஞ்சை படிச்சு வாத்தியாகி, பிள்ளையளுக்குப் படிப்பிக்கப் போறன்!

பர :- *(நக்கலாக)* ஓ படிப்பிச்சா, உன்னை பிள்ளையள் எல்லாம் தலேலை தூக்கி வைச்சுக் கொண்டாடுங்கள்!

ராஜி :- ஓம், அம்மா கொண்டாடுங்கள்!

பர :- உனக்குக் கலியாணமும் இல்லாமல் போகும்!

ராஜி :- பறவாய் இல்லை!

பர :- படிப்பிச்சு முடிஞ்ச பிறகு, ஒருத்தரும் நாயெண்டும் திரும்பிப் பாராதுகள்! உங்கை பார் எத்தினைபேர் இருக்குதுகள், கலியாணம் கட்டாமல்! திரும்பிப் பாக்க, ஏனெண்டு கேக்க ஆளில்லை!

ராஜி :- உந்த நிலை ஆருக்கும் வரலாம் அம்மா.

பர :- இல்லை, தனக்கென புருஷன், பிள்ளையள், குடும்பம் எண்டு இருந்தா, அதுகள் பாக்கும்!

padippakam



அம :- பரமேஸ்! அவளை நெருக்காதை!

பர :- நெருக்காமல் முடியுமே? பிள்ளையளைப் பெத்த நாங்கள், அதுகளைக் கரை சேர்க்கத்தானே வேணும்? *(தழுதழுத்து)* நான் எனக்காகச் சொல்லூறனே? குடும்பத்துக்காகத்தானே சொல்லூறன்! இவள் போனா, மற்றதுகளுக்கும் வழி பிறக்கும்!

ராஜி :- எனக்கு ஒண்டும் தரவேண்டாம். எல்லாத்தையும் தங்கச்சியவைக்குக் குடுத்துக் கட்டிவையுங்கோ!

பர :- *(பரிதாபமாக)* இப்பத்தையில் சீதண றேட்டிலை, ஒரு பிள்ளைக்குக் குடுக்கக்கூட எங்களிட்டை சீதணம் இல்லையேடி!

அம :- சரி பரமேஸ் விடு, விடு!

பர :- எத்தினை பேர் போட்டாளவை. நீ மட்டும் தான் பெரிய நடப்பு விடுறாய்!

ராஜி :- எல்லாற்றை மன நிலையும் ஒரு மாதிரி இல்லையம்மா!

பர :- நீ போனா, பிறகு தம்பி சிந்துஜனும் வருவன்.

சிந்த :- நான் போகேல்லை அம்மா. நீ அக்காவை நெருக்காதை!

பர :- சிந்து வராட்டா, தங்கச்சி வளர்மதி வருவள்!

வளர் :- நானும் போகேல்லை அம்மா. அக்காவுக்கு மனமில்லாட்டா, நீ அவவை நெருக்காதை அம்மா!

பர :- அப்ப நான் சுபாஜினியையும், துளசியையும் அனுப்புவன்! ராஜினி! நீ ஆக உன்னை மட்டும் நினைக்கிறாய்! நீ போனா, நீயும் வாழலாம். சகோதரங்களும் வாழும்! எங்களுக்கும் நிம்மதி!

அம :- உனக்கும் அவ்வளவு கஷ்டம் இராது. மற்றப் பெட்டையளைப் போலை சாதாரணமாய் வாழலாம்!

ராஜி :- *(தழுதழுத்து)* சரி அப்பா, நான் கனடாவுக்குப் போறன்!

அம :- அதென்ன பிள்ளை குரல் ஒரு மாதிரி இருக்கு? கவலைப்பட்டுக் கொண்டு போக வேண்டாம்!

ராஜி :- இல்லை அப்பா, நான் கவலைப்படாமல் போறன்! மற்றவைக்காகப் போறன்! குடும்பத்துக்காகத் தியாகம் செய்யிறன்! *(அழுகிறாள்)*

அம :- பிறகும் பார் அழுகிறாய்! அப்பிடியெண்டா, நீ போக வேண்டாம் பிள்ளை!

சிந்து :- அக்கா அழாதை! எனக்காக நீ போகவேண்டாம்!

வளர் :- அழாதை அக்கா! விருப்பம் இல்லாட்டா, நீ போகாதை அக்கா! எங்களுக்காகப் போகாதை!



படிப்பகம்

padippakam



ராஜி :- *(அழாமல்)* இல்லை அப்பா நான் அழேல்லை! குடும்பத்துக்காக நான் கலியாணம் செய்து கனடா போறன்!

பர :- உண்மையாகத்தான் சொல்லூறியோ பிள்ளை.

ராஜி :- உண்மையாகத்தானம்மா, குடும்பத்துக்காக நான் இந்தக் கலியாணத்தைச் செய்து கனடா போறன்!

## காட்சி - 8

***இடம் : அமரேசன் வீடு.***

*(நல்லகுமாரும் ராஜினியும் கனடா போக ஆயத்தமாக நிற்கிறார்கள்)*

நல்ல :- சரி வாரும் ராஜினி போவம்!

ராஜி :- *(தழுதழுத்து)* நான் கனடாவுக்குப் போறன். போட்டுவாறன் துளசி!

துளசி :- போட்டு வாங்கோ அக்கா!

ராஜி :- *(தழுதழுத்து)* போட்டுவாறன் சுபாஜினி!

சுபா :- போட்டுவா அக்கா!

ராஜி :- *(தழுதழுத்து)* போட்டுவாறன் வளர்மதி!

வளர் :- போட்டுவா அக்கா!

ராஜி :- *(தழுதழுத்து)* போட்டு வாறன்ரா சிந்துஜன்!

சிந்து :- போட்டு வா அக்கா! நான் பிறகு வந்து சந்திப்பன்!

ராஜி :- *(தழுதழுத்து)* போட்டுவாறன் அம்மா! *(விசித்தல்)*

பர :- போட்டு வா பிள்ளை. இதென்ன பயணம் போகேக்கை அழக்கூடாது!

ராஜி :- *(அழுகையினூடு)* நான் சந்தோஷமாத்தான் போறன் அம்மா! இது ஆனந்தக் கண்ணீர்!

பர :- *(உணர்ச்சியுடன்)* போய், கணவனோடை சந்தோஷமாய், ஒற்றுமையாய் குடும்பம் நடத்து பிள்ளை!

நல்ல :- அதைப்பற்றி யோசிக்காதேங்கோ! நாங்கள் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவம்!

ராஜி :- *(தழுதழுத்து)* போட்டு வாறன் அப்பா!

அம :- *(உணர்ச்சி பொங்க)* போட்டு வா, பிள்ளை ராஜினி!

அமரேசன் பரமேசுவரி இருவரும்:- போட்டு வாருங்கோ பிள்ளையள்

***இலங்கை வானொலி*** ***1996***



படிப்பகம்

padippakam



# நாடகம்
# பவளவிழா நாடகப் பரிசு

**பாத்திரங்கள்**

| | | | வானொலி நாடகத்தில் பங்கேற்றோர் |
|---|---|---|---|
| 1. | அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை | ~ நாடகாசிரியர் | ~ எஸ். அம்பலவாணர் |
| 2. | மங்கையர்க்ரசி | ~ அவரது மனைவி | ~ எ.எம்.சி.ஜெயசோதி |
| 3. | மணிவண்ணன் | ~ அவரது மகன் | ~ எஸ்.தக்கீசன் |
| 4. | சிவஞானசேகரம் | ~ சுந்தரம்பிள்ளையின் நண்பன். | ~ கே. கனகலிங்கம். |

**காட்சி - 1**

*இடம் : அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் வீடு.*
*காலம் : 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்.*

*(வானொலியில் தமிழ் தேசியசேவை நேயர் கடிதம் நிகழ்ச்சியில் தமிழ் தேசிய சேவைப் பணிப்பாளரின் குரல் ஒலிக்கிறது)*

பணிப்பாளர் :- பவள விழா நாடகப் போட்டி. முதலாம் பரிசு 'தனிக்குடித்தனம்'எழுதியவர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

சுந்தரம்பிள்ளை :- (*எழுந்து நின்று, உற்சாகமாக*) மங்கை! கேட்டியா செய்தி ...?

மங்கையர்க்கரசி :- *(தூரத்தில் இருந்து)* என்ன செய்தி?

சுந்தரம் :- பவள விழா நாடகப் போட்டிலை எனக்குத்தான் முதல் பரிசு!

மங்கை :- *(கிட்ட வந்து)* ஆர் சொன்னது?

சுந்தரம் :- இப்ப வானொலி நேயர் கடிதம் நிகழ்ச்சியிலை பணிப்பாளர் சொன்னவர்!

மங்கை :- அதிலை என்ன அதிசயம்? நாடகப் போட்டியிலை முதலாம் பரிசை உங்களுக்குத் தராமல், வேறை ஆருக்குக் குடுக்கிறது? *(சிரிக்கிறாள்)*

சுந்தரம் :- மங்கை ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?

மங்கை :- எந்த நாளும் வானொலி நாடகம் தானே எழுதிக்கொண்டிருக்கிறியள்!

சுந்தரம் :- அப்பிடி எழுதினாப்போலை தர வேணுமா?

மங்கை :- வேறை என்ன?

சுந்தரம் :- மற்றப் பரிசுகள் மாதிரி இல்லை இந்தப் பரிசு! நாடகத்திலை தரம் இருக்க வேணும் அப்பா, தரம்!



படிப்பகம்

மங்கை :- *(கிண்டலாக)* தரம் இல்லாமல் சும்மாவும் தருவங்கள், பாவம் நெடுக நெடுக எழுதுறாரே எண்டு! *(சிரிக்கிறாள்)*

சுந்தரம் :- நீ என்னை இளக்காரமாப் பேசுறாய்? *(பெருமையாக)* இலங்கை வானொலி இதுவரை என்னுடைய 300 நாடகங்களை ஒலிபரப்பியிருக்கு! தெரியுமா?

மங்கை :- தரம் இல்லாமலா ஒலிபரப்பினாங்கள்? நான் சும்மா பகிடிக்குச் சொன்னன். *(சிரிக்கிறாள்)*

சுந்தரம் :- மற்றப் பரிசுகளை, சும்மா பிடிச்சவைக்குக் குடுக்கலாம். இதை அப்பிடிக் குடுக்கேலாது. பிறகு நாடகம் ஒலிபரப்பேக்கை எல்லாரும் கண்டு பிடிச்சிடுங்கள், தரம் இல்லாததுக்குப் பரிசு குடுத்ததெண்டு! *(சிரிக்கிறார்)*

மங்கை :- அப்ப என்ன, பரிசு வாங்க கொழும்புக்குப் போப் போறியளா?

சுந்தரம் :- பின்னை போகாமல்? எந்தப் பெரிய பரிசு!

மங்கை :- முந்தியும் வாங்கினனீங்கள் தானே பரிசுகள்?

சுந்த :- மங்கை, ஒருமுறை இலங்கை வானொலி நாடகப் போட்டீலை எனக்கு ஒரு பரிசுகூடக் கிடைக்கேல்லை!

மங்கை :- அப்பிடியா?

சுந்த :- அது 1984ம் ஆண்டு. 1995ஆம் ஆண்டு மூண்டாம் பரிசு தந்தாங்கள்.

மங்கை :- அது, யாழ்ப்பாண இடம் பெயர்வின்போது. அப்ப நாங்கள் வலிகாமத்திலை, அராலியிலை இருந்தனாங்கள்.

சுந்த :- நான் பரிசு வாங்கப் போகேல்லை. போக விரும்பினாலும் போயிருக்கேலாது!

மங்கை :- வெளி உலகத் தொடர்பே இல்லாமல் இருக்கேக்கை, எப்பிடிக் கொழும்புக்குப் போறது?

சுந்த :- *(மகிழ்ச்சியாக)* இந்த முறைதான் முதலாம் பரிசு கிடைச்சிருக்கு!

மங்கை :- 1998ஆம் ஆண்டு போய், ஒரு பரிசு வாங்கினனீங் களல்லோ?

சுந்த :- அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், தேசிய ஒருங்கிணைப்பு செயல்திட்டப் பணியகமும், சேர்ந்து நடத்தின நாடகப் போட்டி. இலங்கை வானொலி தனிய நிண்டு நடத்தின போட்டியிலை, எனக்கு இப்பதான் முதலாம் பரிசு கிடைச்சிருக்கு!

மங்கை :- அப்ப கொழும்புக்குப் போகத்தான் போறியள்?

சுந்த :- போகாமல்?

மங்கை :- உதென்ன பெரிய பரிசு? இலங்கேக்கை நடந்த நாடகப் போட்டிதானே? நீங்கள் சர்வதேச ரீதியிலை நடந்த போட்டியளிலும் முதலாம் பரிசு வாங்கினனீங்களல்லே?

padippakam



சுந்த :- நோர்வே நாட்டிலை உள்ள 'தமிழ் நாதம்' வானொலி நிலையம், ஒருக்கா முதலாம் பரிசு தந்தது. அடுத்து கனடாவிலை உள்ள ஆசிய வானொலி நிலையம், ஒரு முதலாம் பரிசு தந்தது. மூண்டாம் முறையும் நோர்வே தமிழ் சங்கம் முதலாம் பரிசு தந்தது. இது இலங்கை வானொலியல்லலே?

மங்கை :- இலங்கை வானொலி எண்டாப் பெரிசா?

சுந்த :- அதுகள் எங்கையோ இருக்கு. இது இலங்கேலை கடந்த 75 வருடங்களாக இருந்து, தமிழ்த் தொண்டும் கலைத் தொண்டும் செய்து கொண்டிருக்கிற ஒரு நிறுவனம்! தொடர்ந்தும் அந்தச் சேவைகளைச் செய்யப்போகுது. கடந்த 50 வரியங்களாக நாடகம் தயாரித்து ஒலிபரப்பி வருது. இவ்வளவு தொகையான நாடகங்களை வேறெந்த நிறுவனமும் தமிழருக்கு வழங்கேல்லை! அதிலை 20 வரியங்கள் நான் வானொலிக்கு நாடகங்கள் எழுதியிருக்கிறன். உண்மேலை, இது நான் இலங்கை வானொலிக்குச் செய்த சேவைக்காகத் தரப்படுகிற பரிசு! *(பெருமிதத்துடன் சிரிக்கிறார்)*

மங்கை :- அப்ப வானொலி நாடகப் போட்டீலை பரிசில்லை. செய்த சேவைக்காகத்தான் பரிசு! *(சிரிக்கிறாள்)*

சுந்த :- அதுதான் பெரிய பரிசு! உண்மையான சேவைக்குப் பரிசு! கட்டாயம் போய் வாங்க வேணும்!

மங்கை :- இஞ்சாருங்கோ, வாங்கின பரிசுகள் அவ்வளவும் போதும்! சும்மா அலைஞ்சு உலையாமல், பேசாமல் இருங்கோ!

சுந்த :- சேவை செய்தாச்சு. பரிசை வாங்கவேண்டாமோ?

மங்கை :- ஒரு நாடகத்தை ஒலிபரப்பினாலே நாடு முழுக்க கேக்குது. பிறகு என்ன பரிசு? வீட்டிலை இருங்கோ.

சுந்த :- *(வியப்புடன்)* மங்கை ஏன் மறிக்கிறாய்?

மங்கை :- உங்களுக்கு வயது 66.

சுந்த :- எண்டாலும் சுறுசுறுப்பாகத்தானே இருக்கிறன்? *(சிரிக்கிறார்)*

மங்கை :- ஒருக்கா ஆஸ்பத்திரிக்கும் போட்டு வந்துட்டியள்......

சுந்த :- போய் வந்து, எல்லாம் சுகம்!

மங்கை :- உது இரத்தாசயம். சொல்லேலாது. கிளினிக்குக்கும் போறனீங்கள்.....

சுந்த :- அது வந்து போகலாம். பிரச்சினை இல்லை.

மங்கை :- நாட்டிலை சண்டையும் நடக்குது. . . . ..

சுந்த :- சண்டையும் நடக்குது. நாடும் நடந்து கொண்டிருக்கு! *(சிரிக்கிறார்)*

மங்கை :- *(தழுதழுத்து)* அங்கை போன இடத்திலை ஏதும் நடந்துட்டா?

சுந்த :- மங்கை! ஒண்டும் நடவாது. பயப்பிடாதை!



படிப்பகம்

padippakam



மங்கை :- எனக்கு நினைக்கேக்கை மனம் பதறுது!

சுந்த :- நடந்தா, அங்கையும் ஆசுப்பத்திரியள் இருக்குதானே? கொழும்பிலைதான் திறமான ஆஸ்பத்திரியள் இருக்கு!

மங்கை :- நான் இல்லையே! ஆள் உதவி இல்லையே!

சுந்த :- மங்கை வீணாப் பயப்பிடாதை! உப்பிடிப் பயப்பிட்டா, மனிசர் ஒண்டும் செய்யேலாது. நான் என்ன வேறை நாட்டுக்கா போறன்? கொழும்புக்குத்தானே!

மங்கை :- வெளிநாடு போகலாம். *(பயந்து)* கொழும்புக்குப் போறதுதான் பெரிய பயம்! இனி என்ன பரிசளிப்பு? உங்களுக்கு இப்ப இருக்கிற பேர் புகழ் காணும்! இருக்கிற கொஞ்ச நாளைக்குச் சுகமாக இருக்கப் பாருங்கோ!

மணி :- *(வந்து)* அம்மா அப்பாவை ஏன் தடுக்கிறாய்?

சுந்த :- வாடா மணிவண்ணன்! எனக்கு இலங்கை வானொலி பவள விழா நாடகப் போட்டீலை முதலாம் பரிசு கிடைச்சிருக்கு! கொம்மா கொழும்புக்குப் போக வேண்டாம் எண்டு தடுக்கிறா!

மணி :- எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தனான் அப்பா. எனக்கும் எவ்வளவு பெருமையாய் இருக்கு! இப்பிடி எத்தினை பேருக்கு அடுத்தடுத்துப் பரிசு கிடைக்கும்? அப்பா ஆசைப்படுறார். அனுமதி குடுத்துவிடம்மா.

மங்கை :- கொப்பருக்கு சுகமில்லையல்லே!

சுந்த :- அது தான் சுகமாய் இருக்கிறனே!

மணி :- அப்பா சுகமாய் இருக்கிறார். பிறகு என்ன?

மங்கை :- உது இரத்தாசயம். சொல்லேலாது. நான் விடன்! ஏன் இவ்வளவு காலமும் வாங்கின பரிசுகள் போதாதே?

மணி :- அங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன விழாவிலை வந்திருக்கிற சனங்களுக்கு முன்னாலை போய் நிண்டு, பரிசு வாங்கூற மாதிரி வருமே அம்மா?

மங்கை :- மணிவண்ணனும் உங்கடை பக்கம்!

மணி :- போன முறை பிளேனிலை போனியள். அரசாங்கம் தன்ரை சிலவிலையே கூட்டிக் கொண்டு போய், கொண்டு வந்தும் விட்டுது. இப்ப கப்பல்லை தானே போகவேணும்?

சுந்த :- ஓ அதுதான் ஒரு வழி.

மங்கை :- ஆமீட்டை பாஸ் எடுக்க வேணும்......

மணி :- எடுக்கலாம் அம்மா. நான் போனாத் தராங்கள். அப்பாவுக்குக் குடுப்பங்கள்!

மங்கை :- நீயும் அங்கினை போயிடாதையடா மணிவண்ணன்! வீட்டிலை ஈசிச்சேரிலைதான் இருப்பியள். ஆமிக் காம்புக்குப் போய், பகல் முழுக்க வெய்யிலிலை நிண்டு தூங்கி, பாஸ் எடுப்பியளே?



படிப்பகம்

padippakam



சுந்த :- ஓ அது நான் எடுப்பன.

மணி :- கன நாள் தூங்க வேண்டி வருமப்பா.

சுந்த :- அதுக்கென்ன தூங்குவம்! *(சிரிக்கிறார்)*

மங்கை :- பிறகு கப்பல் ரிக்கற் எடுத்து...... உங்களுக்கு கப்பல்லை போயும் பழக்கமில்லை.

சுந்த :- நயினாதீவு கோயிலுக்கு நானும் நீயுமாப் போனம், மோட்டார் லோஞ்சிலை. *(சிரிக்கிறார்)*

மங்கை :- சும்மா பகிடி விடாதேங்கோ. கப்பல்லை தலை சுத்துமாம், வாந்தி எடுக்குமாம். கப்பல்லை போகேக்கை தலை சுத்தி விழுந்தா?

சுந்த :- ஆளைத் தூக்கி கடல்லை போட்டுடுவங்கள்! *(சிரிக்கிறார்)*

மணி :- ஏன் அப்பா, உப்பிடிச் சொல்லூறியள்?

சுந்த :- நான் சும்மா கொம்மாவுக்குப் பகிடி விடுறன்!

மங்கை :- சும்மா பகிடிக்குத்தன்னும் உப்பிடிச் சொல்லாதேங்கோ! *(தழுதழுத்து)* மணிவண்ணன்! நான் என்ன வேணுமெண்டே தடுக்கிறன்? வயதுபோன, சுகமில்லாத மனிசனை கொழும்புக்கு அனுப்பீட்டு, எனக்கு நித்திரையும் வராது! எனக்குத் தாலிப் பாக்கியம் வேணும்! நான் பூவோடும் பொட்டோடும் வாழ வேணும்!

சுந்த :- மங்கை உன்ரை மனிசனுக்கு ஒரு ஆபத்தும் வராது! என்னோடை படிச்சவங்கள் கன பேர் செத்துப் போனாங்கள். நான் இப்பவும் சுகதேகியாக இருந்து நாடகம் எழுதூறன்! *(சிரிக்கிறார்)*

மங்கை :- கப்பல்லை ஒரு நாள் பயணம். பிறகு அங்காலை றெயில் பயணம். தொடர்ந்து ரண்டு நாள் பயணம்.

சுந்த :- அதுக்கென்ன போவம்.

மங்கை :- வீட்டிலை கதிரையாலை எழும்பாத நீங்கள், உப்பிடித் தொடர்ந்து பயணம் செய்வியளா?

சுந்த :- செய்து பாத்தாத்தானே தெரியும், ஏலுமா ஏலாதா எண்டு!

மணி :- ஒண்டு, கொழும்பிலை அப்பாவைப் பிடியாங்கள். தலை நரைச்சுப் போச்சு! *(சிரிக்கிறான்)*

சுந்த :- அது சந்தேகம் வந்தாத்தான் பிடிப்பங்கள். எனக்கு ஒருத்தரோடும் தொடர்பு இல்லையே!

மணி :- அப்ப நானும் வரட்டே அப்பா உங்களுக்கு துணையாய்?

சுந்த :- துணையோ? பிறகு உன்னைப் பிடிச்சு அடைச்சாங்களெண்டால், நான் பரிசளிப்பை விட்டுவிட்டு உன்னைத் தேடித் திரியவேணும், கொழும்பு முழுக்க!

மங்கை :- மணிவண்ணன் நீ ஏன்ரா போறாய்? பிறகு ரண்டு பேரையும் அனுப்பீட்டு நான் ஏங்கிச் சாகவோ?



படிப்பகம்

மணி :- அம்மா, நீ பயந்ததாலை கேட்டன்! நான் ஏன் போறன்? சிலவேளை போன முறை மாதிரி உங்களை பிளேனிலும் கொண்டுபோகக் கூடும். என்னப்பா?

சுந்த :- கொண்டு போகக்கூடும். ஆனா நான் அதை நம்பி இருக்கலாமோ? போன முறையும் என்னாலை பாசும் எடுக்க முடியேல்லை. ரிக்கற்றும் எடுக்க முடியேல்லை. கடைசி நேரத்திலை அரசாங்கம் தான் வலிய வந்து ஏத்தீட்டுப் போனது.

மங்கை :- இந்த முறையும் அப்பிடி வந்தாப் போங்கோ!

சுந்த :- நம்பி இருக்கேலாது. நான் ஆயத்தங்களைச் செய்ய வேணும். இல்லாட்டா விழாவை விட்டுடுவன்!

மங்கை :- *(புதுமையாக)* அதென்ன பவளவிழா?

மணி :- 75 ஆண்டு பூர்த்தியிலை செய்யிற விழா அம்மா.

மங்கை :- அதைக் கொண்டாடாட்டா என்ன?

மணி :- அம்மா ஒரு ஆண்டு விழாவையே, எவ்வளவு பெரிசா கொண்டாடுறாங்கள்? இது 75 வரியம்! நாடு முழுவதற்கும் சேவை செய்த ஒரு நிறுவனத்தினுடைய விழாவைக் கொண்டாட வேண்டாமோ?

சுந்த :- அதிலும் எத்தினை விதமான சேவைகள்! கொம்மாவுக்கு உது தெரியாமல் இல்லை. சும்மா கேக்கிறா. *(சிரிக்கிறார்)*

மங்கை :- அரசாங்க நிறுவனம் தானே?

சுந்த :- மக்களுக்குத்தானே சேவை செய்தது? அரசாங்கம் கொண்டாடாது. பணிப்பாளர் தான் ஒகனைஸ் பண்ணி செய்விக்கிறார்!

மங்கை :- ஆர் அந்தப் பணிப்பாளர்?

சுந்த :- அருந்ததி ஸ்ரீரங்கநாதன். பட்டதாரி, சங்கீதத்திலும் பட்டம் பெற்றவ. சகல துறைகளிலும் ஆர்வம். அதாலைதான் இந்த விழாவைக் கொண்டாடுறா!

மணி :- இந்தக் காலத்திலை இப்பிடி ஒரு நிறுவனத்தை நடத்துறதே கஷ்டம். அதுக்கை விழா கொண்டாடுறது, எவ்வளவு கஷ்டம்!

மங்கை :- அவை நல்லாக் கஷ்டப்படட்டும். நீங்கள் அங்கை போகாதேங்கோ!

சுந்த :- மங்கை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இப்பிடி ஒரு விழாவைக் கொண்டாடுற பொழுது, நான் போகாமல் விடுறது அவையளை அவமதிக்கிறமாதிரி!

மங்கை :- அவைக்கு நாட்டு நிலைமை தெரியும் தானே?

சுந்த :- இந்தக் கஷ்டத்திலும் சனம் போய் வருதுதானே? நானும் கட்டாயம் போகவேணும்!

மணி :- அப்பா! போகாட்டா, பரிசை அனுப்ப மாட்டாங்களோ?

padippakam



சுந்த :- அனுப்புவினம். ஆனா போறதுதான் நல்லது!

மங்கை :- விழாவிலை பரிசை வாங்கூறதைவிட, உங்களுக்கு வேறை என்ன லாபம்?

சுந்த :- வானொலிக்கு ஒரு பேட்டி குடுக்கலாம்.

மங்கை :- அது முந்தியும் குடுத்தனீங்கள்தானே, கெட்டிக்காரங்கள், முதலாம்பிள்ளை நூல்கள் வெளியீடுக்குப் போனபொழுது?

சுந்த :- ரி.வி.க்கும் ஒரு பேட்டி குடுக்கலாம்.

மங்கை :- ரி.வி.க்கும் முந்திப் பேட்டி குடுத்தனீங்கள்தானே?

சுந்த :- பத்திரிகையளுக்கும் எழுதூறனான். போனா அதுகளுக்கும் பேட்டி குடுக்கலாம்.

மங்கை :- எல்லாப் பத்திரிகேலும் உங்கட பேட்டியள் வந்துட்டுது. வானொலி நாடகங்களும் வருது. பேட்டியளும் வந்துட்டுது. உதுகள் ஒண்டும் கிடைக்காதவை ஆசைப்பட்டாலும் கிடக்கு. உங்களுக்கு எல்லாம் கிடைச்சிருக்கு! எல்லாருக்கும் தெரியும்! பேசாமல் இருங்கோ!

மணி :- அப்பாவின்ரை புத்தகங்களும் உலாவூது!

சுந்த :- *(வியப்புடன்)* மணிவண்ணன், நீயும் போக வேண்டாம் எண்டு சொல்லிறியோடா?

மணி :- இல்லை அப்பா, நீங்கள் போறது தான் எனக்கு விருப்பம். சும்மா உங்களுடைய சாதனையைச் சொன்னன்.

சுந்த :- இஞ்சை யாழ்ப்பாணத்திலையே அடைபட்டுக் கிடக்கிறம். நான் அப்ப முதலாம்பிள்ளை நூல் வெளியீட்டுக்குப் போனதுக்குப் பிறகு கொழும்புக்குப் போகேல்லை. பத்து வரியம். ஒருக்கா கொழும்பையும் பார்த்துக் கொண்டு வருவம்.

மணி :- ஏன் அப்பா, போன முறை பரிசு வாங்கப் போனபொழுது கொழும்பு பாக்கேல்லையோ?

சுந்த :- அவங்கள் பிளேனிலை ஏத்திக் கொண்டு போய், இலங்கை மன்றக் கல்லூரியிலை அடைச்சுவைச்சு, பரிசும் தந்துட்டு, திருப்பி ஏத்தி அனுப்பீட்டாங்கள்! ஒண்டும் பாக்கேல்லை! *(சிரிக்கிறார்)*

மங்கை :- கொழும்பிலை என்ன இருக்கு பாக்க? கட்டிடங்களோ?

சுந்த :- அதுகளையாவது பாத்துட்டு வருவம்.

மணி :- அப்ப கொழும்புக்குப் போனா, எங்கை நிப்பியள்?

சுந்த :- சொந்தக்காறற்றை வீடுகளுக்குப் போறதில்லை. அவை எல்லாம் உறவு விட்டுப் போன சொந்தக்காறர்.

மணி :- ஹோட்டல்கள் கட்டுப்படியாகாது. வெள்ளவத்தேலை என்ரை பிறெண்ட் கனகசபை வீட்டிலை நிக்கலாம். அல்லது கதிரவேலுப்பிள்ளை வீட்டிலை நிப்பன்.



படிப்பகம்

மங்கை :- இன்னும் ரிக்கெற் கிடைக்கேல்லை. எங்கை நிக்கிறது எண்டு திட்டம் போடுறியள்?

மணி :- எல்லாம் கிடைக்கும் அம்மா! கிடைக்கும்!

சுந்த :- நாளைக்கே போறன் ஆமிக்காம்புக்கு, பாஸ் எடுக்க.

மங்கை :- கப்பல் ரிக்கற் கிடைக்கக்கூடாதெண்டு, கடவுளை பிரார்த்திக்கிறன்!

மணி :- அதை விட்டுட்டு, அப்பாவுக்கு பிளேனிலை வரச்சொல்லி அழைப்பு வரவேணுமெண்டு, ஆண்டவனை வேண்டம்மா! *(சிரிக்கிறான்)*

## காட்சி - 2

*இடம் : யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடி ராணுவமுகாம் சந்தி.*

சிவஞானசேகரம்:- வாருங்கோ. . . .!

சுந்த :- வாருங்கோ எண்டு அழைக்கிறியள்! என்னைத் தெரியுமா?

சிவா :- நீங்கள் தானே அராலியூர் சுந்தரம்பிள்ளை?

சுந்த :- ஓ அது நான்தான். உங்களுக்கு எப்பிடித் தெரியும்?

சிவா :- உங்கடை நாடகங்களை வானொலியிலை கேட்டிருக்கிறன். உங்கடை புத்தகங்கள் வாசிச்சிருக்கிறன் . . .

சுந்த :- *(மகிழ்ச்சியாக)* அப்பிடியா?

சிவா :- ஆரோ காட்டித் தந்தவை. இண்டைக்குத் தான் சந்திக்கிறன்.

சுந்த :- நீங்கள் ஆர்?

சிவா :- என்ரை பேர் சிவஞானசேகரம். எங்கை கொழும்புக்கா போப்போறியள்?

சுந்த :- ஆரியகுளம் ஆமிக்காம்புக்கு வந்தாலே, கொழும்புக்குப் போறது எண்டது தானே கருத்து? *(சிரிக்கிறார்)*

சிவா :- ஏன் கொழும்புக்கு?

சுந்த :- இலங்கை வானொலி பவள விழா நாடகப் போட்டி நடந்தது. அதிலை எனக்கு முதலாம் பரிசு!

சிவா :- உங்களுக்கில்லாமல் வேறைஆருக்குக் குடுக்கிறது? போட்டி முடிவுகள் வெளியாகிட்டுதா?

சுந்த :- ஓ ராத்திரி வானொலியிலை சொன்னவை.

சிவா :- கன போட்டியளல்லா நடத்தினவை?

சுந்த :- எல்லா முடிவுகளும் சொல்லியாச்சு.

சிவா :- என்னுடைய பாராட்டுக்கள்! *(கைகொடுத்து)* அப்ப கொழும்புக்கு போப்போறியள்! எப்ப பரிசளிப்பு விழா?

சுந்த :- அது தெரியாது. நான் ஆயத்தப்படுத்தவல்லா வேணும்?

சிவா :- ஓம், ஓம் கட்டாயம். நீங்கள் போகத்தானே வேணும்?

சுந்த :- மிஸ்டர் சிவஞானசேகரம், நீங்கள் எங்கை போறியள்?

padippakam



சிவா :- நானும் கொழும்புக்குத்தான். என்ரை கதையை ஏன் கேக்கிறியள்? பெரிய பரிதாபம்!

சுந்த :- *(ஆவலாக)* என்ன? என்ன? சொல்லுங்கோ!

சிவா :- என்ரை பெண்சாதிக்கு சுகமில்லை. கொழும்புக்கு ஏத்தப் போறன்!

சுந்த :- இஞ்சை யாழ்ப்பாண ஆசுப்பத்திரியிலை. . .

சிவா :- அங்கைதான் தர்மினி இருக்கிறா. இஞ்சை மருந்துகளும் இல்லை! டாக்குத்தர் மாரும் இல்லை . . . .

சுந்த :- எல்லாரும் கொழும்புக்கும் வெளி நாடுகளுக்கும் ஓடுகினம்.

சிவா :- ஆசுப்பத்திரீலையே சொல்லீட்டினம், வசதியானா, கொழும்புக்கு கொண்டு போங்கோ எண்டு!

சுந்த :- என்ன சுகவீனம் சிவஞானசேகரம்?

சிவா :- எனக்கு என்ன தெரியும்? ஏதோ டொக்டர்மார் சொல்லுகினம்!

சுந்த :- நீங்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கக் கப்பலிலை போகலாமே?

சிவா :- அவை நோயாளியை மட்டும்தான் கொண்டுபோவினம்.

சுந்த :- இல்லை, ஒராள் போகலாம்.

சிவா :- நான் போகலாம். பிள்ளையளை என்ன செய்யிறது? நாலு சின்னப் பிள்ளையள். நாங்கள் குடும்பமாப் போகப்போறம்.

சுந்த :- அப்பிடி விட்டுட்டுப் போக, சொந்தக்காரர் இல்லையோ?

சிவா :- இருக்கினம். நம்பிக்கையான ஆக்கள் இல்லை. சின்னப் பிள்ளையள். அதுகள் நிக்காது.

சுந்த :- சிவஞானசேகரம், நீங்கள் எங்கை வேலை செய்யிறியள்?

சிவா :- யாழ்ப்பாணம் கச்சேரி. லீவு போட்டுட்டுத்தான் போக வேணும். இண்டைக்கும் லீவு. இப்பிடி எத்தினை நாள் லீவு போச்சு!

சுந்த :- இப்பிடி ஆயிரக்கணக்கிலை போறன் எண்டு வந்து நிண்டா, அவங்களும் தான் என்ன செய்யிறது?

சிவா :- 12 மணிக்குப் பிறகு அப்பிளிகேசன் வாங்க மாட்டினம். வீட்டை போக வேண்டியதுதான்.

சுந்த :- உங்கட கேஸ் பெரிய பரிதாபம்! நான் போகாட்டிலும் நீங்கள் கட்டாயம் போகவேணும்! போய்ச் சொல்லிப்பாருங்கோ!

சிவா :- ஆக்களைச் சந்திச்சாவெல்லோ சொல்ல? நாங்கள் சொல்லூறது அவைக்கு விளங்காது!

சுந்த :- இனிக் கொழும்புக்குப் போய், எங்கை நிக்கிறது?

சிவா :- போய்த்தான் பாக்க வேணும். ஃபிறண்ட் ஒருத்தர் இடம் எடுத்துத்தாறம் எண்டு சொல்லியிருக்கிறார்.



படிப்பகம்

சுந்த :- கொழும்பிலை இடமும் கிடையாது. ஆசுப்பத்திரியிலையோ, பிறைவேட்டாகவோ காட்டப் போறியள்?

சிவா :- போய்த்தான் யோசிக்க வேணும். முதல் போய்ச் சேரவேணுமே!

சுந்த :- ஆசுப்பத்திரீலை இஞ்சை பாக்கிற மாதிரி, அங்கை பாக்க மாட்டினம்! பிறைவேற்றிலை சரியான சிலவு.

சிவா :- தம்பி ஒருத்தர், கனடாவிலை இருக்கிறார். காசு அனுப்பூறம் எண்டு எழுதியிருக்கிறார்.

சுந்த :- நான் போகாட்டிலும், நீங்கள் கட்டாயம் போகவேணும்!

சிவா :- *(கவலையாக)* மனிசி கிடந்து உத்தரிக்குதே! மனிசியைப் பாக்க எனக்கு வேதனையாக் கிடக்குது!

சுந்த :- உங்கடை கேஸ் ஆகப் பரிதாபமாய் இருக்கு! ஆரையன் பிடிச்சு அலுவல் பாருங்கோவன்.

சிவா :- *(பரிதாபமாக)* கச்சேரிக்கும் ஆஸ்பத்ரிக்கும், ஆமிக் காம்புக்கும், வீட்டுக்குமாக அலையிறன்! இண்டைக்கு நாலாவது நாள்!

சுந்த :- நான் இண்டைக்குத்தான் முதல் நாள்.

சிவா :- இனி இதிலை குடுத்தாலும், பிறகு வெலிங்டன் சந்தியிலை காவல் நிண்டுதான் பாஸ் வாங்க வேணும். இதிலை ஆலமரமாவது நிக்குது. அந்தச் சந்தீலை கொளுத்தூற வெய்யில்!

சுந்த :- கொழும்புக்கு போக வேணுமெண்டா, கஷ்டப்படத்தான் வேணும். *(சிரிக்கிறார்)*

சிவா :- சுந்தரம்! நீங்கள் சொல்லிப் பாருங்கோ. இலங்கை வானொலி விழா எண்ட உடனை பாஸ் தருவினம்.

சுந்த :- அது நடவாது சிவஞானசேகரம். இஞ்சை அவைதான் பெரியவை. அவை தங்களுடைய சட்ட திட்டப்படி தான் நடப்பினம். போனமுறை இப்பிடித்தான் இன்னொரு இலங்கை வானொலி விழாவுக்குப் போக கேட்டுப்பாத்தன். அவை தரேல்லை. நான் ஏலாதெண்டு, போய் வீட்டிலை இருந்துட்டன். பிறகு அரசாங்கமே எங்களைக் கூப்பிட்டு, பிளேனில அனுப்பி வைச்சது!

சிவா :- அந்த மாதிரி இந்த முறையும் செய்வினம்.

சுந்த :- அது நாடகப் பரிசு மட்டும். இந்த முறை கன பரிசுகள் குடுக்கினம். எத்தினை பேரைக் கூப்பிடுறது? நடவாது!

சிவா :- சரி கவுண்டர் மூடியாச்சு, போவம். நாளைக்கு வருவம்.

சுந்த :- நாளைக்கு விடிய வெள்ளனை வந்து நிப்பம்!

padippakam



## காட்சி - 3

*இடம் : யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடி ராணுவ முகாம் சந்தி.*

சுந்த :- சிவா இண்டைக்கு ஒரு மாதிரியா அப்பிளிகேசன் குடுத்திட்டம்.

சிவா :- எனக்கு 5வது நாள். மாஸ்ரர் நீங்கள் லக்கி! ரண்டாவது நாளே குடுத்திட்டியள்!

சுந்த :- அது நேரத்துக்கு வந்ததாலை.

சிவா :- இனி ஒரு கிழமையாலை பாஸ் வாங்க வரவேணும், வெலிங்டன் சந்திக்கு.

சுந்த :- இதிலை நிழல். அதிலை சரியான வெய்யில்!

சிவா :- என்ன செய்யிறது? போக வேணுமெண்டா, வேகத்தானே வேணும்? *(சிரிக்கிறார்)*

சுந்த :- அப்ப திங்கக்கிழமை சந்திப்பம் வெலிங்டன் சந்தீலை.

சிவா :- சரி சந்திப்பம். நான் ஆசுப்பத்திரிக்குப் போக வேணும்! வாறன். *(ஓடுகிறார்)*

## காட்சி - 4

*இடம் : யாழ்ப்பாணம் . வெலிங்டன் சந்தி.*

சிவா :- ரண்டாம் நாளாக வந்து நிக்கிறம், பாஸ் வாங்க.

சுந்த :- சிவா, வந்து நிண்டு கொளுத்தூற வெய்யில்லை காயிறம். இதிலை நிக்க எங்களுக்கே வருத்தம் வந்தாலும் வந்திடும். *(சிரிக்கிறார்)*

சிவா :- *(கவலையாக)* மாஸ்ரர் எனக்கு வந்தா அதோ கதிதான்!

சுந்த :- போய் ஆஸ்பத்திரியிலை கிடக்க வேண்டியதுதானே? கொழும்புக்குப் போய் அலையத் தேவையில்லை!

சிவா :- நானும் மனிசியும் ஆஸ்பத்திரியிலை எண்டா, குஞ்சுகள் பாவம் மாஸ்ரர்!

சுந்த :- நான் சும்மா பகிடிக்குச் சொன்னன் சிவா.

சிவா :- சனத்தைப் பாருங்கோவன். அலை மோதூது, கொழும்புக்குப் போக!

சுந்த :- அதுகள் எல்லாம் வெளிநாடு போற சனம். நானும் நீரும் தான் கொழும்புக்குப் போற ஆக்கள்.

சிவா :- அதுகள் வெளிநாடு போய், குளிர்மையாய் இருக்குங்கள். நாங்கள் தான் கிடந்து காயிறம்!

சுந்த :- சிவா கொழும்பும் இப்ப வெளிநாடு மாதிரியல்லே வந்துட்டுது. சரி, சரி, வரட்டாம். நீர் போம் சிவா.

சிவா :- வாறன் மாஸ்ரர். *(போய்வந்து மகிழ்ச்சியாக)* பாஸ் கிடைச்சிட்டுது! அரைவாசித் தூரம் தாண்டியாச்சு!



படிப்பகம்

padippakam



சுந்த :- சரி என்னையும் வரட்டாம். நானும் போட்டுவாறன். நிண்டு கொள்ளும். *(போய் வந்து)* சிவா ..... எனக்கும் பாஸ் கிடைச்சிட்டுது!. இதே ஒரு பரிசு கிடைச்ச மாதிரி! *(சிரிக்கிறார்)*

சிவா :- *(கவலை)* இனி கப்பல் ரிக்கற் எடுக்க வேணும்.

சுந்த :- கப்பல் ஓ.்.பீஸ் இப்ப பூட்டியிருப்பங்கள். காலமை வந்து எடுப்பம்.

## காட்சி - 5

***இடம் : யாழ்ப்பணம். கப்பல் பிரயாணத்திற்கு ரிக்கற் கொடுக்கும் இடம்.***

சிவா :- நாலு நாள் வந்து அலையிறம் மாஸ்டர். இன்னும் ரிக்கற்றைக் காணேல்லை!

சுந்த :- ரிக்கற் கவுண்டருக்குக் கிட்டப் போகவே விடுகிறாங்கள் இல்லையே சிவா! கலைக்கிறாங்கள்!

சிவா :- அடிச்சுத் துரத்துறாங்கள், ஆடுமாட்டைத் துரத்துறமாதிரி!

சுந்த :- கப்பல்லை உள்ள இடம் 100ஒ 200ஒ. ஆயிரக் கணக்கிலை வந்து அலை மோதினா.....?

சிவா :- எண்டாலும் மரியாதையாச் சொல்லலாம் தானே?

சுந்த :- பிளேன் ரிக்கற் எடுக்கப் போனா, இதைவிடப் பெரிய மரியாதை! வந்த ஒழுங்கின்படி குடுத்தா, ரிக்கற் தந்திருக்கலாம். உது தில்லுமுல்லுகள் நடக்குது!

சிவா :- பின் கதவாலை குடுக்கிறாங்கள்!

சுந்த :- காசு அடிச்சுக்கொண்டு குடுக்கிறாங்களாம்!

சிவா :- உங்களிட்டை காசு இருக்குதானே மாஸ்ரர்! குடுத்து எடுத்துக் கொண்டு போங்கோ கொழும்புக்கு!

சுந்த :- உது பிழை! நான் கள்ளக் காசு குடுக்கமாட்டன்! அது பிழையான கொள்கை!

சிவா :- அப்ப பரிசளிப்புக்குப் போகேலாது!

சுந்த :- அதைப்பற்றிப் பறவாயில்லை!

சிவா :- *(வியப்புடன்)* என்ன மாஸ்ரர் பவள விழாப் பரிசளிப்புக்குப் போகேல்லையா?

சுந்த :- என்னை, இந்த நாடு முழுக்க அறிமுகப்படுத்திய, இலங்கை வானொலியின் பவள விழாவுக்குப் போக விருப்பம்தான். ஆனா அதுக்காக பிழையான வேலை செய்யக்சுடாது! சிவா, நீங்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறியள். ஜீவ மரணப் போராட்டம்! நீங்கள் காசைக் குடுத்துப் போங்கோ!

சிவா :- எனக்கும் உதே கொள்கைதான். *(பரிதாபமாக)* அதோடை என்னிட்டை இப்ப காசில்லையே!

சுந்த :- அப்ப என்ன செய்யப் போறியள்?

சிவா :- சும்மா வந்து வந்து, போவம். ரிக்கற் தரட்டும்.



படிப்பகம்

padippakam



சுந்த :- நானும் அப்பிடித்தான் செய்யப்போறன்.

சிவா :- உங்களுக்கு கடைசி நேரத்திலை, பிளேன் ரிக்கற்றும் வரலாம்!

சுந்த :- நான் நினைக்கேல்லை. கன பரிசுகளல்லே? அப்பிடி வந்தாலும் கப்பல் பிரயாணம்தான். பிளேன் இல்லையே!

சிவா :- ஒருக்கா யாழ் சேவையையும் கேட்டுப் பாருங்கோவன், உதவி செய்வினமோ எண்டு.

சுந்த :- அதையும் கேட்டுப் பாப்பம்.

### காட்சி -6

***இடம் : யாழ்ப்பாணம். சுந்தரம்பிள்ளை வீடு.***

சுந்த :- *(கவலையாக)* மங்கை பவள விழாவுக்குப் போக முடியாது போலை இருக்கு!

மங்கை :- அதுதான் நல்லது. ஓடித்திரியாமல் ஆறுதலா வீட்டிலை இருங்கோ!

சுந்த :- நான் போக முடியேல்லையே எண்டு கவலைப்படுகிறன். நீ சந்தோஷப்படுறாய்!

மங்கை :- சண்டையள் நடக்குது. இதுக்கை என்ன போக்கெண்டு கேக்கிறன்?

மணி :- *(வந்து)* ஏனப்பா போகேலாது?

சுந்த :- சனம் ஆயிரக்கணக்கிலை கியூவில நிக்குது. ரிக்கெற் தந்தாலும், இனி ஒரு மாதத்துக்குப் பிறகுதான் பிரயாணம்!

மணி :- எப்பவாம் அப்பா, பவள விழா?

சுந்த :- அதுகும் தெரியேல்லை. கடிதம் வரேல்லை இன்னும்.

வண்ண :- தபால் சேவையளும் சீர் இல்லை. சிலவேளை பவள விழா முடிஞ்ச பிறகும் கடிதம் வரும். *(சிரிக்கிறான்)*

மங்கை :- கப்பல் சேவையளும் ஒழுங்கில்லை. கொழும்பிலை கொண்டு போய் விட்டுட்டு, கப்பல் சேவையை நிறுத்தீடுவாங்கள்! அது ஆகவும் அவலமாய்ப்போம்!

சுந்த :- கொம்மா ஆகவும் பயமுறுத்துறா!

மணி :- அப்ப என்ன போகாமல் விடப்போறியளோ?

சுந்த :- இல்லை. கப்பல்காறனைக் கேட்டுக் கொண்டே இருப்பம். தந்தா உடனை போவம்!

மங்கை :- என்ன விழா முடிஞ்ச பிறகு தந்தாலுமோ? *(சிரிக்கிறாள்)*

சுந்த :- விழாவும்தான் எப்பவெண்டு தெரியேல்லையே!
*(சைக்கிள் மணி அடிக்கிறது)*
ஆ...சயிக்கிள் மணி கேக்குது. கடிதமாக்கும் போய் வாங்கியாடா மணி!

மணி :- *(போய் வாங்கி வந்து)* உங்களுக்குத்தானப்பா. இலங்கை வானொலியிலை இருந்து வந்திருக்கு. பவள விழா பற்றியாக்கும்!



படிப்பகம்

padippakam



சுந்த :- தா பாப்பம் *(கடிதத்தை வாங்கி வாசிக்கிறார்)* அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை 30,கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். பவள விழா போட்டி – பரிசளிப்பு 2.9.2000. நேரம் மாலை 5.00 மணி நாடகம் 'தனிக் குடித்தனம்'. இலங்கை வானொலி நடத்திய பவள விழா போட்டியில் தாங்கள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இதற்கான பரிசிலை 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02ஆந் திகதி மாலை 5.00 மணிக்கு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் வைபவரீதியாக வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்றைய தினம் தாங்கள் நேரடியாக சமூகமளித்து, பரிசைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தாங்கள் நேரடியாக சமூகமளிக்க முடியாவிடின், தங்கள் சார்பில் பரிசிலைப் பெற்றுக் கொள்வதற்கு பிரதிநிதி ஒருவரை ஒழுங்கு செய்து, அறியத்தரும்படியும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். நன்றி! பரிசிலை நேரடியாகப் பெற்றுக் கொள்பவர் யார் என்ற விபரத்தை உடனடியாக அறியத்தரவும். இவ்வண்ணம், அருந்ததி ஸ்ரீரங்கநாதன். பணிப்பாளர், தமிழ்ச்சேவை. ஒலிபரப்பு மா அதிபருக்காக.

மங்கை :- அப்ப என்ன ஒரு ஆளை நியமிக்க வேண்டியதுதானே, பரிசு வாங்க?

சுந்த :- ஆ.... என்னுடைய பிறெண்ட் கனகசபைக்கு, அல்லது கதிரவேலுப்பிள்ளைக்கு எழுதுவம் போய் வாங்கச் சொல்லி. அவைக்கும் எழுதி இலங்கை வானொலிக்கும் அறிவிச்சுவிடுவம்.

மணி :- அப்ப நீங்கள், போகேல்லையோ?

சுந்த :- நான் விடமாட்டன். கப்பல் கொம்பனியைக் கேட்டுக் கொண்டே இருப்பன்! ரிக்கற் கிடைச்சாப் போவம்!

மங்கை :- இன்னும் ஆசை விடேல்லை! *(சிரிக்கிறாள்)*

சுந்த :- ஆசை இல்லை மங்கை, கடமை! நான் 300 நாடகங்கள் எழுதினன் எண்டா, அதுக்குக் களம் அமைச்சுத் தந்தது இலங்கை வானொலி! என்னை நாடறிஞ்ச எழுத்தாளனாக்கியது இலங்கை வானொலி! அந்த வானொலி நிலையம், இதுவரை நடத்தாத ஒரு மாபெரும் விழாவை நடத்துகிற பொழுது, நான் நேரை போய், அந்தப் பரிசை வாங்க வேண்டியது என்னுடைய கடமை!

## காட்சி - 7

***இடம் : யாழ்ப்பாணம் சுந்தரம்பிள்ளை வீடு***

சுந்த :- *(கவலையாக)* இண்டைக்கு ஆகஸ்ட் 31. இண்டைக்கும் ரிக்கற் கிடைக்கேல்லை. அப்ப விழாவுக்கும் போகேலாது!

மங்கை :- அதுதான் நல்லது! அவலப்படாமல் ஆறுதலாய் வீட்டிலை இருங்கோ! நீங்கள் போகாட்டிலும் விழா நடக்கும் தானே?

சுந்த :- ஓம் மங்கை, விழா நடக்கும். பவள விழா நடக்கும்! *(கவலையாக)* அதைப் பாக்க நான் குடுத்துவைக்கேல்லை!



படிப்பகம்

padippakam



## காட்சி - 8

**இடம் : சுந்தரம்பிள்ளையின் வீடு.**

*(சைக்கிள் மணி அடிக்கிறது. சுந்தரம்பிள்ளை போய் கடிதங்களை வாங்கிவந்து)*

சுந்த :- *(மகிழ்ச்சி பொங்க)* மங்கை! மணிவண்ணன்! இஞ்சை பாருங்கோ! பவள விழா மலர், சான்றிதழ், 10 ஆயிரம் ரூபா செக்! எல்லாம் வந்திருக்கு. கனகசவை அனுப்பியிருக்கிறார். மலர் அழகாய் இருக்கு!

மங்கை :- *(பார்த்து)* சான்றிதழும் அழகாய் இருக்கு!

சுந்த :- இலங்கை வானொலியின் 75 வரிய சேவைகள், சாதனைகள் பற்றி பல விடயங்கள் போட்டிருக்கு!

மணி :- அப்பா, உங்களுடைய பேரும் பரிசு பெறும் பட்டியலிலை போட்டிருக்கு!

மங்கை :- பாத்தியளே, நீங்கள் போகாட்டிலும் எல்லாம் வந்துட்டுதே!

சுந்த :- நான் நேரை போகேல்லை எண்டெல்லோ, எனக்கும் கவலை!

மங்கை :- நீங்கள் போகாட்டிலும், அந்தச் சபையிலை உங்கடை பேரை வாசிச்சுத்தானே பரிசு குடுத்திருப்பினம்?

மணி :- அப்பா இனி 'தனிக்குடித்தனம்' நாடகத்தைத் தயாரிச்சு வானொலியிலை ஒலிபரப்புவினம். அப்பு உங்கடை பேரைச் சொல்லுகிற பொழுது, இந்த நாடு முழுக்கக் கேக்கும்தானே? எத்தினை முறை ஒலிபரப்பினாலும், அத்தினை முறை கேக்கும்! *(சிரிக்கிறான்)*

சுந்த :- *(பெருமையாக)* மணிவண்ணன்! என்னுடைய நாடகத்தை இலங்கை வானொலி ஒலிபரப்புகிற பொழுது, இந்த நாடு முழுவதும் கேக்குதே! அதுதான் எனக்குப் பெரிய பரிசு!

மங்கை :- *(மகிழ்ச்சியாக)* அதுதான் பெரிய பரிசு!

மணி :- ஓமப்பா! அதுதான் உண்மையான பெரிய பரிசு!

## *இலங்கை வானொலி* *17.02.2001*

**இலங்கை வானொலி, கடந்த 75 வருடங்களாக தமிழ்த்தொண்டும் கலைத்தொண்டும் செய்துகொண்டிருக்கிற நிறுவனம். கடந்த 50 வருடங்களாக நாடகம் தயாரித்து ஒலிபரப்பி வருகிறது. இவ்வளவு தொகையான நாடகங்களை வேறெந்த நிறுவனமும் தமிழுக்கு வழங்கேல்லை. அதிலை 20 வருடங்கள் நான் இலங்கை வானொலிக்கு நாடகங்கள் எழுதியுள்ளேன்.**



படிப்பகம்

padippakam



# நாடகம்
# கலைஞர் கௌரவிப்பு

## பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| | | | வானொலி நாடகத்தில் பங்கேற்றோர் |
| 1. சுந்தரம்பிள்ளை | ~ நாடகாசிரியர் | ~ | R.யோகராஜன் |
| 2. கலைவாணி | ~ நாடக நடிகை | ~ | ஏ.எம்.சி.ஜெயசோதி |
| 3. மதனாகரன் | ~ கலைவாணியின் கணவன் | ~ | ஜே. யோகராஜன் |

### காட்சி - 1

*இடம் :– யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு அகதிமுகாம்.*
*காலம் :– 2000 ஆம் ஆண்டு.*

சுந்த :- *(சுந்தரம்பிள்ளை அதன் வாயிலில் நின்று அதைப் பார்த்துத் தனக்குத்தானே பேசுகிறார்)*

இது என்ன கொட்டில்கள்? ஓ இது ஒரு அகதி முகாமா? பழைய கொட்டில்கள், புதிய கொட்டில்கள்..... நிறைய மனிதர்கள்! ஆண்கள், பெண்கள், குமரிகள், வயோதிபர்கள்..... இதுகளின்ரை வீடுகள் அழிஞ்சிருக்க வேணும். அதுதான் இஞ்சை தொடர்ந்து இருக்குதுகள்! இது என்ன வான்?...... சர்வதேச தொண்டர் நிறுவன வான். அதிலை வந்து இறங்கி நிண்டு, அகதிகளுக்கு ஏதோ குடுக்கினம். வெள்ளைக்காரர், தமிழ் ஆக்கள்...... அகதிகள் சுத்தி நிண்டு வாங்கூதுகள். . . அதிலை நிக்கிறது யார்?.. தெரிஞ்ச முகமாய் இருக்கே? யார்? ஓ. . . அவளா..? கலைவாணி! எனது அந்தக் கால நாட்களின் கதாநாயகி! அவள் எங்கை இஞ்சை வந்தாள்?.... தொண்டர் நிறுவனத்தின் தொண்டராக அவளும் ஏதோ குடுக்கிறாள். தொண்டர் ஸ்தாபனத்திலை சேர்ந்து அகதியளுக்கு தொண்டு செய்யிறாள்! சந்தேகமில்லை கலைவாணிதான்தான்! இதென்ன கோலம்?.... *(ரசனையுடன்)* அந்தக் காலத்திலை கலைவாணி எண்டால்..... கொடிபோன்ற சிவந்த உடல். இடுப்பளவு இறங்கி நிக்கிற கூந்தல், துறுதுறு வென்ற கண்கள்.... அவள் மேடையில் ஏறி நின்றால், கனல் தெறிக்கும் வசனங்கள்! உள்ளத்தை உருக்கும் அழுகைகள்! கலகலவென்ற சிரிப்புகள்! அழகு நடனங்கள்! இன்னிசைக் கீதங்கள்! வாணி மேடையிலை ஏறி நின்றாலே, சொக்கிப் போய் இருக்கும் சபை!.... அவள் நடன ராணி. வாணி அந்தக் கால யாழ்ப்பாணத்து நடனராணி! யாழ்ப்பாணத்துக் கோயில்கள் எல்லாத்திலும் நடனம் ஆடினாள்! அவள் நடனம்



படிப்பகம்

padippakam



ஆடினால், ஆண்களும் பெண்களும் குவிஞ்சு நிண்டு பார்த்து ரசிப்பினம்!.... இப்ப உடல் பருத்துஇ முகம் உப்பி, காஞ்சு,.... அழகான தலைமயிரை அரைவாசியாக வெட்டீட்டாள்! அதிக வயது இருக்காது. 40, 45 ஆகி இருக்கும். நான் அவளைச் சந்திச்சு 25 வரியம் இருக்கும்..... இப்ப அவளைப் போய்ச் சந்திப்பமா? சந்திக்காமல் எப்பிடி விடுகிறது? என்னோடை எவ்வளவு தூரம் பழகினவள்! கலைச் சேவை செய்தவள்! இறங்கி அகதி முகாமுக்குள் போவம். *(அகதி முகாமுக்குள் போகிறார்)* ஆ..... அவளும் என்னைக் கண்டுட்டாள். என்னைப் பார்த்து அறிமுக புன்னகை பூக்கிறாள். எப்படி அடையாளம் காண முடியாமல் போகும்? 15 வரியப் பழக்கம்! ஓ! கலைவாணியே என்னை நோக்கி வாறாள்! இதிலை நிப்பம்!

கலைவாணி :- *(வந்து)* ஓ சுந்தரம்பிள்ளை மாஸ்ரர்!

சுந்த :- ஓ, கலைவாணி! இது என்ன கோலம்?

கலை :- என்னுடைய வாழ்க்கை மாறீட்டுது ..... வயது ஏறீட்டுது..... தொழிலும் மாறீட்டுது. கோலமும் மாறீட்டுது! *(சோகக் சிரிப்பு சிரிக்கிறாள்)*

சுந்த :- இப்ப என்ன செய்யிறாய் வாணி?

கலை:- அதுதான் பாக்கிறியளே மாஸ்ரர்! சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் சேர்ந்து, தொண்டு செய்யிறன். இதுகூட ஆற்றையோ சிபார்சினாலை கிடைச்ச வேலை.

சுந்த:- அப்ப கலைத்தொண்டு செய்தாய்! இப்ப அகதியளுக்குத் தொண்டு செய்யிறாய்! உனக்கு வாழ்க்கை முழுக்க தொண்டாய் அமைஞ்சிட்டுது!

கலை :- நீங்கள் அப்பிடியே இருக்கிறியள் மாஸ்ரர்!

சுந்த :- அப்பிடியேயா? *(சிரித்து)* வயது 66!

கலை:- வயதுக்கேத்த வித்தியாசம் மட்டும்தான். ஆளின்ரை தோற்றம் அப்பிடியேதான்! என்ன சேர் செய்யிறியள்?

சுந்த :- இப்ப பென்ஷன்!

கலை :- இப்ப நாடகம் நடிக்கிறதில்லையா?

சுந்த :- கலைவாணி, நீ போன பிறகுஇ நான் வேறை சில நடிகைகளைப் போட்டு நடிச்சுப் பாத்தன். ஒண்டும் எடுபடேல்லை. மேடை நாடகத்தையே விட்டுட்டன்!

கலை :- அப்ப நாடகமே நடிக்கிறதில்லையா?

சுந்த :- இந்தக் காலத்திலை, ஆர் மேடை நாடகம் பாக்கிறாங்கள்? ரீ. வி.யும் சினிமாவும் வீட்டுக்குள்ள பூந்த பிறகு! நான் இப்ப வானொலி நாடகங்கள் எழுதுறன். அப்ப மேடை நாடகங்கள் மூலம் அராலி மக்களுக்கு மட்டும் சேவை செய்து கொண்டிருந்தன். இப்ப இலங்கை வானொலி மூலம், தமிழ் மக்கள் எல்லாருக்கும் கலைச் சேவை செய்யிறன்!



படிப்பகம்

padippakam



கலை :- நான்கூட உங்களுடைய வானொலி நாடகங்கள் சிலதைக் கேட்டிருக்கிறன்!

சுந்த :- இதாலை போனன். உன்னை அடையாளம் கண்டு கொண்டன். சந்திக்க வேணும் போலை இருந்தது. வந்தன். எப்பிடிச் சந்திக்காமல் இருக்கிறது? என்னை இந்த நாடகத்துறையில் காலூன்றி நிக்கச் செய்ததே நீ தானே வாணி?

கலை :- நானும் நீங்கள் தந்த ஆதரவை மறக்க மாட்டன் சேர்!

சுந்த :- சரி, இப்ப உன்னைப் பற்றிச் சொல்லு!

கலை :- அதை ஏன் சேர்? அது பெரிய சோகக் கதை!

சுந்த :- அதைக் கேக்கத்தான் ஆவலாய் இருக்கிறன். நீ யாரையோ காதலிச்சதாகவும்! கலியாணம் செய்ததாகவும் கேள்விப்பட்டன்?

கலை :- அதுதான் சேர் பெரிய சோகக்கதை!

சுந்த :- *(ஆவலாக)* சொல்லு, கேப்பம்!

கலை :- தொண்டர் நிறுவன வான் வெளிக்கிட நேரம் இருக்கு. சொல்லூறன் சுருக்கமாக.

## காட்சி - 2

*(பழைய நினைவுக் காட்சி.* – FLASH BACK)

*இடம் :– ஒரு பொது இடம்.*

*காலம் :– 25 ஆண்டுகளுக்கு முன்பு.*

மதனாகரன் :- கலைவாணி! நான் உன்னைக் காதலிக்கிறன்!

கலை :- மதனாகரன்! நல்லா யோசிச்சுத்தான் சொல்லூறியளா?

மதனா:- ஓம் கலை, நல்லா யோசிச்சுத்தான் சொல்லூறன்.

கலை :- நான் ஒரு நாட்டியக்காரி. கோயில்களிலை நடனம் ஆடுறவள்!

மதனா:- அந்த நாட்டியம் தான் என்னைக் கவர்ந்தது!

கலை :- மேடையிலும் நடிக்கிறன். நடனம் ஆடுறவள்!

மதனா:- *(ரசனையுடன்)* ஆ. அது அருமையான நடிப்பு! என்ன அசைவு ... என்ன குழைவு, சிரிப்பு, முகபாவம்! கலைவாணி நீ ஒரு அழகுராணி! பிறவி நடிகை! இந்தியாவிலை இருந்திருந்தா, பெரிய சினிமா ஸ்டார் ஆகியிருப்பாய்!

கலை :- *(நாணத்துடன்)* சும்மா புகழாதேங்கோ!

மதனா:- உள்ளதைத்தான் சொல்லூறன் வாணி!

கலை :- மதன் என்னிட்டை சீதணம் ஒண்டும் இல்லை.

மதனா:- இந்த அழகும், குணமும், பாட்டும், நடனமும் நளினமும்தான் சீதணம்! *(சிரிக்கிறான்)*

கலை :- கலியாணத்துக்கு இதுகள் போதுமா? அதுக்குக் காசுச் சீதணம் வேணும்!



படிப்பகம்

padippakam



மதனா:- வாணி சீதணம் உள்ள பெண் எங்கையும் எடுக்கலாம். இப்ப எல்லாரிட்டும் காசிருக்கு. *(ஆசையாக)* இப்பிடியான திறமையள், (Talents) எல்லோரிடமும் இல்லை! எனக்கு இப்பிடியான ஒரு கலாராணி தான் தேவை!

கலை :- வாழ்க்கைக்கு காசு வேணும். உழைப்பு வேணும்!

மதனா:- நான் உழைப்பன்.

கலை :- நான் பாடி, ஆடி அந்தக் கலையை வித்துப் பிழைக்கிறவள்.

மதனா:- வாணி! ஆர்தான் கலையை வித்துப் பிழைக்கேல்லை? ஓவியன், சிற்பி, எழுத்தாளன், கட்டடக்கலைஞன் எல்லாரும் கலையை விக்கிறாங்கள்!

கலை :- உங்களுக்கும் ஒரு நிரந்தர வேலை இல்லை. அப்ப எங்களுக்கு வாழ வழி. . . ?

மதனா:- என்னிட்டைக் கார் இருக்கு. அதைக்கொண்டு உழைப்பன்!

கலை :- மதன், நான் தேவதாசி குடும்பம்.

மதனா:- தேவதாசி எண்டாக் குறைவா வாணி? தேவ அடியாள்! இறைவனுக்குத் தொண்டு செய்யிறவர்கள்! இண்டைக்கு எல்லாரும் கர்நாடக சங்கீதம் பாடுகினம். பரதநாட்டியம் ஆடுகினம். ஆனா அண்டு தொடக்கம் இண்டுவரை, அந்தக் கலையளை அழிய விடாமல் பாதுகாத்து வந்தது, தேவதாசி பரம்பரைதான்! முழுத் தமிழ்ச் சமுதாயமுமே, ஏன் இந்திய சமுதாயமே தேவதாசி குலத்துக்குக் கடமைப்பட்டிருக்கு!!

கலை :- அதெல்லாம் பழம் பெருமை. இப்ப நான் ஒண்டும் இல்லாதவள்! *(இரந்து)* வேண்டாம் மதன்!

மதனா:- அப்ப உனக்கு என்னைப் பிடிக்கேல்லையா?

கலை :- ஐயோ! உங்களை எனக்கு நல்லாப் பிடிக்குது! நான் உங்களுக்காகச் சொல்லூறன்.

மதனா:- அப்ப நீ உப்பிடியே நெடுக நடனம் ஆடிக்கொண்டு இருக்கப் போறியா?

கலை :- நெடுக எப்பிடி ஆட முடியும் மதனாகரன்? வயது போனா, அழகு போயிடும்! பிறகு என்ரை நடனத்தை ஆர் பாப்பினம்? *(பரிதாபமாகச் சிரிக்கிறாள்)*

மதனா:- அப்ப அதுக்குப் பிறகு......?

கலை :- பேசாமல் வீட்டிலை இருக்கிறதுதான்.

மதனா:- கலியாணம்?

கலை :- என்னை ஆர் கலியாணம் செய்வன்? ஆருக்காவது வைப்பாட்டியாய் இருக்க வேண்டியதுதான்! எங்கடை குல வழக்கமே அதுதானே? ஆராவது ஒரு சிலருக்கு வாழ்க்கை வேறு விதமாய் அமையலாம்.

மதனா:- அதிலும் பாக்க என்னைக் கட்டலாம் தானே?



படிப்பகம்

padippakam



கலை :- மதனாகரன்! நான் உங்களுக்காகவல்லோ தயங்கூறன்!

மதனா:- வாணி உன்னை நான் ஏற்கத் தயார்!

கலை :- உங்கடை அப்பா அம்மா?

மதனா:- அவைக்கு மறுமொழி சொல்லூறது நானல்லோ!

கலை :- எனக்கு இருக்க வீடுகூட இல்லை.

மதனா:- என்னிட்டை வீடிருக்கு. அப்பா அம்மா ஏற்றுக் கொண்டா அதிலை இருப்பம். இல்லாட்டாத் தனி வீட்டிலை இருப்பம். என்ன சொல்லூறாய்?

கலை :- சரி மதன், நீங்கள் வற்புறுத்தூற படியால் சம்மதிக்கிறன்!

மதனா:- ஓ எவ்வளவு சந்தோசமாய் இருக்கு வாணி!

## காட்சி - 3

*(பழைய நினைவுக் காட்சி* – FLASH BACK)

*இடம் :– மதனாகரனது வீடு.*

*காலம் :– 25 ஆண்டுகளுக்கு முன்பு.*

மதனா:- கலைவாணி!

கலை :- என்ன மதன்?

மதனா:- இப்ப இந்தக் காருக்கு பிஸ்ரன் போட வேணும்.

கலை :- போடாட்டா?

மதனா:- கார் ஓடாது.

கலை :- என்ன சிலவாகும்?

மதனா:- ஐயாயிரம் ரூபா வரையிலை வரும்.

கலை :- காருக்கா? காசிருக்கா ...?

மதனா:- இல்லையே! அதுதான் யோசிக்கிறன்.

கலை :- கார் உண்மையாகவே ஓடாதா?

மதனா:- அதுதான் சொன்னனே!

கலை :- கார் ஓடாட்டா, அதை நம்பி இருக்கிற எங்களுடைய வாழ்க்கை எப்பிடி ஓடும்? இப்பவே அதில்லை, இதில்லை எண்டு பற்றாக்குறை!

மதனா:- காசெடுக்க ஒரு வழிதான் இருக்கு!

கலை :- என்ன மதன்?

மதனா:- வாணி, உன்ரை சங்கிலியைத் தா!

கலை :- *(கவலையாக)* ஒரே ஒரு சங்கிலி!

மதனா:- இதுகும் ஒரே ஒரு கார். எங்கடை வாழ்க்கையைக் கொண்டு நடத்த உதவுகிற ஒரே ஒரு கார்!

கலை :- *(கவலையாக)* இந்தச் சங்கிலியும் இல்லாட்டா, நான் ஒண்டும் இல்லாதவளாக நிப்பன்!



படிப்பகம்

padippakam



மதனா:- இந்தக் காரும் இல்லையெண்டா, நாங்கள் சாப்பாட்டுக்கே வழி இல்லாதவர்களாக நிப்பம்!

கலை :- மதன், பிஸ்ரன் உடனடியாகப் போட வேணுமா?

மதனா:- வாணி! நான் இப்ப சொன்னதென்ன?

கலை :- நீங்கள் குடிக்கக் காசு கேக்கிறியள்!

மதனா:- ஆர் சொன்னது நான் குடிக்கிறன் எண்டு?

கலை :- ஆரன் சொல்ல வேணுமா? எனக்கே தெரியும்!

மதனா:- எப்பிடித் தெரியும்?

கலை :- இஞ்சை எத்தினை நாள் குடிச்சிட்டு வந்து என்னை அடிச்சிருக்கிறியள்!

மதனா:- நீ வாய் காட்டுறதுக்கு அடிச்சனான்! நான் குடிக்கிறதில்லை!

கலை :- *(அழுகையுடன்)* எல்லாம் எனக்குத் தெரியும். என்னிட்டை இருக்கிற ஒரே ஒரு நகையையும் கொண்டு போய், வித்துக் குடிக்கப் பாக்கிறியள்!

மதனா:- ஒரு சதமும் சீதனம் வாங்காமல் உன்னைக் கட்டிக் கூட்டிட்டு வந்து, தனி வீடு எடுத்து, இருக்க வைச்சு இவ்வளவும் காப்பாற்றுறனே! அதைச் சொல்லேல்லை! குடிக்கிறதைப் பெரிசாச் சொல்ல வந்திட்டாய்!

கலை :- நான் அதுகளை மறக்கேலை மதன்! குடிக்க வேண்டாம் எண்டுதானே சொல்லூறன்!

மதனா:- குடிக்கிறதும் குடிக்காமல் விடுறதும் என்னைப் பொறுத்தது. நீ ஒண்டும் சொல்லத் தேவையில்லை!

கலை :- இப்பவே சிலவுக்குக் கட்டுப்படியாகுதில்லை. இதுக்கை குடியும் சேந்தா?

மதனா:- எந்தச் சிலவானாலும், நான்தானே காசு தாறன்?

கலை :- ஒரு பிள்ளையோடை சிலவுக்குக் கட்டுப்படியாகுதில்லை!

மதனா:- *(வியப்புடன்)* என்ன சொல்லுறாய்?

கலை :- மதனாகரன்! நீங்கள் ரண்டாவது பிள்ளைக்கும் அப்பாவாகப் போறியள்!

மதனா:- அட அந்தச் சனியனும் வந்துட்டுதா?

கலை :- உங்களுடைய பிள்ளைதானே? அதை ஏசுறியளே!

மதனா:- கால நேரம் தெரியாமல் வந்தா, ஏசாமல் என்ன செய்யுறது?

கலை :- கால நேரம் இப்பதான் தெரியுதாக்கும்?
*(அழுகையுடன் சிரிக்கிறாள்)*

மதனா:- அது கிடக்க, நீ இப்ப சங்கிலி தரப்போறியோ இல்லையோ?

கலை :- ரவிக்குக் காச்சல். மருந்து வாங்கிக் குடுக்க வேணும். அதுக்கும் காசில்லை! *(குழந்தை அழும் சத்தம் கேட்கிறது)*

மதனா:- சங்கிலியைத் தா. அடைவு வைச்சுக் காசெடுத்து, ரவிக்கும் மருந்து வாங்கீட்டு, காறுக்கும் சிலவழிக்கிறன்.



படிப்பகம்

கலை :- நான் தரமாட்டன்!

மதனா:- *(கோபமாக)* என்ன தரமாட்டியா?

கலை :- ஓ குடிக்கத் தரமாட்டன்!

மதனா:- நான் குடிச்சா, நீ ஆரடி கேக்க? *(அடிக்கிறான்)*

கலை :- கட்டின பெண்சாதி!

மதனா:- *(நக்கலாக)* கட்டின பெண்சாதி! ஒரு சதமும் இல்லாமல் வந்த பெண்சாதி!

கலை :- நான் சொன்னனான்தானே, என்னிட்டைக் காசில்லை எண்டு. வற்புறுத்திக் கட்டீட்டு, இப்ப அடிக்கிறியளா? *(அழுகிறாள்)*

மதனா:- இந்தா, இன்னும் ஒண்டு தாறன். இன்னும் அழு! *(அடிக்கிறான்)*

கலை :- அடியுங்கோ! ஆர் கேக்க? ஆர் கேக்க? நான் தனிச்சவள்!

மதனா:- இந்தா! அடிச்சுக் கொல்லுவன்! *(அடிக்கிறான்)*

கலை :- பொறுங்கோ, அடிக்காதேங்கோ! இந்தாருங்கோ சங்கிலி! கொண்டுபோய், எதையாவது செய்யுங்கோ!

மதனா:- சரி, மருந்து வாங்கிக் கொண்டுவாறன்.

### காட்சி - 4

***பழைய நினைவுக் காட்சி***

***இடம் :- மதனாகரனது வீடு.***

மதனா:- வாணி, கார் வித்துட்டன்!

கலை :- *(வியப்புடன்)* என்ன காரை வித்துட்டியளா? ஏன்?

மதனா:- ஓடக் கட்டுப்படியாகுதில்லை. திருத்தச் செலவு அதிகம். வாடகைக்குப் பிடிக்கிறவங்கள் ஒழுங்காக காசு தாறாங்களில்லை. கடனிலை ஓடுது.

கலை :- *(கவலையாக)* அப்ப எப்பிடிச் சீவிக்கிறது?

மதனா:- எப்பிடியோ சீவிப்பம். *(சிரிக்கிறான்)*

கலை :- அப்ப அந்தக் காசை என்னிட்டைத் தாருங்கோவன்.

மதனா:- ஏன் உன்னிட்டை?

கலை :- நீங்கள் வைச்சிருந்தால் சிலவழிச்சுப் போடுவியள்.

மதனா:- என்ரை காசு, நான் சிலவழிக்கிறன்! உனக்கென்ன?

கலை :- முழுவதையும் முடிக்கப் போறியள்!

மதனா:- இல்லை கடன் இருக்கு ஒரு தொகை. அதைக் குடுத்திட்டு!

கலை :- மிச்சத்தை எனக்குத் தாருங்கோ!

மதனா:- தர மாட்டன்!

கலை :- அப்ப முழுவதையும் குடிச்சு முடிக்கப் போறியளா?

மதனா:- நான் என்னவோ செய்வன். அதெல்லாம் உனக்குச் சொல்லத் தேவையில்லை!

padippakam



கலை :- நான் உங்கடை பெண்சாதி. உங்களை நம்பி வந்தவள். ரண்டு பிள்ளையளும் இருக்கு. அதுகளுக்குப் பால் மாவுக்கு வழிஇல்லை! சாப்பாட்டுக்கே வழியில்லை! குடிக்காதேங்கோ! *(அழுகிறாள்)*

மதனா:- சும்மா அழாதை! மனிசருக்கு எரிச்சல் வருது!

கலை :- நாங்கள் எப்பிடிச் சீவிக்கிறது? இந்தப் பிள்ளையளை எப்பிடி வளக்கிறது?

மதனா:- என்னைக் கேட்டா?

கலை :- நீங்கள் தானே அப்பா!

மதனா:- எனக்கு உதுகளைப்பற்றிக் கவலை இல்லை!

கலை :- குடிச்சாச் சரி!

மதனா:- ஓ என்ரை கார். நான் வித்தன். நான் குடிக்கிறன்! நீ ஆரடி கேக்க?

கலை :- உங்கடை பெண்சாதி. உங்கடை பிள்ளையளின்ரை தாய்! *(அழுகிறாள்)*

மதனா:- சும்மா அழாதையடி! .... நடிக்காதையடி! .... தேவடியாள்!

கலை :- ஓ தேவ அடியாள்தான்! நான் தேவ அடியாளாகவே இருந்திருப்பன். நீங்கள் தானே வற்புறுத்தி என்னை இந்தக் கலியாணத்திலை மாட்டினது?

மதனா:- அதுக்குத்தானே இவ்வளவு காலமும் வைச்சு சாப்பாடு போட்டன்! ரண்டு பிள்ளையள் தந்தன்! காணாதா?

கலை :- இனி எப்பிடிச் சீவிக்கிறது?

மதனா:- கூலிவேலை செய்யிறது!

கலை :- அது காணுமா?

மதனா:- இல்லாட்டச் சமாளிகிறது.

கலை :- அதிலை ஒரு பகுதியை, நீங்கள் குடிச்சிடுவியள்.

மதனா:- நான் உழைக்கிறன். நான் குடிக்கிறன்.நீ ஆரடி கேக்க?

கலை :- ரண்டு பிள்ளையளும், நாங்களும் சீவிக்க வேணுமே!

மதனா:- அப்ப நீயும் கூலி வேலை செய்!

கலை :- எனக்கு கூலி வேலை செய்யத் தெரியாதே! பழக்கமில்லையே!

மதனா:- அப்ப நடனம் ஆடத்தான் தெரியுமா? அப்ப ஆடு!

கலை :- இளம் வயதிலை நடனம் ஆடலாம். இப்ப வயதும் போட்டுது. பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு ஆடினா, சிரிப்பாங்கள்! அசிங்கமாயிருக்கும்!

மதனா:- அப்ப பட்டினி கிடவுங்கோ! நான் போறன்!

கலை :- *(அதிர்ந்து)* என்ன என்னையும் பிள்ளையளையும் விட்டுட்டா?

மதனா:- உங்களைக் கைவிடாமல், எப்பிடிப் போறது?



படிப்பகம்

கலை :- அப்ப எங்களுக்கு நஞ்சைத் தந்துட்டுப் போங்கோ!

மதனா:- நஞ்சை நீயே வாங்கிக் குடு, பிள்ளையளுக்கும்!

கலை :- உதென்ன கதை பேசுறியள்? உங்களுக்குப் பிள்ளையளிலை பாசம் இல்லையா?

மதனா:- இல்லை! எனக்கு என்னிலைதான் பாசம்! *(சிரிக்கிறான்)*

கலை :- நான் உங்களைப் போகவிடன்! எங்களுக்கு ஒரு வழி காட்டீட்டுப் போங்கோ! *(காலைக் கட்டிப் பிடிக்கிறாள்)*

மதனா:- விடடி! இதுதான்ரி வழி! *(அடிக்கிறான்)*

கலை :- அடிச்சாலும் நான் போக விடன்! *(அழுகிறாள்)*

மதனா:- விடாட்டா உதைப்பன்!

கலை :- ஐயோ! போகாதேங்கோ! எங்களை விட்டுட்டுப் போகாதேங்கோ! *(மதனாகரன் கலைவாணியை உதைத்துத் தள்ளிவிட்டு போகிறான். அவள் அழுகிறாள்)*

*(பழைய நினைவுக் காட்சிகள் முடிந்தன)*

## காட்சி - 5

***இடம் : அகதி முகாம்.***

கலை :- மதனாகரன் அதோட போட்டான். திரும்பி வரவேயில்லை!

சுந்த :- உன்னிலை இல்லாட்டிலும், பிள்ளையளிலை பாசம் இல்லையே!

கலை :- பெண்சாதியிலும் பாசம் இல்லை, பிள்ளையளிலும் பாசம் இல்லை!

சுந்த :- இப்ப, ஆள் எங்கை?

கலை :- வேறை கலியாணம் கட்டி, வாழுறார் எண்டு கேள்வி.

சுந்த :- காதல், காதல், எண்டு வந்து கரம் பிடிச்சானே?

கலை :- *(கவலையுடன்)* என்னுடைய அழகும் இளமையும் கலையும் தான் அவனைக் கவர்ந்தது. அதுகளும் போக, அவனும் போட்டான்!

சுந்த :- வாணி, உனக்கு ஒரு உதவியும் கிடைக்கேல்லையே? நலிந்த கலைஞர்களுக்கு உதவி செய்ய, அரசாங்கம் ஒரு திட்டம் வைச்சிருக்கே?

கலை :- எனக்கு அதுகள் பற்றி ஒண்டும் தெரியாது சேர். ரண்டு பிள்ளையளோடை வாழவே தெரியாமல் கஷ்டப்படுற நான், உதுகளை எப்பிடி எடுப்பன்? எனக்கு ஆர் எழுதுறது?

சுந்த :- எழுதிப்போட்டா, ஏதும் கிடைச்சிருக்கும்!

கலை :- வந்தாலும், அந்த உதவி வந்து சேரப் பல வரியங்கள் ஆகும். அதுக்கிடையிலை நாங்கள் செத்துப்போவமே!

சுந்த :- அப்ப எப்பிடிச் சீவிக்கிறாய்?

கலை :- கூலி வேலை செய்துதான் சேர்!

padippakam



சுந்த :- அழகுராணி! நடனராணி! இசை அரசி! கூலி வேலை செய்து சீவிச்சாயா?

கலை :- *(கவலையாக)* அழகு, இளமை, எல்லாம் போயிட்டா, வேறை என்ன சேர் செய்யிறது?

சுந்த :- *(கவலையா)* யார் யாருக்கோ ஏதேதோ எல்லாம் கிடைக்குது. உண்மையான கலைச் சேவை செய்த கலாராணிக்கு ஒண்டும் இல்லை! *(பெருமூச்சு விடுகிறார்)*

கலை :- கோயில்களிலை நடனமாடினன். எல்லாரும் குவிஞ்சு நிண்டு என்ரை நடனத்தைப் பாத்தார்கள். என்னுடைய பாடல்களைக் கேட்டார்கள். இப்ப உதவி தேவையான நேரத்திலை, ஒருத்தரும் திரும்பிப் பாக்கேல்லை!

சுந்த :- வாணி, உன்னுடைய பாடல்களைக் கேட்டு ரசிச்ச, உன்னுடைய நடனங்களைப் பார்த்து ரசிச்ச, எல்லாரும் உனக்கு உதவக் கடமைப்பட்டிருக்கினம்! சமூகம் தன்ரை கடமையை செய்யத் தவறீட்டுது. நன்றி கெட்ட சமூகம்!

கலை :- அழகும் இளமையும் போட்டா, கலைஞருக்கு மதிப்பில்லை.

சுந்த :- ஆனா எழுத்தாளருக்கு அப்படி இல்லை. வயது ஏற ஏற, அவர்களுடைய அறிவும் ஆற்றலும் கூடிக்கொண்டு போகும்!

கலை :- எல்லா எழுத்தாளரையும் சமூகம் கௌரவிக்கிறதில்லை. சிலர் சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் கிடந்து செத்திருக்கிறார்கள்!

சுந்த :- எழுத்தையே தொழிலாகக் கொண்டு இருந்தவங்கள் சிலர், அப்பிடிச் செத்திருக்கிறாங்கள். எழுத்தையே நம்பி வாழ முடியாது. மனிசனுக்கு ஒரு தொழில் வேணும். எழுத்து ஒரு பொழுது போக்காய் இருக்க வேணும்!

கலை :- என்னைப் பற்றியே கேக்கிறியளே சேர்? உங்களைப் பற்றி ஒண்டும் சொல்லேல்லையே!

சுந்த :- நான் என்ன, இருந்த மாதிரியே இருக்கிறன். கொஞ்சம் வயது போட்டுது! அவ்வளவுதான் வித்தியாசம். *(சிரிக்கிறார்)*

கலை :- அதில்லை சேர், பட்டங்கள் பதவியள். . ..

சுந்த :- பல்கலைக் கழகத்திலை படிச்சு, ஒரு பட்டம் எடுத்திருக்கிறன் B.A. இதை விட வேறை என்ன பட்டம் தேவை?

கலை :- அது உங்களுடைய பேருக்கு பின்னாலை.... பேருக்கு முன்னாலை...?

சுந்த :- அதுதான் என்ரை பேரோடை ஒட்டிக் கொண்டு இருக்கே- அராலியூர்! அதுதான் என்னுடைய பேர், புனைபெயர், அடையாளம், பட்டம் எல்லாம்! அராலியூர் என்ற பேரைக் கேட்டதுமே, வானொலி நேயர்கள் காவல் இருந்து, நாடகம் கேட்பார்கள். எனக்கு இதையும் விடப் பெரிய பட்டமும் கௌரவமும் வேறை எது?



படிப்பகம்

padippakam



கலை :- ஓம் சேர் நான்கூட உங்களுடைய நாடகங்களைக் கேட்டிருக்கிறன். நல்ல நாடகங்கள். முந்தி அராலிலை மேடை நாடகங்கள் நடிக்கிற பொழுதுகூட, நீங்கள் இப்பிடி நாடகங்கள் எழுதினதில்லையே?

சுந்த :- வாணி, எழுத, எழுத எழுத்திலை மெருகு ஏறும்! வயது ஏற ஏற, அனுபவமும் கூடும். அதையும் சேர்த்து எழுத, உலகத்தை நல்லாப் படம் பிடிக்கலாம்!

கலை :- உள்ளதுதான் சேர்! உங்களுடைய நாடகங்களிலையே அது தெரியுது!

சுந்த :- இண்டைக்கு உன்னைக் கண்டு உரையாடினதே ஒரு அனுபவம் தான். வேணுமெண்டா, இதையே ஒரு வானொலி நாடகமாக எழுதிவிடுறன்!

கலை :- எழுதுங்கோ சேர். அது உலகத்துக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்!

சுந்த :- *(உணர்ச்சி பொங்க)* உன்னுடைய கலைச் சேவைக்கு ஒரு காணிக்கையாகவும் இருக்கும்! கட்டாயம் எழுதுவன்!
*(வான் ஹோன் அடிக்கும் சத்தம் கேட்கிறது)*

கலை :- வான் ஹோன் அடிக்குது. வெளிக்கிடுகினம். நான் போட்டு வாறன் சேர்!

சுந்த :- சந்திச்சது சந்தோசம். போட்டு வா வாணி!
*(வாணி போகிறாள். வானும் போகிறது)*

சுந்த :- *(தனக்குத்தானே பேசுகிறார்)* எனது மேடை நாடகங்களிலை நடிச்சு, அவற்றைச் சிறப்பித்த நடிகை கலைவாணி. அவளாலைதான், நான் மேடை நாடகத்துறையிலை தொடர்ந்து இருந்தன் எண்டு கூடச் சொல்லலாம். அவள் போன பிறகு எனது நாடகங்கள் சோபிக்கவே இல்லை! அவள் இப்ப கஷ்ட நிலையில் இருக்கிறாள். அவளுக்கு நான் ஏதும் குடுத்திருக்க வேணும். ஏன் குடாமல் விட்டன்? எனக்கு அது அப்ப, திடீரெண்டு மனதிலை தோன்றேல்லை. யாழ்ப்பாணத்துக் கலா ரசிகர்கள் எல்லாரும், அவளுடைய கலையை ரசிச்ச எல்லாரும், அவளுக்குக் கடமைப் பட்டிருக்கினம்! அவர்கள் உதவி செய்யிறதும் விடுறதும் அவர்களைப் பொறுத்தது. நான் கட்டாயம் உதவி செய்ய வேணும்! ஒரு ஆயிரம் ரூபாயாவது குடுக்கலாம் . அவளை இனி எங்க சந்திக்கிறது? அகதி முகாமுக்கு வருவாளா? அதுவரை காவல் இருக்க முடியாது. சர்வதேச தொண்டர் நிறுவன தலைமைப்பீடத்துக்குப் போய், சந்திப்பம். இண்டைக்கே போவம்!



படிப்பகம்

padippakam



## காட்சி - 6

*இடம் :– யாழ்ப்பாணம் சர்வதேச தொண்டர் நிறுவன தலைமைப் பீடம் இருக்கும் இடம்.*

*காலம் :– 2000 ஆம் ஆண்டு.*

சுந்த :- இதுதான் சர்வதேச சங்கத் தொண்டர் நிறுவன தலைமையகம். விசாரிச்சுப் பாப்பம். *(ஒரு ஆள் வருகிறார்)* அதேதான். கலைவாணி இருக்கிறாவோ? ஒருக்கா வரச் சொல்லுங்கோ. சந்திக்க வேணும்.

கலை :- *(வந்து வியப்புடன்)* மாஸ்ரர்......!

சுந்த :- உன்னோடை கொஞ்சம் பேச வேணும் வாணி. கொஞ்ச நேரம் வெளியிலை வரமுடியுமா?

கலை :- கனதூரம் வரேலாது. கிட்ட எண்டால் வரலாம்.

சுந்த :- இந்தக் கட்டிடத்துக்கு வெளியிலை, பக்கத்து வீதிலை சந்திப்பம்.

கலை :- சரி சேர்.

*(இருவரும் பக்கத்து வீதிக்குப் போகிறார்கள்)*

சுந்த :- இந்தா வாணி, எனது அன்பளிப்பு! *(என்பலப்பை நீட்டுகிறார்)*

கலை :- *(வியப்புடன்)* என்ன சேர் இது?

சுந்த :- வாணி நீ எனக்கு எவ்வளவோ உதவியள் செய்திருக்கிறாய்! அதுக்கு என்னுடைய சின்ன அன்பளிப்பு!

கலை :- அதுகளுக்கெல்லாம் அப்பப்ப, சம்பளம் தந்துட்டியளே சேர்.

சுந்த :- வாணி நீ கலை உலகத்துக்குச் செய்த சேவை விலை மதிப்பற்றது! நான் அந்த நேரத்திலை என்னுடைய, நிலைக்கேற்ப ஏதேதோ தந்திருப்பன். அது காணாது. இப்ப நீ கஷ்டத்திலை இருக்கிறாய். இது நான் உனக்குச் செய்யிற சின்ன உதவி. மறுக்காமல் ஏற்றுக்கொள்!

கலை :- சேர், இப்ப நான் சர்வதேச தொண்டர் நிறுவனத்திலை வேலை செய்யிறன். அவை சம்பளம் தருகினம். இப்ப நான் உந்தக் காசை வாங்கினா, கைக்கூலி வாங்கூறது போலை இருக்கும். புரிஞ்சு கொள்ளுங்கோ சேர்!

சுந்த :- அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை. இது என்னுடைய நாடகங்களிலை நடிச்சு அதுகளை சிறப்பித்ததுக்காக, நான் உனக்குத் தாற சின்ன உதவி! ஏற்றுக்கொள்!

கலை :- *(தழுதழுத்து)* நான் கோயில்களிலை நடனமாடினன். நாடகங்களிலை நடிச்சன். எல்லாரும் குவிஞ்சு நிண்டு, என்னுடைய நடனங்களையும் நடிப்பையும் ரசிச்சினம். பிறகு நான் கஷ்டப்படேக்கை ஒருத்தரும் திரும்பிப் பாக்கேல்லை! எல்லாரும் என்னை மறந்துட்டினம்!



படிப்பகம்

padippakam



சுந்த :- அதுதான் நான் மறக்காமல், இந்த உதவியைச் செய்யிறன்!

கலை :- *(உணர்ச்சி பொங்க)* யாழ்ப்பாணத்துச் கலாரசிகர்கள் எல்லாரும் எனக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள்! ஒருத்தரும் உதவி செய்ய முன்வரேல்லை. உங்களிட்டை மட்டும் நான் உதவி பெறக்கூடாது. அப்படி வாங்கினா உங்களையும் பிழையா விளங்குவினம். என்னையும் பிழையா விளங்குவினம் சேர்! உங்களுடைய நல்ல மனதுக்கு நீங்கள் நல்லாய் இருக்கிறியள். கலை உலகின் உச்சிக்கே போட்டியள்! எனக்கு உதவி செய்ய முன்வந்ததுக்கு மிக்க நன்றி! இந்தச் சர்வதேச தொண்டர் நிறுவனம் எனக்கு நல்ல சம்பளம் தருது. அது எனக்குப் போதும். அவை நல்ல தொண்டு செய்யினம்! நானும் அவையோடை சேர்ந்து தொண்டு செய்யிறன்!

சுந்த :- இந்த சர்வதேச தொண்டர் நிறுவனத்துக்கு, உலகம் முழுவதிலும் இருந்து உதவி கிடைக்குது. அதுகும் உலகம் முழுவதும் தொண்டு செய்யுது. நீயும் அவையளோடை சேர்ந்து தொண்டைச் செய்!

கலை :- *(உணர்ச்சியுடன்)* அப்ப கலைத் தொண்டு மட்டும் செய்தன். இப்ப எல்லாருக்கும் தொண்டு செய்யிறன்!

***இலங்கை வானொலி*** ***02.03.2002***

**யார் யாருக்கோ ஏதோ எல்லாம் கிடைக்குது. உண்மையான கலைச்சேவை செய்த கலாராணிக்கு ஒண்டும் இல்லை!**



படிப்பகம்

padippakam



# நாடகம்
# அடாத்து

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| வீரகத்தி | ~ | கணவன் |
| அன்மம்மா | ~ | மனைவி |
| குணசிங்கம் | ~ | கணவன் |
| கண்மணி | ~ | மனைவி |
| கந்தசாமி | ~ | வீட்டுச் சொந்தக்காரன் |

## காட்சி - 1

*இடம் :– வீரகத்தி வீடு.*
*காலம் :– 1997ஆம் ஆண்டு.*

வீரகத்தி :- அன்னம்மா. . பக்கத்து வீட்டுக் கந்தசாமி அண்ணை குடும்பம், திரும்பி வராததும் நல்லதாய்ப் போச்சுது!

அன்னம்மா :- வீடும் வளவும் பாக்க வெறிச்சோடிக் கிடக்கு. பாக்கப் பயமாய் இருக்கு! ஒரு அயல் இருந்தா நல்லது.

வீர :- அன்னம்மா நான் இருக்கேக்க நீ ஏன் பயப்பிடுறாய்? அயல் இருந்தா நல்லதெண்ணுறாய். பக்கத்து வளவில் புல்லு, குளை, விறகு எல்லாம் நாங்கள் தானே எடுக்கிறம்? *(சிரிக்கிறார்)*

அன் :- ஓம், ஓம், அது உள்ளது தான்.

வீர :- மாங்காய் பிடுங்கூறம், தேங்காய் எடுக்கிறம். கந்தசாமி அண்ணை குடும்பம் இருந்தா, இதெல்லாம் கிடைக்குமே? *(சிரித்து)* எங்கடை கோளியள் அங்காலை போய் மேயுது!......

அன் :- ஓம், ஓம் கன லாபங்கள் இருக்கு!

வீர :- இப்பிடியே நெடுக இருந்திட வேணும்!

அன் :- கனக்கச் சந்தோசப்படாதேங்கோ. வருங்கள் .. வருங்கள்!

வீர :- அதுகள் வன்னிக்கல்லே போட்டுதுகள்! எங்கை வாறது?

அன் :- சிலவேளை வரக்கூடும்.

வீர :- பயந்தல்லே ஓடினதுகள். கடைசிவரையும் வராதுகள்!

அன் :- வன்னீலை சரியான கஷ்டமாம். வரக்கூடும்.

வீர :- அப்பிடியெண்டா, கொழும்பு போய், கனடாவுக்குப் போகக்கூடும். மகன் முரளி கனடாவிலையல்லோ?

அன் :- ஓம், ஓம் கனடாவுக்கும் போகக்கூடும்.

வீர :- அப்பிடியே போயிட்டா, வீடுவளவை நாங்கள் வைச்சுக் கொள்ளலாம்! *(சிரிக்கிறார்)*



படிப்பகம்

அன் :- எங்களுக்கு ஏன் வீட்டை? இந்த வீடுதான் இருக்கே?

வீர :- ரண்டு பெட்டையள் இருக்கிறாளவை, சுமதியும் ராகியும். ஒருத்திக்கு அந்த வீட்டைச் சீதணமாக் குடுக்கலாமல்லே? *(சிரிக்கிறார்)*

அன் :- என்ன கதைக்கிறியள்? சீதணமெண்டா, எழுதியெல்லே குடுக்க வேணும்? எங்களிட்டை உறுதி இல்லை.

வீர :- அப்ப இந்த வீட்டைக் குடுத்திட்டு, நாங்கள் அதிலை இருப்பம். பரம்பரை பரம்பரையாக இருப்பம்! *(சிரிக்கிறார்)*

அன் :- சும்மா மனக்கோட்டை கட்டாதேங்கோ!

வீர :- அன்னம்மா இது மனக்கோட்டை இல்லை, நிஜக்கோட்டை! இப்பவே அந்த வீட்டையும் வளவையும் ஆண்டு அனுபவிக்கிறமே! *(சிரிக்கிறார்)*

அன் :- நல்ல வீடுவளவு. ஆரன் வந்து பூந்துடுவன்கள்!

வீர :- ஆ ஒருத்தரையும் விடக்கூடாது! எங்கடை வீடெண்டு சொல்லி விரட்டியடிப்பம்!

அன் :- வீடில்லாத சனம் கனக்க இருக்கு. ஆரன் வந்து பூந்தா?

வீர :- வீடில்லாதவை எண்டாலும், இந்த வீரகத்தி விடான். விரட்டியடிப்பன்!

அன் :- ஆரும் நல்ல சனம் வந்து கேட்டா, இருக்க விடுவம்.

வீர :- ஆ! விட்டாப் போச்சு! நல்ல பெரிய வீடும் வளவும் எண்டு, நிரந்தரமாகவே இருந்துடுங்கள்! எங்களைப் போலை! *(சிரிக்கிறார்)*

அன் :- ஆரன் சண்டேலை வந்தா? அடாத்தா வந்தா?

வீர :- சண்டேல வந்தாப் பிடிக்கிறதுதான்! நாங்களே வீட்டை அடாத்தாப் பிடிச்சு வைச்சிருக்கேக்கை, இன்னொருத்தர் வந்து அடாத்தாப் பிடிக்க விடவோ? *(சிரிக்கிறார்)*

அன :- *(பயந்து)* வேண்டாம். எங்களுக்கு வீடும் வேண்டாம், சண்டையும் வேண்டாம்!

வீர :- அன்னம்மா பயந்தா பொருள் சேர்க்கேலாது! என்னைச் சலெஞ்ச் பண்ண ஒருத்தரும் வரான். என்ர பேரே வீர-கத்தி! வீரன். பிறகு கத்தி! வெருட்டிவிட, ஓடீடுவங்கள்! *(சிரிக்கிறார்)*

அன் :- சரி ஏதோ ஆபத்திலை மாட்டுப்படாமல் வெருட்டுங்கோ!

வீர :- பயப்பிடாதை அன்னம்மா! என்ரைபேரே வீர.. கத்தி.. முறையா விளையாடித்தாறன்! *(அட்டகாசச் சிரிப்பு சிரிக்கிறார்)*

padippakam



## காட்சி - 2

*இடம் :– குணசிங்கம் வீடு*
*காலம் :– 1997 ஆம் ஆண்டு.*

*(குணசிங்கமும் கண்மணியும் வந்து, தங்களது வீட்டைச் சோதனை போடுகிறார்கள்)*

கண் :- இஞ்சாருங்கோ, வீட்டிலை விட்டுட்டுப்போன சாமான்கள் எல்லாம் களவுபோட்டுது!

குண:- கண்மணி நாங்கள் வந்ததிலை, வீடாவது கிடக்கு. இன்னும் பிந்தியிருந்தா....?

கண் :- வீட்டையே களட்டிக் கொண்டு போயிருப்பாங்கள், எங்கட ஆக்கள்!

குண:- ஓம், ஓம் இப்ப கள்ளரின் சொர்க்கம் யாழ்ப்பாணம். *(சிரிக்கிறார்)*

கண் :- களட்டிக்கொண்டு போய்த்தான் சந்திவழிய வைச்சு விக்கிறாங்களாம், ஓடு, மரம் எண்டு!

குண:- வீட்டுக் கூரையும் உடைஞ்சுட்டுது. ஷெல் விழுந்திருக்கு! நாங்கள் ஒரு காரியம் செய்வமா?

கண் :- என்ன செய்யப் போறியள்?

குண:- பக்கத்தில கந்தசாமி அண்ணை வீட்டிலை குடியேறுவமா? அந்தக் குடும்பம் வன்னியாலை வரேல்லை.

கண் :- எங்கடை வீடிருக்கே?

குண:- அதுதான் உடைஞ்சு போச்சே!

கண் :- ஷெல்தானே விழுந்தது? இருக்கலாம்!

குண:- அந்தச் சாட்டை வைச்சுக் கொண்டு, கந்தசாமி வீட்டிலை குடியேற வேண்டியதுதானே! *(சிரித்து)* கண்மணி உனக்கு ஒண்டும் விளங்காது! நல்ல பெரிய வீடு. பெரிய வளவு!

கண் :- தென்னை, மா, பிலா எண்டு புரோசனங்களும் இருக்கு! புல்லு குளை இருக்கு. ஆடுமாடு வளக்கலாம். . .

குண:- பாத்தியா உனக்கே விளங்குது! நான் உதுக்குத்தான் அந்த வீட்டிலை குடியேறுவம் எண்டனான். *(சிரிக்கிறார்)*

கண் :- கந்தசாமி அண்ணையவை வராயினமா – வன்னியாலை?

குண:- சனம் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வந்து, குடியேறத் துவங்கியே ஒரு வரியமாச்சு. இவ்வளவு காலமும் வராதவை, இனியா வரப்போகினம்?

கண் :- இப்பதானே குருநகர் கடலுக்காலை சனம் வருது. நாங்கள் வந்த மாதிரி, அவையும் வந்தா?



படிப்பகம்

குண :- அவை பயந்து ஓடினவை, திரும்பாயினம். மகன் முரளி கனடாவில இருக்கிறான். அங்கைதான் போவினம். இப்ப கொழும்புக்குப் போயிருப்பினம்!

கண் :- ஓ சனமெல்லாம் இப்ப வெளிநாடுகளுக்குத்தானே ஓடுது. சரி போய் குடியேறுவம்.

குண :- பக்கத்திலை வீரகத்தியும் அன்னம்மாவும் தான் பார்வை போலை கிடக்கு. வந்து உலாவினவை வளவுக்கை.

கண் :- ஓ ஆக்கள் இல்லாட்டா, பக்கத்து வளவையும் தங்கடை வளவு மாதிரிப் பாக்க வேண்டியது தானே?

குண :- *(ரகசியமான குரலில்)* நாங்கள் ஒண்டும் தெரியாதது மாதிரிப் போய், குடியேறுவம்! *(பலமாகச் சிரிக்கிறார்)*

கண் :- வீரகத்தி அண்ணயவையை கேட்டுப் போட்டு, குடியேறினா என்ன?

குண :- கேட்டா, சிலவேளை அவை மறிச்சா சரைச்சல். அதிலும் பார்க்க, நாங்கள் பேசாமல் குடியேறுவம்!

கண் :- ஓ ஆட்டைக் கேட்டு ஆணம் காச்சேலாது. *(யோசித்து)* வீடு பூட்டியிருந்தா...?

குண :- பூட்டை உடைச்சிட்டுக் குடியேறவேண்டியது தான்! பிறகு எங்கடை வீடுமாதிரி இருக்கலாம்! கண்மணி வா, வா பெட்டியையும் தூக்கிக் கொண்டு வா....! *(பக்கத்து வீட்டுக்குப் போகிறார்கள்.)* வீடு பூட்டிக் கிடக்கு!

கண் :- கந்தசாமி அண்ணையே, பூட்டிக் கொண்டு போயிருப்பர்.

குண :- அவர் பூட்டினதை இஞ்சை இருக்கிறவங்கள் விடுவங்களே? சனம் வந்தும் ஒரு வரியம் ஆகுது.

கண் :- அப்ப வேறை ஆர்?

குண :- வீரகத்திதான் பூட்டி வைச்சிருக்கு, தான் எடுக்க. உடைக்கட்டே?

கண் :- வேண்டாம். . வேண்டாம்!

குண :- உடைக்காட்டா, உள்ளுக்குப் பூரேலாது!

கண் :- பூட்டிக்கிடக்கிற வீட்டை எடுத்த உடனை உடைக்கக் கூடாது! கூப்பிட்டுக் கேளுங்கோ, வீரகத்தி அண்ணையை!

குண :- கண்மணி! அந்தாள் நல்லாத் தந்துதே திறப்பை!

கண் :- ஒருக்காக் கேட்டுப் பாருங்கோவன்.

குண :- தராட்டா உடைப்பன்! ஓ..!

கண் :- மெல்லப் பேசுங்கோ! கூப்பிடுங்கோ....

குண :- சத்தம் போட்டுப் பேசினாத்தான் வீரகத்தி பயப்பிடும்! *(சிரிக்கிறார்)*

padippakam



*(வீரகத்தி வீட்டில் வீரகத்தியும் அன்னம்மாவும் பேசுகிறார்கள்)*

வீர :- அன்னம்மா..... பக்கத்திலை கந்தசாமி வளவுக்கை ஆக்கள் வந்து நிக்கினம். வீட்டைத்தான் சுத்திச் சுத்திப் பாக்கினம்.

அன் :- குணசிங்கம் அண்ணையும், கண்மணி அக்காவும்.

வீர :- வன்னீலை இருந்து வந்துட்டுதுகளோ? ஏன் இஞ்சை வந்தவை? வீட்டுக்குள்ளை பூரப்பாக்கினம் போலை!

அன் :- அவேன்ரை வீடு உடைஞ்சலல்லே கிடக்கு?

வீர :- ஒரு கொஞ்சம். அந்தச் சாட்டை வைச்சுக் கொண்டு, இந்த வீட்டிலை இருக்கப் பாக்கினம் போலை! *(நக்கல் சிரிப்பு)*

அன் :- குடுக்கப் போறியளே துறப்பை?

வீர :- நல்ல கதை! நான் இவ்வளவு பாதுகாத்து பூட்டி வைச்சிருக்கிறன், உவைக்குக் குடுக்கவே? *(நக்கல் சிரிப்பு சிரிக்கிறார்)*

அன் :- தங்கடை வீட்டைத் திருத்தீட்டுப் போயிடுங்கள்.

வீர :- கடைசி வரையும் போகாதுகள்! நல்லாத் திட்டம் போட்டுத்தான் வந்திருக்குதுகள், வீட்டை அமத்த!

அன் :- நீங்கள் அமத்த நினைச்ச வீட்டை, அவை அமத்துப் பாக்கினம்! *(சிரிக்கிறார்)*

குண:- *(கூப்பிடுகிறார்)* வீரகத்தி அண்ணை! வீரகத்தி அண்ணை!

அன் :- குணசிங்கம் கூப்பிடுது. போய்ப்பாருங்கோ. சண்டை வேண்டாம். சும்மா கதையுங்கோ!

வீர :- சண்டை பிடியாட்டா வீடு பறிபோயிடும்! அன்னம்மா. நீயும் வா. *(கிட்டப்போய்)* குணசிங்கம்! எப்ப வந்தனீங்கள் வன்னிலை இருந்து?

குண :- இண்டைக்குத்தான் வீரகத்தி அண்ணை. இந்த வீட்டுத் துறப்பு உங்களிட்டையே?

வீர :- ஓம், நான் தான் பூட்டி வைச்சிருக்கிறன்.

குண :- தாறியளே துறப்பை?

வீர :- ஏன் துறப்பு?

குண :- இந்த வீட்டிலை குடியேறப் போறம். *(சிரிக்கிறார்)*

அன் :- ஏன் அண்ணை உங்கடை வீட்டுக்கு என்ன?

கண் :- அது உடைஞ்சு கிடக்கு அன்னம்மாக்கா . . .

வீர :- கண்மணி! எங்கட வீடும் உப்பிடித்தான் கிடந்தது. நாங்கள் திருத்தீட்டு, அதிலைதான் இருக்கிறம்.

குண :- அதைப் பிறகு திருத்துவம். இப்ப இந்த வீட்லை இருப்பம்.

வீர :- குணசிங்கம் வடிவாப் பூட்டி வைச்சிருக்கிறன். திறப்பு தரமாட்டன்!



படிப்பகம்

குண :- இது உங்கடை வீடில்லை, கந்தசாமியண்ணேன்ரை வீடு!

வீர :- அவர் என்னிட்டைத்தான் சொல்லிப்போட்டு போனவர், பாத்துக்கொள்ளச் சொல்லி.

குண :- வன்னீலை என்னிட்டும் சொல்லிவிட்டவர், போய் பாக்கச் சொல்லி!

அன் :- அவர் இப்ப எங்கை அண்ணை?

கண் :- கந்தசாமி அண்ணை வன்னீலை இருந்து கொழும்புக்குப் போட்டார்.

வீர :- அவர் கொழும்புக்குப் போட்டார் எண்டு, வீட்டை அமத்தப் பாக்கிறியா? *(கோபச் சிரிப்பு சிரிக்கிறார்)*

குண :- அவர் போட்டார் எண்டு, நீ வீட்டை அமத்தப் பாக்கிறியா?

அன் :- சண்டை வேண்டாம்! சண்டை வேண்டாம்!

கண் ;- வாருங்கோ போவம்.. வாருங்கோ போவம்!

வீர :- நீ என்ன சொன்னா என்ன, நான் திறப்புத் தரமாட்டன்!

குண :- நீ திறப்பைத் தராட்டா, நான் கதவை உடைப்பன்!

வீர :- அந்தக் கெட்டித்தனத்தையும் பாப்பம்! என்ரை பேரே வீரகத்தி! *(கோபச் சிரிப்பு சிரிக்கிறார்)*

குண :- என்ரை பேர் குணசிங்கம்! *(கோபச் சிரிப்பு)* சிங்கம்! *(ஒரு கல்லைத் தூக்குகிறார்)* இந்தக் கல்லாலை ஒரு அடி விட்டனென்டா, கதவு உடையும்!

வீர :- *(வீரகத்தி ஒரு பொல்லைத் தூக்குகிறார்)* இந்தப் பொல்லாலை ஒரு அடி விட்டனென்டா, உன்ரை மண்டை உடையும்!

அன் :- ஐயோ சண்டை வேண்டாம்! வாருங்கோ!

கண் :- ஐயோ வாருங்கோ போவம்! வீடும் வேண்டாம்! சண்டையும் வேண்டாம்!

வீர :- குணசிங்கம் கிட்டப் போகாதை! *(கதவுக்குக் கிட்டப் போகிறார்)* அடிப்பன்! அடிப்பன்!. .

குண :- வீரகத்தி குறுக்கை வந்தியோ, நானும் உனக்கு அடிப்பன்!

வீர :- *(பொல்லை உயர்த்தி உரத்து)* டேய்! போடா அங்காலை!

குண :- நீ போடா அங்காலை! *(வீரகத்தி பொல்லால் அடிக்கிறார். குணசிங்கத்தின் தலையில் இருந்து இரத்தம் ஓடுகிறது)* என்ன அடிச்சுட்டியா? இந்தா உனக்கும் தாறன்! *(கல்லால் அடிக்கிறார். வீரகத்தியின் தலையிலிருந்தும் ரத்தம் ஓடுகிறது)*

அன் :- ஐயோ, ஐயோ! ரத்தம் ஓடுதே . . .!

கண் :- என்ரை மனிசன்ர தலேலை இருந்தும் ரத்தம் ஓடுதே . . !

padippakam



கந்த:- *(கந்தசாமி வருகிறார். உரத்து)* வீரகத்தி! குணசிங்கம்! பொறுங்கோ, பொறுங்கோ! இதென்ன சண்டை?

வீர :- *(வியப்புடன்)* கந்தசாமி அண்ணை! வந்துட்டியளா?

குண:- *(வியப்புடன்)* கந்தசாமி அண்ணை வந்துட்டியளா?

அன் :- கந்தசாமி அண்ணை! நல்ல நேரம் வந்து சேந்தியள், கடவுள் மாதிரி!

கண் :- *(இரந்து)* உடனடியாச் சண்டையை நிப்பாட்டுங்கோ.. அண்ணை! ரண்டு பேரும் அடிபட்டுச்சாக நிக்குதுகள்!

கந்த :- ஏன் சண்டை? இதென்ன ரத்தம்? ரண்டு பேற்றை தலையும் உடைஞ்சுபோச்சு! அடடா!

வீர :- கந்தசாமி அண்ணை உங்கட வீட்டை நான் வைச்சிருக்கப் பாத்தன்... சண்டை வந்துட்டுது!

குண:- நானும் பிடிக்கப் பாத்தன். சண்டை வந்துட்டுது! ரண்டு பேற்றை தலையும் உடைஞ்சு போச்சு!

கண் :- *(பரிதாபமாக)* கொஞ்சம் முந்தி வராதேங்கோவன் அண்ணை! இந்தச் சண்டையைத் தவிர்த்திருக்கலாம்!

அன் :- *(பரிதாபமாக)* மண்டையள் உடையாமல் பாத்திருக்கலாம்!

கந்த :- நான் என்ன செய்யிறது? பிளேன் இப்பதானே வந்துது. அதுதான் சொல்லூறது மற்றவேன்ரை பொருளுக்கு ஆசைப்படக் கூடாதெண்டு! *(சிரித்து)* பறவாயில்லை. ரண்டு பேரும் ஒரு பாடம் படிச்சிட்டியள்!

வீர :- ஓம் அண்ணை, பாடம் படிச்சிட்டம்!

குண:- நல்ல பாடம் படிச்சிட்டம்!

கந்த:- சரி வாருங்கோ, நானே கூட்டிக் கொண்டு போய், ரண்டு பேருக்கும் மருந்து கட்டுவிச்சு விடுறன்!

***இலங்கை வானொலி*** ***04.06.1997***

**மற்றவேன்ரை பொருளுக்கு ஆசைப்படாதே!**



படிப்பகம்

padippakam



# நாடகம்

# ஆசைகளும் அவலங்களும்

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| சிவலிங்கம் | ~ | கணவன் |
| மாலதி | ~ | மனைவி |
| ரங்கன் | ~ | அவர்களது மகன் |
| சசி | ~ | அவர்களது மகள் |
| நாகேந்திரன் | ~ | சிவலிங்கத்தின் நண்பன் |

### காட்சி - 1

***இடம் :– சிவலிங்கத்தின் வீடு***

சிவ :- இஞ்சா மாலதி!

மால :- என்ன?

சிவ :- நான் ஒரு மோட்டச் சைக்கிள் வாங்கட்டே?

மால :- மோட்டச் சைக்கிளோ? ஏன் மோட்டச் சைக்கிள்?

சிவ :- சுகமா ஓ.'.பீசுக்குப் போய் வரத்தான்.

மால :- இவ்வளவு காலமும் சைக்கிளிலைதானே போய் வந்தனீங்கள்? இப்ப ஏன் இருந்தாப் போல மோட்டச்சைக்கிள்?

சிவ :- உந்தக் கல்லுண்டாய் வெளிக்காலை சைக்கிள் உளக்கேலாதப்பா. களைக்குது! பஞ்சியாக்கிடக்கு!

மால :- இவ்வளவு காலமும் கஷ்டமில்லை, இப்பதானே கஷ்டம்?

சிவ :- மனிசன் நெடுகக் கஷ்டப்படுறதே மாலதி? இனியாவது கொஞ்சம் சுகத்தை அனுபவிப்பம் *(சிரிக்கிறார்)*

மால :- இப்பதானே பஸ் ஓடுது. நல்ல புத்தம் புது பஸ்ஸுகள். ஏறி ஓடுங்கோ!

சிவ :- பஸ்சுகள் சனம் அப்பா. அதுக்கை அவன் மல்லாகம், உடுவில், மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை எண்டு சுத்திவர, அராலி ஆக்களுக்கு இடமிருக்காது!

மால :- சும்மா சாட்டுக்கள் சொல்லாமல் பஸ்ஸிலை போங்கோ!

சிவ :- எனக்கு ஒருக்கா மோட்டச் சைக்கிள் ஓட ஆசையாய் இருக்கப்பா!

மால :- அப்பிடிச் சொல்லுங்கோவன் ஆசையை! *(சிரிக்கிறாள்)*



படிப்பகம்

padippakam



சிவ :- மாலதி, எனக்கு நெடுகக் கூடியே மோட்டச் சைக்கிளிலை ஆசை இருந்தது. இவ்வளவு காலமும் சைக்கிள் வரேல்லை. *(ஆசையாக)* இப்ப கொண்டு வந்து அடுக்கியிருக்கிறாங்கள், கடையளிலை! புதுச் சைக்கிள்கள்! பாக்க ஆசையா இருக்கு!

மால :- நீங்கள் ஏன் கடையளைப்பாத்து ஆசைப்படுறனீங்கள்? நேரா றோட்டை பாத்துக் கொண்டு போறதுக்கு? *(சிரிக்கிறாள்)*

சிவ :- அதுகள் கண்ணைப் பறிக்குதப்பா, பளிச் பளிச்செண்டு!

மால :- அப்ப ஆசைப்பட்டதெல்லாம் செய்யப்போறியளோ?

சிவ :- மாலதி, ஒண்டு வாங்குவம் அப்பா! பிளீஸ்!

மால :- வாங்கினா, பெற்றோல், மண்ணெண்ணெய்க்குப் பிரச்சினை இல்லையா?

சிவ :- இல்லை. இப்பதானே பெற்றோல், டீசல் எல்லாம் குடுக்கிறாங்கள். எவ்வளவு மண்ணெண்ணெயும் வாங்கலாம்!

மால :- மோட்டச் சைக்கிள் வாங்கக் காசு?

சிவ :- பாங்கிலை ஐம்பதினாயிரம் ரூபா இருக்கு. நீ உன்ரை காப்பையும் தந்தியெண்டா, அறுபதினாயிரம். வாங்கலாம்.

மால :- காப்போ? நான் தரன்!

சிவ :- மாலதி, நீயும் ஏறி ஓடலாமல்லோ?

மால :- நான் காப்பும் தரேல்லை! மோட்டச் சைக்கிளிலை ஏறி ஓடவும் வரேல்லை!

சிவ :- மாலதி உன்னைக் கொப்பர் வீட்டை, கொண்ணை வீட்டை எல்லாம் கூட்டிக் கொண்டு போறதில்லை எண்டு, என்னோடை சண்டை பிடிக்கிறனியல்லே? மோட்டச் சைக்கிள் வாங்கினா,உன்னை, உந்த உலகமெல்லாம் கொண்டு திரிவன்!

மால :- ஐயோ வேண்டாம்! எனக்கு இஞ்சை வீட்டுவேலையள் செய்யவே நேரமில்லை. நான் உலகம் சுத்தட்டே? *(சிரிக்கிறாள்)*

சிவ :- பிள்ளையள் சசியையும், ரங்கனையும் கொண்டு போய், பள்ளிக்கூடத்திலை விடுவன்.

மால :- அதுகளுக்கு மோட்டச்சைக்கிள் வேண்டாம். அதுகள் இவ்வளவு காலமும் போன மாதிரி, நடந்து போகுங்கள். *(சசியும் ரங்கனும் வருகிறார்கள்)*

ரங் :- *(வந்து)* என்னப்பா, மோட்டச் சைக்கிள் வாங்கப் போறியளா?

சிவ :- ஓமடா ரங்கன், அதுக்குத்தான் பிளான் போடுறன்.

ரங் :- கெதியா வாங்குங்கோ அப்பா! நாங்களும் ஏறி ஓடலாம்!



படிப்பகம்

padippakam



மால :- பாத்தியளே! நீங்க மோட்டச் சைக்கிள் வாங்க முன்னமே, ரங்கன் தான் ஏறி ஓடப் போறன் எண்டு நிக்கிறான்!

ரங் :- அம்மாவுக்கு விளங்கேல்லை. நான் அப்பாவுக்குப் பின்னாலை ஏறி இருந்து ஓடுவன், எண்டு சொன்னனான்! *(சிரிக்கிறான்)*

மால :- இந்த வரியம் பின்னாலை இருந்து ஓடுவம் எண்ணுவாய். வாற வரியம் முன்னுக்கு இருந்து ஓடப்போறன் எண்ணுவாய்! உது மோட்டச் சைக்கிள் இல்லை, மோட்டுச் சைக்கிள்! என்ன ஆபத்து வருதோ? வேண்டாம், வேண்டாம்!

சசி :- அப்பா! மோட்டச் சைக்கிள் வாங்கினா, என்னை ஏத்திக் கொண்டு போய் பள்ளீலை விடுவியளே?

சிவ :- கட்டாயம் சசி! எல்லாருக்காகவும்தானே, வாங்கப் போறம் எண்ணூறன்!

சசி :- அப்ப கெதியா வாங்குங்கோ அப்பா!

சிவ :- பாத்தியே மாலதி! பிள்ளையள் ரங்கனும் சசியுமே வாங்கட்டாம்.

மால :- அதுகளுக்கு என்ன தெரியும்?

ரங் :- அப்பா, என்ன தடை?

சிவ :- காசு கொஞ்சம் காணாது. அம்மாவை காப்பைத் தரச்சொன்னன். அவ தரேலாதாம்!

ரங் :- குடம்மா, காப்பைக் குடம்மா!

சசி :- நாங்களும் ஓடுவம், குடம்மா!

மால :- சரி எல்லாரும் ஒரே முகமாய் நிக்கிறியள். காப்புத் தாறன்.

ரங் :- நல்ல அம்மா! நல்ல அம்மா!

சசி :- ஓடிப்போய் வாங்கியாருங்கோ அப்பா!

மால :- பார் சசீன்ரை அவசரத்தை! *(நாகேந்திரன் வருகிறார்)* இஞ்சை உங்கடை நண்பன் நாகேந்திரன் வாறார்.

நாகே:- என்ன சிவலிங்கம், குடும்பமாக இருந்து யோசிக்கிறியள்?

சிவ :- நாகேந்திரன்! இரு, இரு.

நாகே :- ஏதன் பெரிய விசயமாத்தான் இருக்கும். *(சிரிக்கிறான்)*

மால :- உங்களுடைய நண்பன் மோட்டச்சைக்கிள் வாங்கப் போறாராம். எனக்கெண்டா மனமில்லை. வீண் செலவு. கரைச்சல். நண்பனுக்கு புத்திமதி சொல்லுங்கோ!

நாகே:- சிவலிங்கம் நான் ஒரு மோட்டச் சைக்கிள் வைச்சிருந்து பட்ட அவலத்தைச் சொல்லுறன், கேள்! *(சிரிக்கிறான்)*

சிவ :- மச்சான் நாகேந்திரன், நீ மட்டும் அவலப்பட்டாக் காணுமோ? நானும் அவலப்பட வேண்டாமோ? *(சிரிக்கிறார்)*



படிப்பகம்

padippakam



நாகே:- சொல்லுறன், கேளன்!

மால :- சரி சொல்லுங்கோ!

நாகே :- ஒண்டை வாங்கி வைச்சிருந்து, அதுக்குப் பெற்றோல் கிடையாமல்,மண்ணெண்ணை விட்டோடி, அது என்ஜின் எல்லாம் காபன் ஏறி, நான் கன காசு சிலவழிச்சு திருத்தி, அப்பவும் அது பழுதாகி, பிறகு பாட்ஸ் கிடையாமல்....... அவலப்பட்டு.......

சிவா :- எங்கையோ பழம் சைக்கிள் போலை? *(சிரிக்கிறார்)*

நாகே :- அரைப் பளைசு!

மால :- சரி கதையை முடியுங்கோவன். பிறகு.....?

நாகே :- பிறகு விக்கப் பாத்தன். பழுதான சைக்கிளை ஆரோ வாங்குறானே? கடைசீலை அதைக் கட்டித் தூக்க வேண்டிய கட்டம். நல்ல காலம். ஆரோ கேட்டான். அரை விலைக்குக் குடுத்திட்டன்!

சிவ :- நாகேந்திரன் அது அப்ப! இப்ப சைக்கிளும் கிடைக்குது. பாட்சும் கிடைக்குது! மண்ணெண்ணையும் கிடைக்குது! பெற்றோலும் கிடைக்குது! *(சிரிக்கிறார்)*

நாகே :- உது நெடுகக் கிடைக்கும் எண்டு என்ன நிட்சயம்?

சிவ :- எல்லாம் கிடைக்கும்!

ரங் :- மாமா, அப்பாவைத் தடுக்காதேங்கா!

சசி :- எங்களுக்கு மோட்டச்சைக்கிள் ஓட ஆசையாயிருக்கு மாமா!

நாகே :- என்னைப்போலை உப்பிடிக் கனபேர் அவலப்பட்டவை.

சிவ :- நானும் ஒருக்கா அவலப்படுவம்! *(சிரிக்கிறான்)*

நாகே :- சரி. எல்லாரும் ஏறி விழுந்த குதிரேலை, சக்கடத்தாரும் ஏறி விழுந்தாராம் எண்டு, நீயும் கஷ்டப்பட ஆசைப்படுறாய்! சரி வாங்கிக் கஷ்டப்படன்! *(சிரிக்கிறார்)*

## காட்சி - 2

***இடம் :– சிவலிங்கம் வீடு.***

*(சிவலிங்கம் மோட்டச் சைக்கிளில் வந்து இறங்குகிறான்)*

சிவ :- மாலதி கொண்டு வந்திட்டன் மோட்டச்சைக்கிள்!

மால :- *(வந்து பார்த்து)* ஏதோ பெரிய சைக்கிளாக்கிடக்கு?

சிவ :- M.T.50. அறுபதினாயிரம்!

மால :- (ஏங்கி) அறுபதினாயிரமா?

சிவ :- பார், சைக்கிள் பளிச் பளிச்செண்டு இருக்கு!

மால :- புதுச் சைக்கிள் பளிச் பளிச்செண்டுதானே இருக்கும்? *(ரங்கனும் சசியும் ஓடி வருகிறார்கள்)*



படிப்பகம்

ரங் :- அப்பா இதுதானா நீங்கள் வாங்கின மோட்டச்சைக்கிள்? நல்ல சைக்கிள்!

சிவ :- ரங்கன்! அதிலை எக்சோஸ்ட் பைப்பிலை தொட்டுடாதையடா! காலை அள்ளீடும்!

சசி :- அப்பா! எங்களை ஒருக்கா இதிலை ஏத்தி ஓட்டுறியளா? ஆசையாய் இருக்கு!

சிவ :- பொறுங்கோ, பொறுங்கோ! கொண்டர முன்னம் ஓட நிக்கிறியள்!

மால :- பிள்ளையள் ஆசைப்படுது. ஒருக்கா ஏத்தி ஓடுங்கோவன்!

சிவ :- எங்கை ஓடுறது? உந்த சென்றியளுக்காலை நான் வரப்பட்ட பாடு....!

மால :- ஏன் மெயின் ரோட்டுக்குப் போறியள்? சும்மா ஊருக்கை ஒழுங்கையளுக்கை சுத்தி ஓடுங்கோவன்!

ரங் :- *(சிரித்து)* ஓடுவம் அப்பா! ஓடுவம் அப்பா!

சசி :- *(கெஞ்சி)* போவம் அப்பா!

சிவ :- சரி வெளிக்கிட்டு வாருங்கோ! மாலதி நீயும் வரப்போறியா?

மால :- நான் வரேல்லை. பிள்ளையளைக் கூட்டீட்டுப்போங்கோ!

ரங் :- நான் ரெடி அப்பா!

சசி :- நானும் ரெடி அப்பா!

சிவ :- சரி ரங்கனும் சசியும் ஏறுங்கோ பின்னாலை. சரியா?
*(ரங்கனும் சசியும் பின் சீட்டில் ஏறி இருக்கிறார்கள்)*

ரங் :- சரி அப்பா!

சசி :- அம்மா போட்டு வாறம்!

ரங் :- சேரியோ!

மால :- கவனம், கவனம்!

சிவ :- உந்தச் சரியோவை விட்டுட்டு, இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு இருங்கோ. எடுக்கிறன்!!
*(மோட்டச்சைக்கிள் ஓடுகிறது)*

## காட்சி - 3

*இடம் :– சிவலிங்கம் வேலை பார்க்கும் கந்தோர்.*

நாகேந்திரம் :- என்ன மச்சான் சிவலிங்கம், மோட்டச்சைக்கிள் வாங்கியும் ஒ..பீசுக்கு லேட்டாத்தானே வாறாய்? சில நாட்களிலை அரை மணித்தியாலம் லேட்! *(சிரிக்கிறான்)*

சிவ :- என்ன செய்யிறது மச்சான் நாகேந்திரன்? பஸ் டக்கெண்டு வந்துடுது. இது லேட்டாகுது, சென்றியளிலை நிண்டு நிண்டு, வர . . . .

padippakam



நாகே :- ஓ பஸ்ஸை மினக்கெடுத்தாமல் விட்டுடுவங்கள்.

சிவ :- அது நாவாந்துறையாலை நேராக வருது ரவுணுக்கு. நான் தட்டாதெரு சுத்தியல்லோ வாறன்?

நாகே :- இனி மோட்டச் சைக்கிள் தானே எண்டு, நீயும் ஆறுதலா வெளிக்கிடுவாய்! *(சிரிக்கிறான்)*

சிவ :- அதுகும் உள்ளதுதான் மச்சான். ஆனா நான் எவ்வளவு வெள்ளண வெளிக்கிட்டாலும், லேட்டாகுது. எத்தினை சென்றியள்! நூறு யார் ஓடினா, நூறு யார் சென்றீலை உறுட்ட வேணும்! அதிலும் தட்டாதெருச் சந்திதான் ஆக மோசம்!

நாகே :- அதிலை நல்லா மினைக்கெடுத்தூறாங்கள்.

சிவ :- வாகனங்கள் கூடிப்போனா, அரை மணித்தியாலம் சென்றீலை காவல்நிண்டு, அரைமணி நேரம் மோட்டச் சைக்கிளைத் தள்ள வேணும்! நாச்சிமார் கோயிலடீலை இருந்து தள்ள வேணும்! எனக்குத் தவில் அறுந்துபோச்சு!

நாகே :- எண்டாச் சுதியா ஓடுறாய்தானே?

சிவ :- சுதி எங்கை? நாரி முறியுது! ஒரு சென்றி போக, அடுத்த சென்றி! கியர் மாத்த முன்னம், சென்றி!

நாக :- அப்ப கல்லுண்டாய் வெளீலையாவது ஓடலாம்தானே?

சிவ :- கல்லுண்டாய் வெளி மூண்டு மைல். அதுக்கை நாலு சென்றி! ரொப் கியரே போட்டு ஓடுறதில்லை!

நாகே:- ஐயோ பாவம்! அப்ப என்னடா சிவா சைக்கிளை விக்கப் போறியா?

சிவ :- சீச்சீ.... விக்கிற ஐடியா இல்லை.......

நாகே :- அப்ப ஓடு! ஆசை தீர ஓடு!

சிவ :- எங்கையடா ஓடுறன்! தள்ளுறன்! *(பரிதாபச் சிரிப்பு)*

நாகே :- அப்ப நல்லாத் தள்ளு. நாரி முறியத் தள்ளு! *(சிரிக்கிறான்)*

சிவ :- இன்னும் ஒண்டு மச்சான் நகேந்திரன். ரோட்டெல்லாம் குண்டும் குழியுமாக்கிடக்கு!

நாகே :- சைக்கிள் எண்டா வெட்டி, வெட்டி ஓடலாம்.

சிவ :- மோட்டச் சைக்கிளை கண்டபடி வெட்டினா, ஆள் விழுந்துபோம். குண்டு குழியளுக்கு மேலாலை ஓட, ஆளைத் தூக்கிக் குத்தூது! எனக்கு நாரிப் பிடிப்பு வந்திட்டுது மச்சான்!

நாகே :- என்னடா சிவா இந்த இளம் வயதிலையா?

சிவ :- என்ன செய்யிறது? றோட்டிலை குத்தூற குத்து அப்பிடி!

நாகே :- என்னுடைய அனுதாபங்கள் மச்சான்! *(சிரிக்கிறான்)*



படிப்பகம்

padippakam



சிவ :- *(பயந்து)* கள்ளருக்கும் பயமாய் இருக்கு மச்சான்!

நாகே :- புதுச் சைக்கிள். கள்ளரும் கண் வைச்சிருப்பான்கள்! வீட்டிலை என்ன செய்யிறனி?

சிவ :- உள்ளுக்கை வைச்சுப் பூட்டுறனான். எண்டாலும் பயமாத்தான் மச்சான் இருக்கு!

நாகே :- நீதானே ஆசைப்பட்டு வாங்கினனி மச்சான்? என்னவோ பயந்து பயந்து சா! நான் என்ன செய்யிறது? *(சிரிக்கிறான்)*

## காட்சி - 4

***இடம் : சிவலிங்கம் வீடு.***

*(மோட்டச் சைக்கிள் வந்து நிற்கிறது)*

சிவ :- அப்பாடா வந்து சேந்தாச்சு!

மால :- என்ன அவ்வளவு களையா?

சிவ :- பின்னை? உந்தக் கிடங்கு முடங்குகளுக்கை விழுந்தெழும்பி வாறது, களை இல்லையா?

மால :- அப்ப மோட்டச் சைக்கிள் வாங்கியும் சுகமில்லை! களை தான்! *(சிரிக்கிறாள்)*

சிவ :- *(பயந்து)* அதோடை கள்ளருக்கும் பயமாயிருக்கு மாலதி!

மால :- எங்கை கள்ளர்?

சிவ :- உந்த வளமெல்லாம் கள்ளர்! எல்லாத்தையும் களவெடுக்கிறாங்கள்! காசு, நகை எண்டாப் பூட்டி பதுக்கி வைக்கலாம். இதை ஒண்டும் செய்யேலாமல் இருக்கு!

மால :- எனக்கும் நீங்கள் கந்தோராலை வந்து சேரும் வரையும், நெஞ்சிடியாத்தான் இருக்கிறது!

சிவ :- முளிச்சா, பிறகு நித்திரை குழம்பிப் போம்!

மால :- சும்மா இருக்க மாட்டாமல் வாங்கீட்டு, நிண்டு அவலப்படுறியள்! *(சிரித்து)* அப்ப வித்து விடுங்கோ!

சிவ :- என்ன விக்கவோ? இவ்வளவு ஆசைப்பட்டு வாங்கீட்டு....?

மால :- அப்ப பயப்பிடாமல், கவலைப்படாமல் இருங்கோ!

சிவ :- பெற்றோல் விலையுமல்லே கூடும்போல இருக்கு?

மால :- ஏன் அப்பிடிச் சொல்லூறியள்?

சிவ :- கப்பல் வரேல்லை எண்ட உடனை, பதின்மூண்டு ரூபாய் வித்த மண்ணண்ணையை ஐம்பது ரூபாய்க்கு உயத்தீட்டாங்கள் வியாபாரியள்! பெற்றோலும் வராட்டா? சைக்கிளைக் கட்டித் தூக்க வேண்டியதுதான்!



படிப்பகம்

padippakam



மால :- பாத்தியளா? உங்கடை நண்பன் சொன்ன இடத்துக்கு வந்துட்டியளே! கட்டித்தூக்குற இடத்துக்கு! *(சிரித்து)* அப்ப வித்து விடுங்கோ உதை!

சிவ :- சீ...... அது மட்டும் நடவாது, மாலதி!

மால :- அப்ப நித்திரை இல்லாமல் கிடவுங்கோவன்! *(சிரிக்கிறாள்)*

சிவ :- அது நான் கிடக்கிறன். நீ தண்ணியைத் தா! களைச்சுப்போனன்.

ரங் :- *(வந்து)* அப்பா வந்திட்டியளா? நானும் ஏறப்போறன்.

சசி :- *(வந்து)* அப்பா என்னையும் ஏத்திக் கொண்டு போங்கோ!

சிவ :- (எரிச்சலாக) மனிசன் களைச்சுப்போய் வந்து நிக்கிறான்! இப்பவா உங்களை ஏத்திக் கொண்டு போறது?

ரங் :- *(கெஞ்சி)* ஒருக்கா அப்பா!

சசி :- *(கெஞ்சி)* ஒரே ஒரு ரவுண்ட்!

மால :- பிள்ளையளும் ஓடாட்டா, உதை வாங்கித்தான் என்ன சுகம்? *(சிரித்து)* ஏத்திக்கொண்டு போங்கோ!

சிவ :- உந்த சென்றி வழியை நான் எங்கை ஓடுறது?

மால :- மெயின் றோட்டுக்குப் போகாமல், உங்கினை ஒழுங்கை வழியை ஓடீட்டு வாருங்கோவன்!

சிவ :- சரி தண்ணியைத்தா, போட்டு வருவம்.

மால :- போட்டு வந்து தண்ணியைக் குடியுங்கோ! போங்கோ! பிள்ளையள் ஆசைப்படுது!

சிவ :- சரி ரங்கன், சசி, ஏறுங்கோ. சரியா?

சசி :- ஓம் ஓம்

ரங் :- மோட்டச் சைக்கிள் ஓடப்போகுது! பிர்ர்ர்.....

*(ரங்கனும் சசியும் ஏறுகிறார்கள். மோட்டச் சைக்கிள் ஓடுகிறது.)*

## காட்சி - 5

***இடம் சிவலிங்கம் வீடு.***

*(தகரத்தில் தட்டும் சத்தம் கேட்கிறது)*

சிவ :- *(பதட்டப்பட்டு)* மாலதி! மாலதி! கேட்டிலை தட்டிச் சத்தம் கேக்குது!

மால :- என்னப்பா நடுச்சாமத்திலை எழுப்பூறியள்?

சிவ :- கேட்டிலை தட்டிச் சத்தம் கேக்குது, சாம நேரத்திலை!

மால :- எங்கை கேக்குது? *(தட்டும் சத்தம் கேட்கிறது)*

சிவ :- கேள் வடிவாக் கேள்! *(தட்டும் சத்தம் கேட்கிறது)*



படிப்பகம்

மால :- ஓம் அப்பா கேக்குது! ஆராயிருக்கும் இந்த நேரத்திலை?

சிவ :- *(பயந்து)* ஆரும் கள்ளரோ? மோட்டச் சைக்கிளுக்குத்தான் வந்திருக்கிறாங்களோ?

மால :- சீச்சீ அப்பிடி இராது.

சிவ :- ஆமி, பொலிசெண்டா, நேரை வருவங்கள் வீட்டை. இது கள்ளர்தான்!

மால :- தட்டட்டும், பேசாமல் படுங்கோ!

சிவ :- எனக்கு நித்திரை வராதப்பா! கேட் ஏறி வரப் போறாங்கள்! போய்ப் பாத்தரட்டே?

மால :- *(பயந்து)* பொறுங்கோ! கத்தியைக் கித்தியைக் காட்டப் போறாங்கள்!

சிவ :- உள்ளுக்கு வந்திடப்போறாங்கள்! போய்ப் பாத்தாறன்!

மால :- வெளீலை போகாதேங்கோ! உள்ளுக்கு நிண்டு பேசுங்கோ!

சிவ :- சரி. *(போகிறார். தட்டும் சத்தம் கேட்கிறது)* பயமாத்தான் கிடக்கு!.... ஆரது?.... ஆரது?

சிவ :- *(பார்த்து)* ஒருத்தரையும் காணேல்லை! வெளீலை போய்ப் பாப்பம். ஒருத்தரையும் காணேல்லை! *(தட்டும் சத்தம்)* இதென்ன சத்தம்? ஓ இதா? *(சிரித்துவிட்டு திரும்பி வருகிறான்)*

மால :- என்ன ஒண்டும் சொல்லாமல் சிரிக்கிறியள்?

சிவ :- காத்துக்கு வேலிக் கதியால் ஒண்டு முறிஞ்சு கிடந்து, காத்தடிக்க அடிக்க, படலேலை அடிக்குது. அதுதானப்பா இந்தச் சத்தம்! *(சிரிக்கிறான்)*

மால :- ஓ அதா? என்ன மாதிரிப் பயந்துட்டம்!

சிவ :- நித்திரையும் குழம்பிப் போச்சு!

மால :- இப்பிடி எத்தினை நாளைக்கு நித்திரை இல்லாமல் கிடக்கப்போறியள்? உங்களாலை என்ரை நித்திரையும் குழம்பூது! உந்த இளவை வித்துவிடுங்கோ!

சிவ :- சரி மாலதி, வித்துடுவம் இதை!

***இலங்கை வானொலி*** ***1997***

**ஆசை வந்தால் அவலங்களும் வரும்**

padippakam



# யாழ்ப்பாணமா? கொழும்பா?

## வானொலி நாடக நூல்

நூலாசிரியர் :- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை.

விமர்சிப்பாளர் :- **தம்பிஐயா தேவதாஸ்**

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக நாடகத் துறையில் உழைத்து வருபவர். 'நாடகம் எழுதுவது எப்படி?' என்ற நூல் உட்பட ஏழு நாடக நூல்களின் ஆசிரியர். இலங்கை வானொலி இதுவரை அவரது 275 நாடகங்களை ஒலிபரப்பியிருக்கிறது. இப்பொழுதும் இலங்கை வானொலியின் பல சேவைகளிலும் அவரது நாடகங்கள் ஒலிக்கின்றன.

அவர் எழுதிய ஏழு நாடகங்களும், நான்கு கட்டுரைகளும், ஒரு விமர்சனக் கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எல்லா நாடகங்களுமே இலங்கைத் தமிழரது இன்றைய வாழ்வைச் சித்திரிப்பவை. அவற்றில் மூன்றில் இடம் பெயர்வுக்குப் பிந்திய கால வாழ்வு வருகின்றது.

முதலாவது நாடகமான 'நிம்மதியே இல்லை'யில் சைக்கிள் களவெடுத்தவன் ஒருவன் படும் அவலம் சித்திரிக்கப்பட்டுள்ளது. தாமே குடிகாரராகப் பிழையான நடத்தை உள்ளவராக இருந்து கொண்டு, தங்கள் பிள்ளைகளைத் திருந்த முற்படுகின்ற சில தகப்பன்மாரது முரண்பாடான நடத்தையைச் சுட்டிக்காட்டுகின்றது இரண்டாவது நாடகமான 'வழிகாட்டி.'

மூன்றாவது 'பிரச்சினைகள்' நாடகம், எங்கள் பாடசாலைகளில் சாதாரணமாகக் காணப்படும் பிரச்சினைகளைக் கொண்டது. பாடசாலைகளில் நூறு பற்றாக்குறைகள். நூறு பிரச்சினைகள். அவை எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து, பாடசாலையை நடத்துகின்ற அதிபரதும் ஆசிரியர்களதும் திண்டாட்டங்கள் நாடகத்தில் நகைச் சுவையாகக் காட்டப்பட்டுள்ளன.

நாம் இளமையில் காணும் கனவுகளெல்லாம் நிஜமாவதில்லை. பல இடங்களில் நாம் விட்டுக் கொடுக்க வேண்டும். இறங்கியும் போக வேண்டும் என்று சொல்கிறது 'கனவும் நிஜமும்' நாடகம்.

இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்குச் சென்றுவிட்டு, யாழ்ப்பாணம் திரும்பி வந்த கணேசரின் குடும்பம், தங்களது உடைந்த வீட்டிலேயே குடியேறுகிறது. மழை வருகிறபொழுது, வீடே அல்லோல கல்லோலப் படுகின்றது. பல குடும்பங்கள் உண்மையாகவே அனுபவித்த துன்பங்களை, ஆசிரியர் நகைச்சுவை ததும்ப 'ஓடு' நாடகமாக்கியுள்ளார். அடையாள அட்டை, யாழ்ப்பாணமா? கொழும்பா? இரண்டும் எனக்கு மிகவும் பிடித்த நாடகங்கள். தனது அடையாள அட்டையை எங்கோ மாறி வைத்து விட்ட சபாரத்தினம், பதற்றப்பட்டு பயந்து குளறி, அதைத் தேடுகிறான். மற்றவர்களையும் கலக்கி அடிக்கிறான். இந்த நாடகத்தில் சபாரத்தினம் படும் அவலம், இந்த நாட்டில் தமிழினம் படும் அவலம்!



படிப்பகம்

padippakam



'யாழ்ப்பாணமா? கொழும்பா' நாடகத்தில் இரண்டு குடும்பங்கள் வருகின்றன. ஒரு குடும்பம் சாவகச்சேரியில் இருந்து நேரே வலிகாமத்திற்கு வந்து, தங்களது வீட்டில் குடியேறி வாழ்கின்றது. மற்ற குடும்பம் வலிகாமம் வரப் பயந்து, கொழும்பு சென்று, அங்கு பல அல்லல்கள் தொல்லைகளை அனுபவித்த பின்பு, யாழ்ப்பாணம் திரும்புகின்றது. கொழும்பு சென்ற குடும்பம் பட்ட துன்பங்கள், நேரடியாக வலிகாமம் வந்த குடும்பம் எதிர்கொண்ட பிரச்சினைகள், இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள் எல்லாம் நாடகத்தில் காட்டப்படுகின்றன. இந்நாடகத்தில் ஆசிரியர் நேரடியாகச் சொல்லும் விடயங்களுடன் பல விடயங்களைக் குறிப்பாகவும், பலவற்றைக் குறியீடாகவும் கூடக் கூறியுள்ளார். நாடகத்தின் பெயரே ஒரு குறியீடுதான்!

'மேடையில் நடிக்கக்கூடிய நாடகங்களாகவே தெரிவு செய்து வெளியிட்டுள்ளேன்' என்று கூறும் சுந்தரம்பிள்ளை, அப்படி நடிப்பவர்களுக்கு உதவுவதற்காக 'இந்த நாடகங்களை நடிப்பது எப்படி?' என்ற ஒரு கட்டுரையையும் சேர்த்துள்ளார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த மனப்பான்மையில். நாடகத்தின் முக்கிய அம்சங்கள், 'நாடகம் எழுதுவது எப்படி?' என்ற இரு கட்டுரைகளையும் இணைத்துள்ளார்.

தனது சாதனைகள் பற்றிக் கூறும் சுந்தரம்பிள்ளை இலங்கை வானொலி தமிழ் நாடக வளர்ச்சிக்குச் செய்த சேவை பற்றியும் இப்படிக் கூறுகின்றார்.

'இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை' தமிழ் நாடக வளர்ச்சிக்கு மகத்தான சேவை செய்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒவ்வொரு வாரமும் புதுப்புது நாடகங்களாக ஒலிபரப்புகின்றதே! அதை இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் எல்லோரும் கேட்டு மகிழ்கிறார்களே! வேறு எந்த நிறுவனம் தமிழ் மக்களுக்கு இவ்வளவு தொகையான நாடகங்களை வழங்கியிருக்கிறது? அந்தப் பணிக்கு நானும் என்னால் இயன்ற பங்களிப்பைச் செய்துள்ளேன் என்று பெருமைப்படுகிறேன்!'

இப்பொழுது இலங்கையில் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் 'நாடகமும் அரங்கியலும்' என்ற பாடம் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் அதைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான நூல்கள் இல்லை. மாணவர்கள் வெறும் குறிப்புக்களை வைத்தே நாடகம் படிக்கின்றனர். அந்தப் பாடத்தைக் கற்கின்ற மாணவர்களும், கற்பிக்கின்ற ஆசிரியர்களும் இந்த நூலை வாங்கிப் படித்துத் தாமும் பயன் பெறுவதுடன், ஆசிரியருக்கும் ஆதரவு கொடுத்தால், சுந்தரம்பிள்ளை, இது போன்ற இன்னும் பல நூல்களை நிச்சயம் எழுதுவார்!

***தினக்குரல்*** ***16.05.1999***

**இந்த விமர்சனத்தை எழுதிய திரு. தம்பிஜயா தேவதாசிற்கும், இதனைப் பிரசுரித்த தினக்குரல் பத்திரிகை நிறுவனத்திற்கும் அதன் ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச் செல்வனுக்கும் எனது நன்றிகள்!**



படிப்பகம்

padippakam



# நாடக விழா

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை 15.07.2001 அன்று, ஒரு நாடக விழாவை நடாத்தியது. அந்த விழாவில் நூலாசிரியர் தொலைபேசி மூலம் நிகழ்த்திய பேச்சின் சாராம்சம்:

இலங்கை வானொலி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பி வருகின்றது. ஒவ்வொரு வாரமும் புதுப்புது நாடகங்களை ஒலிபரப்புகின்றது. இவ்வளவு தொகையான நாடகங்களை, வேறு எந்த நிறுவனமும் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை.

இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களையே, இலங்கை வானொலி தயாரித்து ஒலிபரப்புகின்றது. அதனால் இலங்கையர் எல்லோரும் அதன் நாடகங்களை விரும்பிக் கேட்டு மகிழ்கின்றனர். இலங்கையர் எல்லோராலும் விரும்பப்படுகின்ற ஒரு இலக்கிய வடிவமாக இலங்கை வானொலி நாடகங்கள் திகழ்கின்றன!

சிறுகதை, நாவல், ரீ.வீ., சினிமா, சங்கீதம், நடனம் என்று எல்லாவற்றிற்கும் இந்தியாவை எதிர்பார்க்கின்ற இலங்கையர், நாடகம் என்றதும் இலங்கை வானொலியைத் திருப்புவது, இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைக்குப் பெருமை! அந்த இலக்கியப் பணிக்கு 22 ஆண்டுகள் பங்களிப்புச் செய்திருக்கின்றேன் – என்று நானும் பெருமைப்படுகின்றேன்!

நான் உலகின் தலைசிறந்த நாடகாசிரியர் பலரது பல நாடகங்களை வாசித்தவன் – படித்தவன். இருந்தாலும் இலங்கை வானொலி நாடகங்களைக் கேட்டே வானொலி நாடகம் எழுதப் பழகினேன். ஓம். இலங்கை வானொலி நாடகங்களைக் கேட்டால்தான், இலங்கை வானொலிக்கு நாடகங்கள் எழுத முடியும்!

நான் 1980ம் ஆண்டிலிருந்து வானொலி நாடகங்களை எழுதி வருகிறேன். இலங்கை வானொலி இதுவரை எனது 310 நாடகங்களை ஒலிபரப்பியிருக்கிறது. வானொலி நாடகம் எழுதும் போட்டிகளில் ஐந்து முறை முதலாம் பரிசு பெற்றிருக்கிறேன். அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் மூன்றுமுறை முதலாம் பரிசு. எல்லாப் புகழும் இலங்கை வானொலிக்கே! அதற்கு நாடகங்கள் எழுதிப் பழகியதால்தான், என்னால் இந்தச் சாதனையைச் செய்ய முடிந்த.

இந்த நாடக விழாவை எப்பொழுதோ நடத்தியிருக்க வேண்டும். சரி இப்பொழுதாவது நடத்துகிறார்களே. அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்! இலங்கை வானொலி தமிழ் மக்களுக்கு வழங்கி வருகின்ற நாடக விருத்தியினையும், தமிழ் நாடகத்துறை வளர்ச்சிக்கு ஆற்றி வருகின்ற சேவையையும் இந்த விழா எடுத்துக் கூறுகின்றது!

விழாவில் என்னையும் பேச அனுமதித்தமைக்கு நன்றிகள்!



படிப்பகம்

padippakam



# ஆசிரியர் எழுதிய நூல்கள்

## வானொலி நாடகங்கள்

01. கெட்டிக்காரர்கள் .................................................. 1988
02. முதலாம்பிள்ளை.................................................. 1990
(இவை இரண்டும் முறையே, இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுப்புக்களாகும்)
03. வீடு .................................................. 1997
04. யாழ்ப்பாணமா? கொழும்பா?.................................. 1998
05. எங்கள் நாடு.................................................. 2002

## மேடை நாடகங்கள்

01. பொலிடோலே கதி .................................................. 1976
02. பணமோ பணம் .................................................. 1977

## கட்டுரைகள்

01. நாடகம் எழுதுவது எப்படி? ................................ 1997

## உண்மைச் சம்பவங்கள் கொண்ட வரலாறு

01. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் ........... 1997

## இலக்கிய விமர்சனம்

01. இலக்கியக் கட்டுரைகள் ....................................... 1990
02. 'வீடற்றவன்' நாவலின் விளக்கமும் விமர்சனமும்.. 2001

## சிறுகதைத் தொகுப்பு

01. யாழ்ப்பாணம்.................................................. 1999

## நாவல்

01. அக்கரைச் சீமையில் .......................................... 1994
02. ஒரு காதலின் கதை .......................................... 2001

## அடுத்து வெளிவர இருக்கும் நூல்

01. வானொலி நாடகம் எழுதுவது எப்படி?



படிப்பகம்

padippakam



# நூலாசிரியர் பற்றி அறிஞர்களது கருத்துக்கள்

''அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 300க்கும் அதிகமான நாடகங்களை இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை ஒலிபரப்பி இருக்கிறது. அவரது நாடகங்களில் இந்த நாட்டு மண்ணின் மணம் கமழும். அவர் பல நாடக நூல்களையும் எழுதியிருக்கிறார். அராலியூர் சுந்தரம்பிள்ளை இலங்கை வானொலிக்குச் செய்த சேவை மகத்தானது! அதனால்தான் – அவரைக் கௌரவிப்பதற்காகவே அவரது 'பிறந்த மண்' நாடகத்தை இன்றைய நாடக விழாவில் மேடையேற்றுகின்றோம். அது யாழ்ப்பாணத்து மண்ணின் அவலங்களைச் சித்திரிக்கின்ற நாடகம்''.

*வானொலியில் 15.07.2001 அன்று, முருகேசு ரவீந்திரன்.*

''வானொலி நாடகம் என்றால் அராலியூர் சுந்தரம்பிள்ளையை எண்ணும் அளவிற்கு அதிகமாகவே நாடகங்களை எழுதியவர்!''

*திருமதி.அன்னலட்சுமி இராஜதுரை. எழுத்தாளர்.*

''அராலியூர் சுந்தரம்பிள்ளை அசுரவேக வானொலி நாடக எழுத்தாளர். மிகவும் குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதியவர்!''

*வானொலியில் திரு.எஸ்.எழில்வேந்தன்*

''ஆனால் 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படம் வெளியாவதற்கு முன்னரே அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை அவர்கள் 'வெள்ளம்' என்ற ஒரு வானொலி நாடகத்தை எழுதினார். மனிதனுக்கும் இயற்கைக்குமிடைப்பட்ட முரண்பாட்டை வானொலி நாடகமாக எழுதிய ஒரே எழுத்தாளர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையாகத்தான் இருப்பார் என்று நம்புகிறேன்.

''வெள்ளம்' ஒரு MASTER PIECE என்று ஆங்கிலத்தில் கூறலாம். அதாவது ஒரு மகோன்னத வானொலி இலக்கியப் படைப்பு''

''**வானொலியும் நானும்**'' என்ற நூலில் திரு.ஜோர்ஜ் சந்திரசேகரன்.

*இலங்கை வானொலி நாடகத் தயாரிப்பாளர்*

இலங்கை வானொலிக்கு அதிக அளவு நாடகங்களை எழுதிய, வானொலி நாடகப் பிரதியாக்க விற்பன்னர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை அவர்கள், வானொலி நாடகத் துறையில் ஜாம்பவான் எனில், பெரிதும் பொருந்தும்.

*'கூவாத குயில்கள்' நாடக நூலில்*
*அகளங்கன். எழுத்தாளர்.*

"Well known play wright and short story writer in Tamil Araliyoor N.Sundrampillai is easily the best Tamil Radio play wright in this country. The island 21.02.1990. ***K.S.Sivakumaran.***

(பிரபல நாடகாசிரியரும் சிறுகதை எழுத்தாளருமான அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, இந்த நாட்டிலுள்ள தலைசிறந்த வானொலி நாடகாசிரியர்!)

*திரு.**K.S**.சிவகுமாரன். இலக்கிய விமர்சகர்.*

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை

1. 330 வானொலி நாடகங்கள்
2. 26 மேடை நாடகங்கள்
3. 50 சிறுகதைகள்

## அவர் பெற்ற பரிசுகள்

1. இலங்கை வானொலியின் தமிழ் சேவை, 2000 ஆம் ஆண்டு நடத்திய பவள விழா இலக்கியப் போட்டிகளில், வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு.
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்பு செயல்திட்டப் பணியகமும் ஒருங்கிணைந்து, 1998 ஆம் ஆண்டு நடத்திய வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு.
3. நோர்வே நாட்டுத் 'தமிழ் நாதம்' வானொலி நிலையம் அகில உலக ரீதியில் நடத்திய, வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு.
4. நோர்வே நாட்டிலுள்ள 'மொல்டே தமிழ் கலை கலாச்சார மன்றம்' அகில உலக ரீதியில் நடத்திய, வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு.
5. கனடா ரொறன்ரோ பெருநகர் - ஆசிய வானொலியின் தமிழ் ஒலிபரப்புப் பிரிவினால், அகில உலக ரீதியில் நடத்தப்பட்ட வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாம் பரிசு.
6. இலங்கை வானொலி 1995 ஆம் ஆண்டு நடத்திய, நாடகம் எழுதும் போட்டியில் மூன்றாம் பரிசு.
7. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை 2001 ஆம் ஆண்டு நடத்திய, மெல்லிசை நாடக விழாவில், ஆசிரியரது 'பிறந்த மண்' நாடகத்தை வேண்டிப் பெற்று மேடையேற்றியது. அதுவும் ஆசிரியருக்கு ஒரு பரிசே.
8. வீரகேசரிப் பத்திரிகை 1997 ஆம் ஆண்டு நடத்திய, நாவல் எழுதும் போட்டியில் மூன்றாம் பரிசு.
9. வீரகேசரி பத்திரிகை 1987 ஆம் ஆண்டு நடத்திய சிறுகதை எழுதும் போட்டியில் மூன்றாம் பரிசு.
10. அவுஸ்ரேலியாவில் உள்ள 'விக்ரோரியா இலங்கைத் தமிழர் சங்கம்' நடத்திய, இலக்கியப் போட்டிகளில் சிறுகதைக்கான மூன்றாம் பரிசு.
11. கனடா நாட்டு 'தமிழர் செந்தாமரை' சஞ்சிகை அகில உலக ரீதியில் நடத்திய, சிறுகதை எழுதும் போட்டியில் ஆறுதல பரிசு.

பதிப்பு: ராம் பிறின்ரேஸ் யாழ்ப்பாணம்

படிப்பகம்